


Registered as a Newspaper at the G.P.O.

# நவமணி

නවමණි සති අන්ත | 1996 முதல் ஒளிரும் | NAVAMANI WEEKLY

மலர் 05 | ஜூன் 29 - ஜூலை 01 (29.06/01.07.2012) | ஹிஜ்ரி 1433 ஷஃபான் மாதம் பிறை 05 | பக்கங்கள் 12 | விலை 25/- | இதழ் 26




## கிழக்கு மாகாணசபைத் தேர்தல்

# இணைந்து செயற்பட முஸ்லிம் கட்சிகள் பேச்சு




## பிரதியமைச்சர் பஷீரின் நடவடிக்கைக்கு அமைப்புக்கள், பிரமுகர்கள் வரவேற்பு

கிழக்குத் தேர்தலில் இணைந்து செயலாற்றுவதற்கான முன்னெடுப்புக்களை முஸ்லிம் கட்சிகள் முன்னெடுத்து வருகின்றன. முஸ்லிம் கட்சிகள் ஒன்றிணைந்து முஸ்லிம் முதலமைச்சர் ஒருவரை கிழக்கு மண்ணில் பெற்றுக் கொள்ள வேண்டும் என்பதில் முஸ்லிம் கட்சிகள் உறுதியாகவுள்ளன.

ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ், அகில இலங்கை முஸ்லிம் காங்கிரஸ், தேசிய காங்கிரஸ் ஆகிய கட்சிகள் இதுகுறித்து தமது ஆதரவினை வெளிக்காட்டியுள்ளன. ஏனைய கட்சிகளுடன் பேச இணக்கப்பாட்டுக்கு வருவதற்கும் இக்கட்சிகள் தயாராக உள்ளதாகவும் அறிவித்துள்ளன.

இதேவேளை இலங்கை முஸ்லிம் அரசியல் கட்சிகளுக்கிடையில் ஒற்றுமைப்பட்ட செயலாற்றலை ஏற்படுத்தும் வகையில் மு.கா. தவிசாளரும், பிரதியமைச்சருமான பஷீர் சேகு தாவூத் முயற்சிகளை மேற்கொண்டு வருகிறார்.

இதன் முதல் முயற்சியாக கடந்த புதனிரவு அகில இலங்கை முஸ்லிம் காங்கிரஸ் தலைவரும், அமைச்சருமான றிஷாத் பதியுதீனை பிரதியமைச்சர் பஷீர் சந்தித்து விரிவாகக் கலந்துரையாடியுள்ளார். அமைச்சரின் வீட்டில் இடம்பெற்ற இப்பேச்சுவார்த்தையில் பல்வேறு விடயங்கள் குறித்து ஆராயப்பட்டதாகவும், மேலும் பல சுற்றுப் பேச்சுக்களை நடாத்தத் திட்டமிட்டுள்ளதாகவும் பஷீர் சேகுதாவூத் நவமணிக்குத் தெரிவித்தார்.

அகில இலங்கை முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் அமைச்சர் றிஷாத் பதியுதீன் இது பற்றிக் கருத்து வெளியிடுகையில்

11ஆம் பக்கம் பார்க்க...

## என்ன கூறுகிறார்?



முன்னாள் பாராளுமன்றச் செயலாளர் நாயகம் ஷாம் விஜயசிங்கவின் 91வது பிறந்த தினத்தில் பல்வேறு அரசியல் கட்சித் தலைவர்களும் பிரமுகர்களும் அவரின் இல்லம் சென்று அவரை வாழ்த்தினர்.

எவ்வித பாதுகாப்புக் கெடுபிடிகளுமின்றி திடீரென்று ஷாம் விஜயசிங்கவின் இல்லம் சென்ற ஜனாதிபதி

11ஆம் பக்கம் பார்க்க...

## கைகுலுக்கும் இராணுவம் கட்டுப்படுமா?



எகிப்தின் புதிய ஜனாதிபதி மொஹமட் முர்ஷி படைத்தளபதிகளுடன் சம்பிரதாய பூர்வமாக கைகுலுக்குவதையும், இன, மத, மொழி பேதமற்ற ஐக்கிய அரசு ஒன்றை நிறுவுவதற்கு ஒத்துழைப்பு வழங்குமாறு சிறுபான்மையினர், கிறிஸ்தவர்கள், பெண்கள், லிபரல் வாதிகளிடம் வேண்டுகோள் விடுத்துள்ள ஜனாதிபதி, கொப்ட் கிறிஸ்தவ தலைவருடன் கைகுலுக்குவதையும் காணலாம்.

## கிழக்கு, சப்ரகமுவ, வட மத்திய மாகாண சபைகள் கலைப்பு



## செப்டெம்பர் 08இல் தேர்தல்

(ஸிராஜ் எம். ஷாஜஹான்)

கலைக்கப்பட்ட மூன்று மாகாணங்களுக்குமான தேர்தல் செப்டெம்பர் இரண்டாம் வாரத்தில் இடம்பெறலாமென தேர்தல் திணைக்கள வட்டாரங்கள் தெரிவித்தன.

கிழக்கு, வட மத்திய, சப்ரகமுவ மாகாண சபைகள் கடந்த 27ஆம் திகதி நள்ளிரவுடன் கலைக்கப்பட்டன. மாகாண ஆளுநர்கள் மாகாண சபை கலைக்கப்படுவதற்கான பத்திரத்தில் கையொப்பம் இட்டதைத் தொடர்ந்து இம்மாகாண சபைகளின் பதவிக் காலம் முடிவுக்கு வந்துள்ளது.

தேர்தல் ஆணையாளர் மஹிந்த தேசப்பிரியவும் மாகாண சபைகள் கலைக்கப்பட்டுள்ளதாக உத்தியோக பூர்வமாக அறிவித்துள்ளார். இதனடிப்படையில் வேட்பு மனுக்களை ஏற்பதற்கான திகதி அடுத்து வரும் ஒருவாரகாலத்துக்குள் அறிவிக்கப்படுமென எதிர்பார்க்கப்படுகிறது.

கலைக்கப்பட்ட மூன்று மாகாண

11ஆம் பக்கம் பார்க்க...

**கடந்த தேர்தல் முடிவு**

**வட மத்திய மாகாணசபை**

- ★ ஐ.ம.சு. முன்னணி - 3.07.457 (56.37) - 20 ஆசனங்கள்
- ★ ஐ.தே.க. - 2.05.284 (37.64) - 12 ஆசனங்கள்
- ★ ஜே.வி.பி - 26.738 (4.90) - 1 ஆசனம்

**சப்ரகமுவ மாகாணசபை**

- ★ ஐ.ம.சு. முன்னணி 4,72,789 - 28 ஆசனங்கள்
- ★ ஐ.தே.க. 3,46,321 - 17 ஆசனங்கள்
- ★ ஜே.வி.பி. 19068 - 2 ஆசனங்கள்

**கிழக்கு மாகாணசபை**

- ★ ஐ.ம.சு. முன்னணி 3,08,226 - 20 ஆசனங்கள்
- ★ ஐ.தே.க. 2,50732 - 15 ஆசனங்கள்
- ★ ஜே.வி.பி 9390 - 1 ஆசனம்
- ★ ஈ.பி.ஆர். எல்.எப். வரதர் - 7714 - 1 ஆசனம்

### முந்திச் சொன்னோம்

கிழக்கு, வடமத்திய, சப்ரகமுவ மாகாண சபைகள் 26ஆம் திகதி நள்ளிரவு கலைப்படும் என்றும், செப்டெம்பர் 8இல் தேர்தல் நடாத்தப்படும் என்றும் கடந்த வார நவமணி முந்திக் கொண்டு செய்தி வெளியிட்டிருந்தது குறிப்பிடத்தக்கது.

## இப்படியும் நடக்கிறது

### சின்ன மகனை தரையில் இருமுறை அடித்த தந்தை

தனது 7 வயது மகனை இரு தடவைகள் தரையில் தூக்கியடித்த 36 வயது தந்தையொருவரின் பாதகச் செயலால் தெனியாய, பெரலிய வத்தென்னை பிரதேச மக்கள் அதிர்ச்சியடைந்துள்ளனர்.

பாதகச் செயலை செய்த தந்தை

11ஆம் பக்கம் பார்க்க...

## குழந்தைகளுக்குப் பாலில்லை! விவசாயிகளுக்கு நீரில்லை! பெற்றோர்களுக்கு பணமில்லை!


### காணி அமைச்சர் ஜனக கவலை



எமது மக்களின் ஜீவனோபாயம் விவசாயம் இன்று அவர்களுக்கு விவசாயம் செய்ய நீரில்லை, மக்களின் வாழ்க்கை அந்தரத்தில். அவர்களின் குழந்தைகள் பால் கேட்டு அலறும் போது பால்மா வாங்குவதற்கு

11ஆம் பக்கம் பார்க்க...

## கடந்த 10 ஆண்டுகளில் சனத்தொகையில் வீழ்ச்சி



இலங்கையின் சனத்தொகை வளர்ச்சி கடந்த பத்தாண்டுகளில் 0.72 வீதத்தினால் வீழ்ச்சி கண்டுள்ளதாக அண்மையில் நடாத்தப்பட்ட குடிசன மதிப்பீட்டின்போது தெரிய வந்துள்ளது.

அண்மைய குடிசன மதிப்பீட்டின்

11ஆம் பக்கம் பார்க்க...

**நவமணி**

**FREE NEWS ALERT**

தமிழ், ஆங்கிலம் ஆகிய இரு மொழிகளிலும்

உங்கள் கையடக்கத் தொலைபேசியில் 'நவமணி' செய்திகளை உடனுக்குடன் இலவசமாக இன்றே பெற்றிடுங்கள்

தமிழ் — Type Follow NavamaniTamil and Send to 40404

English — Type Follow NavamaniLK and Send to 40404

Website: www.navamani.lk
Email: freelankamedia@gmail.com
Facebook: facebook.com/navamani.lk

## எந்தக் கட்சிகளுடனும் பேசுவதற்கு தயார்!

### அமைச்சர் றிஷாத்



(இர்ஷாத் றஹ்மதுல்லா)

கிழக்கில் முஸ்லிம் முதலமைச்சர் ஒருவரை பெற்றுக் கொள்வதற்கு, எக்கட்சிகளுடனும் பேசுவதற்கு தமது

11ஆம் பக்கம் பார்க்க...

### ஹஜ் 2012

## பொறுப்பான அமைச்சர் நானே: பௌசி விளக்கம்



ஹஜ்ஜுக்குப் பொறுப்பான அமைச்சர் நானே. அனைத்துப் பணிகளும் என்னால் முன்னெடுக்கப்படும். எவருக்கும் பதிலளித்துக் கொண்டிருக்க

11ஆம் பக்கம் பார்க்க...

2ஆம் பக்கத்தில் காதரின் பேட்டி

### இலங்கைக்கு முதலில் வந்தவர் விஜயன் அல்ல

## புதிதாக ஆராய்ச்சியில் கண்டுபிடிக்கப்பட்ட எலும்புக்கூடுகள் இதனை பொய்ப்பித்துள்ளன



இலங்கைக்கு முதலில் வந்தவர் விஜயன் என்ற கூற்றை 38,000 வருடங்களுக்கு முன் புளத்சிங்களையிலும் சப்ரகமுவையிலும் மனித எலும்புக்கூடுகள் கண்டுபிடிக்கப்பட்டதும் பொய்ப்பித்துள்ளது. எனவே, இந்த நாட்டுக்கு யார் சொந்தக்காரர் என்

### 'மாதுளுவாவே சோபித தேரர் முஸ்லிம்கள் மத்தியில் உரை'

பது பிரச்சினையல்ல இது இங்கு வாழும் அனைவருக்கும் சொந்தமான நாடு என கோட்டே விஹாரை அதிபதி மாதுளுவாவ சோபித தேரர் கூறினார்.

அகில இலங்கை முஸ்லிம் லீக் வாலிப முன்னணிகளின் சம்மேளனத்தின் ஏற்பாட்டில் உருவாக்கப்பட்ட முஸ்லிம் வாலிபர் ஒன்றியத்தின் அங்குரார்ப்பணக் கூட்டத்தில் பிரதம பேச்சாளராகக்கலந்துகொண்டுரையாற்றுகையிலே அவர் இதனைத் தெரிவித்தார்.

கொழும்பு - 10 முஸ்லிம் பெண்கள் கல்வி மையத்தில் ஒன்றியத்தின் தலைவர் மும்தாஸ் றஹ்மான் தலைமையில்

11ஆம் பக்கம் பார்க்க...

### முஸ்லிம் மீடியா போரத்தின் வருடாந்த மாநாட்டில்

## ராஜீவ்காந்தி விருதினை வென்ற இந்திய பேச்சாளர் பாத்திமா முஸப்பர் விசேட உரை



2007ம் ஆண்டுக்கான ராஜீவ் காந்தி விருது வென்றவரும் இந்திய முஸ்லிம் லீக்கின் பொதுச் செயலாளருமான திருமதி பாத்திமா முஸப்பர் நான்கு நாள் விஜயமொன்றினை மேற்கொண்டு இலங்கை வருகிறார்.

ஸ்ரீ லங்கா முஸ்லிம் மீடியா போரத்தின் அழைப்பில் இலங்கை வரும் பாத்திமா முஸப்பர் 30ம் திகதி சனிக்கிழமை இடம்பெறவுள்ள அதன் வருடாந்த மாநாட்டில் இலங்கை இந்திய ஊடகங்களும் முஸ்லிம்களும் என்ற தலைப்பில் சிறப்புரையாற்றவுள்ளார்.

மகாநாடு கொழும்பு

11ஆம் பக்கம் பார்க்க...

## புதினத்தார்



உலக முஸ்லிம் சகோதரத்துவத்தையே பறைசாற்றுகின்ற ஹஜ் விடயத்துல கடந்த சில வருடங்களாக எங்கட நாட்டு முஸ்லிம் அரசியல் தலைவர்களிடையே சகோதரத்துவத்துக்கு வேட்டுத்தான் விழுந்துகொண்டிருக்கிறது பாருங்கோ!



ஏ.எம். இமாம் முஹம்மத் தலைமையில் நடைபெறும்...

ஏற்பாட்டுக் குழு: 'நாம் இஸ்லாமிய ஊழியர்கள்'
தொடர்புகளுக்கு: 0777 80 20 69

**கிண்ணியாவில் மாபெரும் இஸ்லாமிய எழுச்சி மாநாடு**

ஒரே கொடியின் கீழ் ஒன்றுபடுவோம் நாம் மனிதர்கள்! நாம் இலங்கையர்கள்! நாம் இஸ்லாமியர்கள்!
இன, சமய, குல, அரசியல் பேதங்களை மறந்து நாட்டை அபிவிருத்திப் பாதைக்கு கட்டியெழுப்ப மனிதாபிமானத்தை விதைப்போம்
வருக... வருக... என அன்புடன் அழைக்கின்றோம்
இஸ்லாமிய இளைஞனே விழித்தெழு! முஹம்மது நபி (ஸல்) அவர்கள் சுமந்த கலிமாவின் கொடியை உளத்தூய்மையுடன் சுமக்க முன்வாரீர்
காலம்: 14.07.2012 (சனிக்கிழமை) இடம்: நூராணியா பொது விளையாட்டு மைதானம், பைசல் நகர், கிண்ணியா

# பௌசியுடன் இணைந்து செயற்படுவதற்கு தயார்

## பிரதியமைச்சர் காதர் தெரிவிப்பு

### 'எங்கு வேண்டுமானாலும் பேசுவோம்', மஷூரா மூலம் தீர்மானங்களை எடுப்போம்'



இந்த ஆண்டின் ஹஜ் பணிகளை நான் குழப்பியடிக்கவில்லை. நேர்மையாகவும் சீராகவும் சிறப்பாகவும் இந்த முறை இப்பணிகள் மேற்கொள்ளப்பட வேண்டுமென்பதில் நான் உறுதியாக இருக்கின்றேன். இணைத் தலைவரென்ற வகையில் சிரேஷ்ட அமைச்சர் பௌஸி மற்றும் பணிப்பாளர் நவவியுடன் இணைந்து பணியாற்றுவதற்கு நான் தயாராக இருக்கின்றேன்.

இந்த ஆண்டின் ஹஜ் கடமை ஏற்பாடுகள் குறித்து ஓரிடத்தில் ஒன்றுகூடி சகல விடயங்கள் குறித்தும் ஆராய்வோம். முக்கிய தீர்மானங்களையும் மேற்கொள்வோம். அல்லாஹ்வுக்கு பொருத்தமாக எமது பணிகளை முன்னெடுப்போம். இறுதிக் கடமையாம் ஹஜ் கடமையை எந்தவித பிரச்சினைகளுமின்றி நிறைவேற்றிட ஆவன அனைத்தையும் செய்வோம்.

இதற்காக வேண்டி அமைச்சர் பௌஸியுடன் இணைந்து பணியாற்ற நான் தயாராகவே இருக்கின்றேன். அவர் தான் என்னை ஒதுக்குகிறார். ஒரு கப்பலுக்கு இரண்டு மாலுமிகள் தேவையில்லை என்கிறார். மத விவகார அமைச்சர் என்ற வகையில் பிரதமர் தி.மு. ஜயரத்ன என்னையும் அமைச்சர் பௌசியையும் நியமித்துள்ள நிலையில் ஹஜ் பணிகளை இணைந்தே நிறைவேற்ற வேண்டும். இதற்கு பௌஸி உடன்பட வேண்டும். இன்றேல் அவர் அல்லாஹ்விடம் பதில் சொல்லியாக வேண்டும்.

> சமூகத்தின் ஹஜ் பணிகளின் நலன் கருதி மஷூரா அடிப்படையில் முடிவுகளை எடுப்போம். அதற்காக அமைச்சர் பௌஸியின் வீட்டுக்கு வரவும் தயாராக உள்ளேன் - காதர் எம்.பி.

இந்நாட்டின் பிரதமர் ஹஜ் பணிகளை நிறைவேற்றும்படி என்னையும் அமைச்சர் பௌசியையும் கேட்டுள்ளார். அதற்காக உத்தியோகபூர்வ கடிதங்களையும் தந்துள்ளார். இக்கடிதத்தை நான் பொறுப்பேற்றுள்ளேன். எனினும் அமைச்சர் பௌஸி பெறவில்லை. இந்த வகையில் ஹஜ் பணிகளை மேற்கொள்ளக் கூடிய அனுமதி எனக்கு மாத்திரமே உள்ளது. அவர் கடிதத்தைப் பெற்றால் மாத்திரமே ஹஜ் ஏற்பாடுகள் குறித்து முடிவுகளை எடுக்க முடியும். அத்தோடு தீர்மானங்களை மேற்கொள்ளும் போது இணைத் தலைவர்கள் என்ற வகையில் மஷூரா அடிப்படையிலேயே முடிவுகள் எடுக்கப்பட வேண்டும். முஸ்லிம் சமய பண்பாட்டலுவல்கள் திணைக்களப் பணிப்பாளர் நிர்வாக விடயங்கள் குறித்து நன்கு பரிச்சயம் உள்ளவர் என்ற வகையில் பிரதமரின் பணிப்புரைக்கமைய பணிகளை முன்னெடுக்க வேண்டும். அதுதான் தற்போதைக்கு ஏற்புடையதாகும்.

பிரதமரின் உத்தியோகபூர்வ கடிதத்தைப் பெற்ற என்னிடமே ஹஜ் ஏற்பாடுகள் குறித்து பணிப்பாளர் கலந்துரையாட வேண்டும். அமைச்சர் பௌஸி கடிதத்தைப் பொறுப்பெடுத்தால் மாத்திரமே நிர்வாக ரீதியாக அவரோடு தொடர்பு வைத்துக் கொள்ளவேண்டும். கடந்த ஆண்டின் (2011) கடிதத்தை வைத்துக் கொண்டு இந்த ஆண்டின் ஹஜ் பணிகளை நிறைவேற்ற முடியாது. கடந்த ஆண்டின் தலைமைப் பதவியை இரத்துச் செய்தே இந்த ஆண்டுக்கான நியமனம் பிரதமரால் வழங்கப்பட்டுள்ளது. பணிப்பாளர் இந்த நிர்வாகச் சிக்கல் குறித்து ஆராய்ந்து முக்கிய முடிவுகளுக்கு வரவேண்டும்.

உத்தியோகபூர்வ கடிதத்தைப் பெற்றுக் கொண்ட என்னைப் பணிப்பாளர் நிராகரிக்கக் கூடாது. அத்தோடு உத்தியோகபூர்வ கடிதம் பெறாத அமைச்சர் பௌஸியின் ஹஜ் ஏற்பாடுகள் குறித்த பணிப்புரைகளை பணிப்பாளர் நடைமுறைப்படுத்தவும் கூடாது. இந்தச் சிக்கல் நிலையை பணிப்பாளர் புரிந்து கொள்ள வேண்டும்.

எது எப்படியிருப்பினும் தற்போதுள்ள நிலையில் சிரேஷ்ட அமைச்சர் என்ற வகையில் பௌஸியுடன் இணைந்து செயற்பட நான் தயாராகவுள்ளேன். சமூகத்தின் ஹஜ் பணிகளின் நலன் கருதி மஷூரா அடிப்படையில் முடிவுகளை எடுப்போம். அதற்காக அமைச்சர் பௌஸியின் வீட்டுக்கு வரவும் தயாராக உள்ளேன். எங்கு வேண்டுமானாலும் நானும் பௌஸியும் நவவியும் ஓரிடத்தில் அமர்ந்து முடிவுகளை எடுப்போம். முகவர்களுக்கு அது பற்றி அறிவிப்போம். சவூதி அரேபிய அதிகாரிகளுடன் தொடர்புகளை ஏற்படுத்துவோம். மோஷடிகளற்ற, நேர்மையான ஹஜ் பயணத்துக்கான நடவடிக்கைகளை முன்னெடுப்போம். பொறுப்போடு நடக்க வேண்டும்.

அமைச்சர் பௌஸி தனிப்பட்ட முடிவுகளை எடுக்கக் கூடாது. இப்போது கூட அவர் அவ்வாறுதான் செயற்பட்டு வருகிறார். இணைத் தலைவரென்ற வகையில் என்னிடம் எதுவும் கேட்பதில்லை. தான் நினைத்தபடி அனைத்தையும் செய்கிறார். இதனை அவர் தவிர்த்துக் கொள்ளவேண்டும். என்னையும் மதித்துச் செயற்பட வேண்டும். ஒன்று சேர்ந்து பணியாற்ற முன்வர வேண்டும்.

#### ஹஜ்ஜால் சம்பாதிக்க வேண்டியதில்லை

புனித ஹஜ் கடமையை வைத்துக் கொண்டு சம்பாதிக்க வேண்டிய தேவை எனக்குக் கிடையாது. இறைவன் வேண்டியளவு சொத்துக்களை, வளங்களை எனக்குத் தந்துள்ளான். நேர்மையான முறையில் மோசடிகளற்றவாறு ஹஜ் பணிகளை முன்னெடுக்கும் வகையிலேயே நானும் முன்வந்துள்ளேன். எனக்கும் சந்தர்ப்பம் தாருங்கள்.

முன்னாள் அமைச்சர்களான எம்.எச்.எம். அஷ்ரப், எம்.எச் முஹம்மத், ஏ.எச்.எம். அஸ்வர், ரவூப் ஹக்கீம் ஆகியோரும் ஆளுனர் அலவி மௌலானாவும் ஹஜ் ஏற்பாடுகளுக்குப் பொறுப்பாக இருந்து சிறப்புப் பணியாற்றினார்கள். எனக்கும் ஒரு சந்தர்ப்பத்தினைத் தாருங்கள். அதனை நான் சிறப்பாகச் செய்து காட்டுகின்றேன்.

இணைத் தலைவர் என்ற வகையில் அண்மையில் ஹஜ் முகவர்களுக்கான கூட்டமொன்றினை ஏற்பாடு செய்திருந்தேன். அங்கீகரிக்கப்பட்ட 99 முகவர்களுள் 60 முகவர்கள் கூட்டத்துக்கு வந்திருந்தனர். பணிப்பாளர் நவவியும் சமூகமளித்திருந்தார். 15 முகவர் நிலைய உரிமையாளர்கள் வர முடியாதென தொலைபேசி மூலம் என்னிடம் தெரிவித்தனர். முகவர் நிலைய உரிமையாளர்கள் என்னோடு ஒத்துழைத்துச் செயற்பட தயாராகவே உள்ளனர். அவர்களோடு இணைந்து செயற்பட நானும் தயாராகவுள்ளேன்.

#### கோட்டாவை அதிகரிக்க நடவடிக்கை

இந்த ஆண்டு ஹஜ் கடமைக்கான கோட்டாவினை 6000ஆக அதிகரித்துத் தருமாறு சவூதி அரேபிய அரசிடம் வேண்டுகோள் விடுத்துள்ளேன். பிரதமர் தி.மு. ஜயரத்ன ஹஜ் கோட்டா அதிகரிப்பு தொடர்பாக சவூதி ஹஜ் விவகார அமைச்சருக்கு எழுதிய கடிதத்தை அமைச்சரின் செயலாளரிடம் ஒப்படைத்தேன். அண்மையில் சவூதி சென்றிருந்த நான் இக்கடிதத்தை ஒப்படைத்ததுடன் ஒரு மணி நேரம் ஹஜ் விவகாரம் தொடர்பாக கலந்துரையாடினேன்.

இதன் போது ஹஜ் கோட்டாவினை முடியுமான அளவு அதிகரித்துத் தருவதாக ஹஜ் விவகார அமைச்சின் செயலாளர் என்னிடம் உறுதியளித்தார். கோட்டாவினை அதிகரித்துத் தருவார்கள் என்ற நம்பிக்கை எனக்குள்ளது. கடந்த ஆண்டும் கோட்டாவினை ஆயிரமாக அதிகரிப்பதில் பெரும் பங்காற்றினேன். இந்த முறையும் தனியாக கோட்டா அதிகரிப்புக்குப் போராடி வருகின்றேன். எனது போராட்டம் வெற்றியீட்டும் அனைத்து ஹாஜிகளும் கடமைக்குச் செல்ல வேண்டும் அதற்காக அனைத்தையும் செய்வேன்.

#### ஹஜ் குழுவின் பொறுப்புதாரி நானே

இந்நாட்டு மத விவகார அமைச்சின் கீழேயே முஸ்லிம் பண்பாட்டலுவல்கள் திணைக்களமும் உள்ளது. இந்த அமைச்சுக்கு பிரதமர் தி.மு. ஜயரத்னவே பொறுப்பானவர். இந்த வகையில் அவர் ஹஜ் குழுவுக்கு என்னையும் சிரேஷ்ட அமைச்சர் பௌசியையும் நியமித்துள்ளார். என்னையும் அமைச்சர் பௌசியையும் இணைத் தலைவர்களாக நியமித்துள்ளார். இதற்கான கடிதத்தை நான் பெற்றுள்ளேன். சிரேஷ்ட அமைச்சர் பௌஸி பிரதமரின் கடிதத்தை இன்னும் பெற்றுக்கொள்ளவில்லை. இணைத் தலைமைக்கான கடிதத்தை பெறாத நிலையில் அவர் எப்படி ஹஜ் கடமைகளை மேற்கொள்ள முடியும். கடந்த ஆண்டு வழங்கப்பட்ட ஹஜ் குழுத் தலைவர் பதவியை வைத்துக் கொண்டு இந்த ஆண்டின் ஹஜ் பணிகளை மேற்கொள்ள முடியாது. இது நிர்வாக ரீதியில் பிழையான செயற்பாடாகும்.

பிரதமரிடமிருந்து இணைத் தலைமைக்கான உத்தியோகபூர்வ கடிதத்தை பெற்றுள்ள எனக்கு மாத்திரமே தற்போதைக்கு ஹஜ் பணிகளை முன்னெடுக்க முடியும். இதனை அமைச்சர் பௌஸி புரிந்து கொள்ள வேண்டும். முஸ்லிம் சமய பண்பாட்டலுவல்கள் திணைக்களப் பணிப்பாளருக்குக் கூட இந்த விடயம் நன்கு தெரியும். அவர் தனக்குள்ள அதிகாரத்தின்படி செயற்பட வேண்டும். அமைச்சர்கள் சொற்படி எந்த நேரமும் செயற்படக் கூடாது. நிர்வாகச் சிக்கல்கள் ஏற்படும்போது அமைச்சர்களுக்குக் கூட அதனைப் புரியவைக்க வேண்டும். இது அவரது கடமை. இன்றேல் நிர்வாகச் சிக்கல்களுக்கு அவர் முகம் கொடுக்க நேரிடும்.

அமைச்சர் பௌஸி இணைத் தலைமை கடிதத்தை பொறுப்பெடுக்காததால் ஹஜ் பணிகளை மேற்கொள்ள அவருக்கு அனுமதி கிடையாதென்பதை முஸ்லிம் சமய பண்பாட்டலுவல்கள் திணைக்களம் சவூதி அதிகாரிகளுக்கு கடிதம் மூலம் தெரியப்படுத்த வேண்டும். அதன் பின் ஹஜ் பணிகள் தொடர்பான பொறுப்புதாரி என்ற வகையில் என்னால் மேற்கொள்ள முடியும்.

இணைத் தலைவர் பதவிக்கான உத்தியோகபூர்வ கடிதம் என்னிடமுள்ளது. ஆனால் அமைச்சர் பௌசியிடம் அந்தக் கடிதம் கிடையாது. இணைத் தலைமைக்கான கடிதத்தை அவர் காட்டட்டும் பார்க்கலாம் என்று சவால் விடுகிறேன் அவருக்கு.

#### ஒரு கப்பலுக்கு எத்தனை மாலுமிகளும் இருக்கலாம்

ஒரு கப்பலுக்கு இரு மாலுமிகள் இருக்க முடியாது என அமைச்சரொருவர் தெரிவித்துள்ளார். ஹஜ் குழுவுக்கு இணைத் தலைவர்கள் இருக்க முடியாது என்பதைக் குறித்தே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார். ஒரு கப்பலுக்கு எத்தனை மாலுமிகளும் இருக்கலாம். மாலுமிகளின் எண்ணிக்கையில் பிரச்சினை கிடையாது. கப்பல் பயணம் சிறப்பாக நடந்தால் அதுவே போதுமானது. அது போன்றே ஹஜ் கடமை பணிகளும். ஹஜ் குழுவுக்கு எத்தனை இணைத் தலைவர்களும் இருக்கலாம். அது பிரச்சினையே அல்ல. ஆனால் ஹஜ் கடமை சீராக, சிறப்பாக அமைய வேண்டும் என்பதே முக்கியமானது.

**ஸிராஜ் எம். சாஜஹான்**

என்னைப் பொறுத்தவரை இணைத் தலைமை என்பது பிரச்சினையே அல்ல. எத்தனை பேருடனும் இணைந்து பணியாற்ற நான் தயார். உரிய பணிகளை சீராகவும் சிறப்பாகவும் நேர்மையாகவும் செய்தால் எவருக்கும் பயப்பட வேண்டிய அவசியம் கிடையாது. அல்லாஹ்வுடைய ஒற்றுமையின் பணி. இந்தப் பணிகளை ஒன்றிணைந்து மஷூரா அடிப்படையில் செய்வதே ஏற்றமானது. அல்லாஹ்வும் அதனை அங்கீகரிப்பான். அமைச்சர் பௌஸி தானே தலைவர் என அனைத்தையும் அள்ளிப் போட்டுக்கொண்டு பணியாற்றி வருகிறார். சிரேஷ்ட அமைச்சரென்ற வகையில் இது அவருக்கு ஏற்றமானதல்ல. அடுத்தவர்களையும் இணைத்துக் கொண்டு பணியாற்ற அவர் முன்வரவேண்டும். அதன் மூலம் அவரது புகழும் உயரும்.

#### முன்கூட்டியே பணம் அறவிட வேண்டாம்

ஹஜ் கடமைக்காகச் செல்வோரிடமிருந்து முன்கூட்டியே பணம் பெற்றுக் கொள்வதை நான் எதிர்க்கின்றேன். முற்பணமாக 25,000 ரூபாவினைப் பெற்றுள்ளார்கள். இதனை திணைக்களம் வாங்கியிருக்கக்கூடாது. பதிவினை உறுதிப்படுத்திக் கொள்ளவே பணம் வாங்கியதாக பணிப்பாளர் குறிப்பிடுகின்றார். எனினும் இவ்வாறு முற்பணம் பெற்றதன் மூலம் விண்ணப்பித்த அத்தனை பேரின் மனதிலும் தான் ஹஜ் கடமைக்குச் செல்வேன் என்ற எண்ணம் தோன்றும். தமக்கு இந்த ஆண்டு வாய்ப்புக் கிடைக்காத போது இவர்கள் மனம் வருந்துவார்கள். ஒரு விடயத்தை செய்யும்போது முன்கூட்டியே சிந்தித்து செயலாற்ற வேண்டும்.

> இதேவேளை, 2011ஆம் ஆண்டு ஹஜ் கடமையின்போது ஏற்பட்டதாகக் கூறப்படும் மோஷடிகள், குறைபாடுகள் இந்த ஆண்டு ஏற்படாது இருக்க முஸ்லிம் கலாச்சாரத் திணைக்களம் உரிய நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும். அது தொடர்பான ஆறு அம்சங்களை நான் முன்வைத்துள்ளேன்.
>
> 1. விஸா விற்பனை செய்வதை எந்த வகையிலும் தவிர்த்துக்கொள்ள வேண்டும். தேவையேற்படின் மௌலவிமார்கள், முகவர் நிலைய சமையற்காரர்களுக்கு அதனை இலவசமாக பெற்றுக் கொடுக்கமுடியும்.
> 2. இம்முறை ஹஜ் முகவர்களுக்கு அனுமதிப் பத்திரம் வழங்கும்போது குறைந்தளவு 40 பேர் அல்லது அதற்கு மேற்பட்ட தொகையினரை ஒரு குழு அழைத்துச் செல்லும் வகையில் சட்டம் கொண்டுவரப்பட வேண்டும். முகவர் எண்ணிக்கையை 50 முதல் 60 வரை குறைக்க வேண்டும்.
>
> இதன் மூலம் குறைந்த எண்ணிக்கையான ஹாஜிகளை அழைத்துச் செல்லும் முகவர்களுக்கு அனுமதிப் பத்திரம் வழங்குவதைத் தவிர்த்து மோஷடிகளையும் குறைத்துக்கொள்ள முடியும்.
>
> 3. முஸ்லிம் சமய பண்பாட்டலுவல்கள் திணைக்களத்தின் சார்பில் பணிப்பாளர் உட்பட மூன்று பேருக்கு மேல் இலவசமாக ஹஜ் செய்ய அனுமதிக்கக் கூடாது.
> 4. முகவர் நிலைய உரிமையாளர்களால் வைத்தியர்கள் மற்றும் பணிப்பாளர்கள் அழைத்துச் செல்லப்படுவதால் அவர்களுக்கு திணைக்களத்தால் எந்தவித செலவுகளும் மேற்கொள்ளப்படக் கூடாது.
> 5. விஷேசமாக 2011ஆம் ஆண்டைப் போல் ஹாஜிகளிடமிருந்து எந்தவித பணத்தையும் திணைக்களம் அறவிடக் கூடாது. அவ்வாறு பணம் பெற்று எவரையும் இலவசமாக ஹஜ்ஜுக்கு அழைத்துச் செல்லக் கூடாது.
> 6. எவருடைய வேண்டுகோளின் பேரிலும் எவரையும் இலவசமாக ஹஜ்ஜுக்கு அழைத்துச் செல்லக் கூடாது. இது போன்ற மோசடிகள் இம்முறை இடம்பெறக்கூடாது.

இம்முறை ஹஜ் பணிகள் நேர்மையாகவும் நீதியாகவும் மோசடிகள் எதுவுமின்றியும் மேற்கொள்ளப்பட வேண்டும். ஜனாதிபதி அரசாங்கத்தின் மீதான மக்களின் நம்பிக்கைக்கு பங்கமேற்படாத வகையில் இவற்றினை மேற்கொள்ள வேண்டும். திணைக்களப் பணிப்பாளர், ஏனைய அதிகாரிகளின் நற்பெயருக்கு களங்கம் ஏற்படாதவாறு செயற்படுவது பணிப்பாளரின் பொறுப்பாகும் என்றும் நான் தெரிவித்துள்ளேன்.

# போராடாமல் எதுவும் கிடைக்காது!



இளைஞர்கள் ஒன்றுபட்ட சக்தியாக மாறுவதன் மூலம் பிரிந்து செயற்படுகின்ற அரசியல் தலைமைகளை ஒரே குடையின்கீழ் கொண்டு வந்து முஸ்லிம் சமூக இயக்கத்தை மேலும் பலப்படுத்த முடியும் என் தென்கிழக்கு பல்கலைக் கழக ஸ்தாபக உபவேந்தரும் அரசியல் துறைப் பேராசிரியருமான எம்.எல்.ஏ. காதர் தெரிவித்தார்.

ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் இளைஞர் காங்கிரஸ் ஏற்பாட்டில் மூதூர் தாருல் ஜன்னாஹ் வித்தியாலயத்தில் நடைபெற்ற திருகோணமலை மாவட்ட இளைஞர்களுக்கான தலைமைத்துவப் பயிற்சி செயலமர்வில் சிறப்பு வளவாளராகக் கலந்துகொண்டு உரையாற்றும் போதே பேராசிரியர் எம்.எல்.ஏ.காதர் இவ்வாறு குறிப்பிட்டார்.

ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் இளைஞர் காங்கிரஸ் தேசிய அமைப்பாளரும் கிழக்கு மாகாண சபை உறுப்பினருமான ஏ.எம்.ஜெமீல் தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வில் பேராசிரியர் எம்.எல்.ஏ.காதர் மேலும் பேசுகையில் கூறியதாவது;

'ஒரு சமூகத்தில் இளைஞர்கள் என்போர் மிகவும் சக்திமிக்க செல்வமாகும். அது சமூக நலனுக்காக பயன்படுத்தப்பட வேண்டும் என்பதில் மாற்றுக் கருத்துக்கு இடமிருக்க முடியாது. சமூக மாற்றச் சிந்தனைகளை கொண்டுசெல்வதில் முக்கிய ஊடகமாக இளைஞர்களே திகழ்கின்றனர். ஆகையினால் இளைஞர்கள் அதற்கேற்ப நல்வழிப்படுத்தப்பட வேண்டும். அதற்கு இவ்வாறான தலைமைத்துவப் பயிற்சி முகாம்கள் வழிசமைக்க வேண்டும் என்று ஆசிக்கின்றேன்.

தத்துவாசிரியர் கார்ல் மாக்சின் பிரபலமான கூற்றான 'உலக தொழிலாளர்களே ஒன்றுபடுங்கள். நீங்கள் இழப்பதற்கு உங்கள் கைவிலங்குகளைத் தவிர வேறு ஒன்றுமில்லை' எனும் கூற்றானது ரஷ்யா உள்ளிட்ட நாடுகளில் வாழ்ந்த இளைஞர்களைக் கவர்ந்து அதன் மூலமே புரட்சி வெற்றிகரமாக நடந்தேறியது என்பதை இங்கு சுட்டிக் காட்டுவது பொருத்தமாகும்.

சமூகத்தில் மாற்றம் வேண்டி நிற்கும் மனநிலை நம்மில் வளரவேண்டும். குறிப்பாக இளைஞர்களிடம் இந்த மனநிலை வேரூன்ற வேண்டும் என்பதை நான் இங்கு வலியுறுத்துகின்றேன். நம்மால் எதையும் சாதிக்க முடியும் என்கின்ற நம்பிக்கையும் தைரியமும் இளைஞர்களிடம் அடிப்படை குணாம்சமாக இருக்கவேண்டும்.

'வை திஸ் கொல வெறி' பாடல் ஓர் இளைஞரின் தற்துணிவான தனி முயற்சியாகும். அது குறுகிய சில நாட்களிலேயே உலகப்புகழ் பெற்றது மாத்திரமல்லாமல் மிகப் பிரபல்யமிக்க பாடலாசிரியர்களையும் இசையமைப்பாளர்களையும் வியப்பில் ஆழ்த்தியுள்ளது என்பதை நீங்கள் அறிவீர்கள். இதுதான் இளைஞர்களின் சக்தி இதற்குத் தேவை தன்னம்பிக்கையும் துணிவும் முயற்சியுமே.

இத்தகைய சக்தியை நமது சமூக மீட்சிக்காக பயன்படுத்துவதற்கு நீங்கள் முன்வர வேண்டும். முஸ்லிம் சமூகத்தின் உரிமைகளையும் அபிலாசைகளையும் வென்றெடுப்பதற்காக உங்களைப் போன்ற ஓர் இளைஞராலேயே ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் எனும் கட்சி ஸ்தாபிக்கப்பட்டது. அன்று முஸ்லிம் கட்சியொன்றின் தேவையை நான் உணர்த்தியபோது அஷ்ரப் எனும் இளைஞர் துணிச்சலோடு முன் வந்து இக்கட்சியைத் தோற்றுவித்தார்.

உண்மையில் எல்லோரும் சொல்வது போன்று இது ஒரு அரசியல் கட்சி என்பதைவிட முஸ்லிம் சமூகத்தின் நலன்காக்கும் இயக்கம் என்பதே பொருத்தமாகும். ஆனால், அஷ்ரப் அவர்களினால் சமூக எழுச்சிக்காக தோற்றுவிக்கப்பட்ட கட்சி இன்று பல பிரிவுகளாக இயங்கினாலும் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் எனும் தாய்க்கட்சியே அங்கீகரிக்கப்பட்ட நமது சமூக இயக்கமாக கொள்ளப்படுகிறது. தனிநபர் அமைப்புகள், பிரதேச கட்சிகள் என்பன குறிப்பிட்ட தனி மனிதனின் மறைவோடு அழிந்து அஸ்தமித்து விடும். ஆனால், சமூக இயக்கம் என்பது தலைவன் மரணித்தாலும் நிலைத்து நிற்கும். அதுவே ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் எனும் நமது சமூக இயக்கமாகும்.

> ''இன்று நமது அரசியல் தலைமைகள் நெறிபிறழ்வாக செயல்படுவதையே நம்மால் அவதானிக்க முடிகிறது. எனினும் இளைஞர்கள் கொள்கை வகுப்பாளர்களாக மாறினால் தலைமைகளை நமது பின்னால் சரியாக வழி நடத்த முடியும்''

ஆனால், இளைஞர்கள் ஒன்றுபட்ட சக்தியாக மாறும்போது பிரிந்து செயற்படுகின்ற அரசியல் தலைமைகளை ஒரே குடையின்கீழ் கொண்டு வந்து நமது சமூக இயக்கத்தை மேலும் பலப்படுத்த முடியும் என்பதை நீங்கள் புரிந்து கொள்ளவேண்டும். அதற்காக நீங்கள் முதலில் நல்ல சிந்தனைகளை வளர்த்துக் கொள்ள வேண்டும்.

இன்று நமது அரசியல் தலைமைகள் நெறி பிறழ்வாக செயல்படுவதையே நம்மால் அவதானிக்க முடிகிறது. எனினும் இளைஞர்கள் கொள்கை வகுப்பாளர்களாக மாறினால் தலைமைகளை நமது பின்னால் சரியாக வழி நடத்த முடியும். அவ்வாறாயின் தலைவர்கள் நம்மை மீறி தவறிழைக்க முடியாது. அது மாத்திரமல்லாமல் நமது சுயநலன்களுக்காக அவர்கள் சமூகத்தில் பிளவுகளை உண்டு பண்ண முடியாது.

இந்த விடயத்தில் நீங்கள் தெளிவாகவும் உறுதியாகவும் இருந்து சமூகப்பற்றுடன் செயற்படுவீர்களானால் நிச்சயமாக நமது சமூகத்தில் சகல துறைகளிலும் பாரிய மாற்றங்களைக் கொண்டு வர முடியும் என்பதை ஆணித் தரமாக கூறி வைக்க விரும்புகின்றேன். முஸ்லிம் சமூக தலைமைத்துவ கட்டமைப்பை உருவாக்குகின்ற சக்தி உங்களிடமே உள்ளது. அதனை வெற்றி கொள்வதற்கு எத்தகைய தியாகத்தையும் செய்வதற்கு நீங்கள் தயாராக வேண்டும்.

இந்த நாட்டைப் பொறுத்தவரை நமது சமூகத்திற்கு நல்லது நடக்க வேண்டுமாயின் நாம் ஏதாவது செய்தேயாக வேண்டும். இல்லையேல் எதுவும் நடக்காது. இருப்பதும் இல்லாமலாகி விடும். நாட்டின் பெரும்பான்மை சமூகத்திற்கு எல்லாமே நன்றாக நடக்கும். அவர்கள் தரப்பில் எந்த முயற்சியும் மேற்கொள்ளப்பட வேண்டிய அவசியம் கிடையாது. ஆனால் கடினமாக உழைக்க வேண்டும். பலத்துடன் செயலாற்ற வேண்டும். இதற்கு உங்களது இளைஞர் சக்தியே பயன்படுத்தப்பட வேண்டும் என்று நான் வலியுறுத்துகின்றேன்.

நம்மைப் போன்ற மற்றொரு சிறுபான்மைச் சமூகத்தில் இளைஞர்கள் தமது சமூகத்தின் விடிவுக்காக சயனைட் குப்பியுடன் போராடும்போது நமது இளைஞர்கள் குச்சியுடனாவது சிறிய உழைப்பை மேற்கொள்ளக் கூடாதா என்று சிந்தியுங்கள். போராடாமல் நமக்கு எதுவும் கிடைக்காது. நாம் சற்று தூங்கினால் நம்மிடம் இருப்பதும் பறிபோகக்கூடிய சூழல் இன்று காணப்படுகின்றது என்பதை நீங்கள் உணர்ந்து கொள்ளுங்கள்.

நீங்கள் சமூகத்திற்கு ஆற்றுகின்ற சேவையானது உங்களை நல்வழிப்படுத்தி ஓர் உயர்ந்த இடத்திற்கு கொண்டு செல்லும் என்பதையும் நினைவிற் கொள்ளுங்கள். உங்களுள் மறைந்து கிடக்கும் திறமைகளையும் ஆற்றல்களையும் வெளிக்கொண்டு வருவதற்கு நீங்கள் சமூகப் பணியில் நுழைய வேண்டும். இதற்காக உங்கள் இளம் பருவத்தை சரியான திட்டமிடல்களுடன் நன்கு பயன்படுத்துவது அவசியம் என்பதை உணர்ந்து கொள்ளுங்கள்.

அதற்காக முஸ்லிம் காங்கிரஸ் இளைஞர் அணி தேசிய அமைப்பாளர் சகோதரர் ஜெமீல் முன்னெடுத்து வருகின்ற இத்தகைய பயிற்சி முகாம்கள் நல்ல பயனைத் தரும் என்ற நம்பிக்கை எனக்கு ஏற்பட்டுள்ளது. ஏனெனில், அவர் முன்னெடுக்கின்ற எந்த முயற்சியும் வீண் போவதில்லை என்பதை நான் நன்கறிவேன். ஆகையினால் இத்தகைய வாய்ப்புகளை நீங்கள் தவற விட்டு விட்டு பின்னர் கை சேதப்படாமல் இப்போதிருந்தே நன்கு பயன்படுத்திக் கொள்ள முன்வர வேண்டும் என்று வலியுறுத்திக் கேட்டுக் கொள்கின்றேன்.

**அஸ்லம் எஸ். மௌலானா**

இந்த சமூகமும் நாடும் நமக்கு என்ன செய்தது என்று சிந்திக்காமல் நாம் இந்த சமூகத்திற்கும் நாட்டிற்கும் என்ன செய்தோம் என்று நமது மனச்சாட்சியை தொட்டுக் கேட்க வேண்டும். அவ்வாறாயின் நீங்கள் இந்த சமூகத்திற்காக - நாட்டுக்காக ஏதாவது செய்யத் துணிய வேண்டும். அதற்காக இன்றே புறப்படுங்கள்' என்று குறிப்பிட்டார்.

இந்நிகழ்வில் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் செயலாளர் நாயகம் ஹசன் அலி எம்.பி. சிரேஷ்ட பிரதித் தலைவர் ஏ.எல்.ஏ.மஜீத், தென்கிழக்குப் பலகலைக் கழக இஸ்லாமிய துறைத் தலைவர் அஷ்ஷெய்க் எம்.ஐ.எம்.ஜெசீல் ஆகியோரும் கலந்துகொண்டு உரையாற்றினர்.

# அஷ்ரபுக்கு களங்கம் ஏற்படுத்திய சிங்கள நாளேட்டின் கட்டுக்கதை



## ஹக்கீம், றிஷாத் ஆட்சேபனை

ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் ஸ்தாபகத் தலைவர் முன்னாள் அமைச்சர் எம்.எச்.எம். அஷ்ரப் உடைய மர்ம மரணம் தொடர்பான துப்பு இன்னும் துலக்கப்படாத நிலையில், அது தொடர்பான புதிய கண்டுபிடிப்பொன்றை இம் மாதம் 24 ஆம் திகதி பிரசுரமான 'ரிவிர' என்ற சிங்களப் பத்திரிகையின் ஞாயிறு வெளியீடு அதன் 27 ஆம் பக்கத்தில் கட்டுரையாக பிரசுரித்துள்ளது.

பௌத்த சாசனத்திற்கு அரசர்கள் தானம் செய்த சொத்துக்களையும், நிலபுலன்களையும் நாசமாக்கிய ஒருவருக்கு சாபத்தின் காரணமாக கடவுள் வழங்கிய தண்டனையே அவரை ஆகாயத்தில் தீயினால் சுட்டுப் பொசுக்கியதாக தெரிவிக்கும் அந்தப் புதிய கண்டுபிடிப்பு முஸ்லிம்கள் மத்தியில் கடும் விசனத்தை ஏற்படுத்தியுள்ளதாக சுட்டிக்காட்டியுள்ள நீதியமைச்சரும், ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவருமான ரவூப் ஹக்கீம் அதனை வன்மையாக கண்டித்துள்ளார்.

துக்ககரமான சம்பவம் நடந்து 12 ஆண்டு கள் கழித்து ஆதாரங்களற்ற இந்த அதிர்ச்சி தரும் தகவலை வெறும் 'புனைக்கதை' என சித்தரிக்கும் அமைச்சர் ஹக்கீம் அதற்கான காரணங்களையும் குறிப்பிட்டுள்ளார்.



அத்துடன், சம்பந்தப்பட்ட வாரப் பத்திரிகைக்கு எதிராக பூர்வாங்க சட்ட நட வடிக்கைகளை மேற்கொள்வது தொடர்பில், தற்பொழுது தென் கொரியாவுக்குச் சென்றுள்ள அமைச்சர் ஹக்கீம் தமது கட்சியின் சட்டத்தரணிகளுக்கு உரிய ஆலோசனைகளையும் வழங்கியுள்ளார்.

முஸ்லிம்களுக்கு எதிரான இஸ்லாமிய எதிர்ப்பு நடவடிக்கைகள் அதிகரித்துள்ள சூழ்நிலையில் செய்தி ஊடகங்கள் இத்தகைய விஷமத்தனமான கட்டுக்கதைகளைப் புனைந்துரைப்பது ஆரோக்கியமானதாகத் தென்படவில்லை யென அமைச்சர் தமது ஆழ்ந்த கவலையையும் வெளியிட்டுள்ளார்.

பிரஸ்தாப பத்திரிகையின் 27ஆம் பக்கத்தில் 'கதிர்காமத்தில் கூறப்பட்ட ஆருடத் தில் வெளிப்பட்டது அஷ்ரப்பின் மரணமா?' என்ற தலைப்பில் நாட்டில் ஆட்சி செய்தோர் கண்ட கிரகபலன் என்ற மகுடத்தில் இந்த விவகாரம் மிகவும் பூதாகாரமாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

அக் கட்டுரையை எச். டபிள்யு. அபயபால என்பவர் எழுதியுள்ளார். தாமும் அக் காலத்தில் களனி ரஜ மஹா விகாரையின் பரிபாலன சபையின் தலைவராக இருந்த சேனாரத்ன என்பவரும் கதிர்காமத்தில் உற்சவ காலத்தில் பிக்கு ஒருவர் ஆருடம் கூறும் சிறுவன் ஒருவனை அங்குள்ள அரச மரத்தடிக்கு அழைத்து வந்த போது நிகழ்ந்தவற்றை அக்கட்டுரையில் அவர் விபரித்துள்ளார்.

அதன்படி கதிர்காம தீ மிதிப்பை கண்டு களிப்பதற்காக அங்கு வந்த தெய்வீக பலத்தால் ஆருடம் கூறும் சிறுவன் ஒருவன் தனது கையில் திரிசூலத்தை ஏந்தியபடி தனக்கு அளிக்கப்பட்ட அல்லிப்பூந்தட்டை தாங்கியவாறு தீர்க்கதரிசனமாக பின்வருமாறு கூறினானாம்.

கடவர தெய்வம் இப்பொழுது இங்கு எழுந்தருளியிருக்கிறது. அது கூறுகிறது பௌத்த சாசனத்திற்கு அரச குமாரர்கள் அன்பளிப்பாக வழங்கிய காணி, பூமிகளையும், சொத்துக்களையும் நாசமாக்கிய ஒருவருக்கு நான் தண்டனை அளித்துள்ளேன். சோமாவதி சைத்தியவுக்கு சொந்தமான சொத்துக்களை மற்றும் கடவுளுக்கு சொந்தமானவற்றை நாசமாக்கிய இன்னொருவர் இருக்கிறார். அவர் உயரத்தில் செல்கிறார்.

பௌத்த சாசனத்தை நாசப்படுத்தியதற்கும், சேதப்படுத்தியதற்குமான தண்டனையை இன்னும் சில மாதங்களில் அவருக்கு கடவுள் வழங்குவார். தீயினால் சுட்டெரிப்பார். உண்மை! உண்மை!!

அந்நபர் சோமவதிக்கு மேலால் செல்கிறார். நிருவாகம் செய்கிறார். நாசகார வேலை செய்கிறார். விகாரைக்குச் சொந்தமான புனித பூமியை நாசமாக்குகிறார். உயரத்தில் அவர் சுட்டுக் கொளுத்தப்படுவார். கடவுளின் சாபமும், தண்டனையும் அவரைத் தீண்டும்.

சேனாரத்ன, அந்த நபரின் பெயரை தெய்வத்திடம் கேட்டார். அதற்குப் பதிலாக இந்நாட்டில் அவர் உயர் பதவியொன்றை வகிக்கிறார். இந்தக் குற்றத்திற்காக இன்னும் சிலருடன் சேர்த்து சுட்டுக்கொளுத்தப்படுவார். தண்டனை வழங்கப்பட இன்னுமொருவரும் இருக்கிறார்.

அந்தச் சிறுவன் கூறியபடி பௌத்தரல்லாத அமைச்சர் ஒருவர் காலி வீதியில் குண்டு வெடிப்பொன்றில் அகப்பட்டு உயிரிழந்திருந்தார்.

அடுத்து சிறுவன் கூறிய அந்த முன்னறிவித்தலை பற்றி நாங்கள் சிந்தித்தோம். அக் காலத்தில் சோமாவதி பிரதேசத்தில் காணிக்கொள்ளை மிகவும் பிரச்சினைக்குரிய விஷயமாக இருந்தது. அக் குற்றச்சாட்டு மிகவும் விவாதத்திற்குரிய பிரச்சினையாக இருந்தது.

அப்பொழுது முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் அஷ்ரப் அப்பிரதேசத்தில் பாராளுமன்ற உறுப்பினராக இருந்தார். அவருக்கு காணிப்பிரச்சினை சிக்கலானதாக இருந்தது.

இன்னும் சில மாதங்கள் கழிந்தன. அஷ்ரப் அவர்கள் பயணம் செய்த உலாங்கு வானூர்தி அறநாயக்கவில் திடீர் விபத்திற்கு உள்ளாகியது. அது தீப்பற்றி வெடித்து வீழ்ந்தது. அதில் பயணம் செய்த அனைவரும் விபத்துக்கு ஆளானார்கள்.

சேனாரத்னவுக்கும், எனக்கும், பிக்குவுக்கும் கதிர்காமத்தில் கூறப்பட்ட ஆருடம் நினைவுக்கு வந்தது. அஷ்ரப் அவர்களும் பயணம் செய்த உலாங்கு வானூர்தி கடவுளின் சாபத்தினாலேயே வெடித்துச் சிதறி வீழ்ந்ததாக பலர் மத்தியில் மறைவான இரகசியமாக பேசப்பட்டு வந்தது.

அக்காலத்தில் சோமாவதியில் காணிக் கொள்ளை தீவிரமடைந்திருந்தால் அநேகர் அது பற்றி கடவுளிடம் முறையிட்டிருந்தனர்.

இவ்வாறு அக் கட்டுரையில் எச்.டபிள்யு அபயபால எழுதியுள்ளார்.

இக்கட்டுரை தொடர்பாக அப்பத்திரிகையின் ஆசிரிருக்கு அமைச்சர்களான ரவூப் ஹக்கீம் றிஷாத் பதியுதீன் ஆகியோர் தமது ஆட்சேபனையை தெரிவித்துள்ளனர்.



நோபல் பரிசு பெற்ற ரவீந்திரநாத் தாகூரின் சிலை ஒன்று கொழும்பு பல்கலைக்கழக பிரதான நூலகத்தில் கடந்த செவ்வாயன்று திறந்து வைக்கப்பட்டது. வெளிவிவகார அமைச்சர் பேராசிரியர் ஜீ.எல். பீரிஸ் இதனைத் திறந்து வைத்தார். இந்திய உயர் ஸ்தானிகர் அசோக் கே. காந்தா, உபவேந்தர் பேராசிரியர் கே. ஹிம்புருகம ஆகியோரும் படத்தில் காணப்படுகின்றனர்.

## இனிப்பும் கசப்பும்

– வைஸ்

### சமூகத்தை சீரழிக்கும் சட்டம் தெரியாத காதிமார்

எமது நாட்டின் ஒரு காதியார் சீரணிக்க முடியாத ஒரு தீர்ப்பை வழங்கிய தகவல் அண்மையில் வெளிவந்தது. இதைக் கேள்விப்பட்டதும் எமது சமூகம் எங்கு போகிறது என்ற கவலை ஆட்கொண்டது. அல்லாஹ்வை மறந்து, கேள்விகேட்க அவன் இருக்கிறானே என்ற பயமின்றி இவர்கள் செயல்படுவது எமது சமூகத்தை சீரழிக்கிறார்கள்.

முஸ்லிம்கள் சிறுபான்மையாக வாழும் எமது நாட்டிலே சொத்துரிமை, விவாகம் போன்ற விடயங்களில் இஸ்லாமிய சட்டதிட்டங்களைப் பின்பற்ற எமக்கு வழங்கப்பட்டுள்ள அனுமதி பாராட்டப்பட வேண்டியதும் நன்றிக் குரியதுமாகும். அதுவும் விவாக விடயங்களை விசாரிக்க தனியான காதி நீதிபதிகளை நியமித்துள்ளது. அத்தோடு இக்கருமத்தையும் நீதிச்சேவை ஆணைக்குழுவுக்கு வழங்கி ஏனைய நீதிமன்றங்கள் போன்று அதன் கீழ் செயல்படவும் அரச வழி செய்துள்ளமை பெரும் வரப்பிரசாதம் எனலாம்.

பொது விவகாரத்தில் ஏழு விடயம் தீர்க்கப்பட பல வருடங்கள் எடுக்கின்றன. இந்தப் பிரச்சினை எமக்கு இல்லை.

சட்டத்திற்கு சில பொது விதிகள் உள்ளன. இவை எல்லோருக்கும் பொதுவானவை. அவற்றில் ஒன்றுதான் நீதிமன்றங்கள் நியாயமாக நடக்க வேண்டும் என்பது மட்டுமல்ல, அவை நியாயமாக செயல்படுகின்றனவா என்பதை மக்கள் உணர வேண்டும் என்பதாகும். எனவே, நீதிமன்றங்கள் நியாயமாக செயல்படுகின்றன என்று மக்களுக்கு விளங்கவும் வேண்டும். அல்லாவிடில் நீதிமன்றங்கள் தனது கௌரவத்தை இழந்துவிடும். நீதிமன்றம் மீதான நம்பிக்கை இல்லாமல் போய்விடும்.

இக்கொள்கையின்படி தனது வழக்கை தானே விசாரிக்க முடியாது. நாட்டின் ஏனைய நீதிமன்றங்களின் நீதிபதிகள் குறிப்பிட்ட வழக்கின் இரு சாரிலும் ஏதாவது ஒரு சாராருடன் அல்லது இரு சாராருடனும் ஏதாவது உறவு அல்லது சம்பந்தம் இருக்குமாயின் அந்த வழக்கை வேறு நீதிபதிக்கு அனுப்பிவிடுவார்கள்.

நீதிபதிகள் மாத்திரமல்ல சட்டத்தரணிகளும் தான் ஆஜராகும் வழக்கின் தனது தரப்புக்கு எதிர் தரப்புடனும் உறவுகள் இருக்குமாயின் வழக்கிலிருந்து ஒதுங்கிக் கொள்வார்கள். ஏனென்றால் தாம் நியாயமாக நடப்பதாக மக்கள் உணர வேண்டும் என்பதற்காகவே.

இப்போது விடயத்துக்கு வருவோம். எமது நாட்டின் ஒரு காதியார் தனது மகளின் விவாகரத்து வழக்கை தானே விசாரித்து உடனடியாக காலதாமதமின்றி விவாகரத்தை வழங்கியுள்ளார்.

அவரே விண்ணப்பத்தை பெற்று மகளின் மணவைத் தரப்பிற்கு அறிவித்தல் அனுப்பாது தேவையான வகையில் கோவையில் பதிவுகளை செய்து கொண்டு விவாகரத்து பத்திரத்தையும் தனது மகளுக்கு வழங்கிவிட்டார். அந்த மணவிக்கோ பின்னரே தெரிய வந்ததாம்.

எனவே, தனது மகளின் வழக்கை தானே விசாரித்து பெரும் குற்றமாகும். இதை அனுமதிக்க முடியாது மற்றது மறுதரப்பு அழைக்கச் சந்தர்ப்பம் வழங்கப்பட்டிருக்க வேண்டும். இது இயற்கை நீதிக் கோட்பாடாகும்.

தவணைக்காவது வரச் செய்யாதிருக்கலாம். இது இயற்கை சட்டத்திற்கு மாறானது. அந்தப் பெண்ணின் உரிமைகள் இங்கு மீறப்பட்டுள்ளது. இதனால் பெண் வீட்டாரால் வழங்கப்பட்டவைகளைக் கூட திருப்பிப் பெற முடியாமல் போய்விட்டது.

ஏதோ அந்த பெண் வீட்டில் விஷயம் தெரிந்தவர்கள் சிலர் இருந்ததனால் ஏதோ நடவடிக்கைகளை எடுத்துள்ளனர். காதியாரின் இந்த சட்ட விரோத நடவடிக்கைகளுக்கு எதிராக நீதிச் சேவை ஆணைக்குழுவிற்கு அறிவிக்க ஏற்பாடுகளை செய்துவிட்டனர்.

இந்த காதி விவாகரத்து பத்திரத்தை வழங்கியது மட்டுமல்ல, உடனடியாக அங்கு அறிவிக்காததால் நிக்காஹ் நிகழ்வு இடை நடுவில் நின்று விட்டதாம். அங்கும் ஏதோ பொய்களைச் சொல்லி தனது மகனுக்கு திருமண ஏற்பாடு செய்ததாக கேள்விப்படுகிறது. திருமணப் பதிவாளர் உடன் எழுந்து சென்றுவிட்டாராம்.

எனினும் வேறு எங்கோ சென்று ஒரு பதிவாளரைத் தேடி பணம் கொடுத்து செய்து கொண்டதாகவும் தகவல்கள் வந்துள்ளன.

நீதி செலுத்தும் எவரும் நியாயமாக நடக்க வேண்டும். அல்லாஹ்வுக்கு பயந்து நடக்க வேண்டும்.

அதுமட்டுமல, பதவியின் கௌரவத்தை காக்க வேண்டும். மற்றைய இனம் இதுபற்றித் தெரிந்தால் எமது சமூகம் தலைகுனிய வேண்டி வரும்.

இவ்வாறான காதிமார் நீக்கப்பட வேண்டும். அது போன்றே முறைப்பாடுகள் உள்ளவர்களும் நீக்கப்பட வேண்டும்.

அது மட்டுமல்ல, நாட்டின் பொதுச் சட்டங்கள், நீதி நியாயங்கள், போன்றவற்றை நன்கு அறிந்து வைத்துள்ளவர்கள் காதி நீதிவானாக நியமிக்கப்பட வேண்டும். மாக்க அறிவு மட்டுமல்ல ஏனைய பொது அறிவும் உள்ள ஊழல்கள் அற்ற பண ஆசை இல்லாத கௌரவப் பிரஜைகள் இப்பதவிகளுக்கு நியமிக்கப்பட வேண்டும். இவ்வாறு நியமிக்கப்படுபவர்கள், ஏனைய பொதுச் சட்ட நீதிபதிகளின் கௌரவத்துக்கு ஈடு கொடுக்கும் வகையில் செயல்படுபவர்களாகவும் இருக்க வேண்டும். இல்லாவிடின் எம் சமூகம் சீரழிந்து விடும்.

## O/L பரீட்சை

## இருபதாயிரம் முஸ்லிம் மாணவர்கள் பௌத்த, கிறிஸ்தவ பாடங்களுக்கு தோற்றல்

### ஜம்மியத்துல் உலமா தலைவர் றிஸ்வி முப்தி கவலை

(ஏ.கே.ஏ. ரவூப், மௌலவி முஸ்தபா)

இந்த நாட்டில் கடந்த வருடம் இருபதாயிரம் முஸ்லிம் மாணவர்கள் க.பொ.த. சாதாரண தரப் பரீட்சைக்கு பௌத்த சமயம் மற்றும் கிறிஸ்தவ சமயப் பாடங்களை எடுத்துள்ளார்கள் என அகில இலங்கை ஜம்மியத்துல் உலமாவின் தலைவர் அஷ்ஷெய்க் றிஸ்வி முப்தி கவலை தெரிவித்தார்.

அகில இலங்கை ஜம்இய்யத்துல் உலமாவின் வருடாந்த மாநாடு கண்டி மஸ்ஜிதுல் கபீர் ஜும் ஆப்பள்ளிவாசலில் கடந்த ஞாயிற்றுக்கிழமை இடம் பெற்றது.

சுமார் இரண்டாயிரத்துக்கும் மேற்பட்ட உலமாக்கள் ஒன்றுகூடிய இம்மாநாட்டில் சிறப்புரையாற்றிய அகில இலங்கை ஜம்இயத்துல் உலமாவின் தலைவர் அஷ்ஷெய்க் றிஸ்வி முப்தி தொடர்ந்தும் உரையாற்றுகையில்,

முஸ்லிம் சிறார்களுக்கு ஆரம்பத்திலிருந்தே மார்க்க கல்வியைப் புகட்டுவது உலமாக்களின் கடமையாகும். பிற சமய பாடங்களுக்கு தோற்றும் அளவுக்கு முஸ்லிம் மாணவர்களின் நிலை இருப்பது கண்டு வருத்தப்படுகின்றோம்.

எந்தவொரு விடயத்தை சாதிக்க முற்படும்போதும் அமைதி அவசியமாகின்றது. குர்ஆனின் வழிகாட்டலை கவனத்திற் கொள்ள வேண்டியுள்ளது. தம்புள்ளைப் பள்ளிவாசல் விவகாரத்தில் முதலில் நாம் நமது சமுதாயத்துக்கு கடைப்பிடிக்குமாறு பணித்த விடயம் பிரார்த்தனையாகும்.

இது குறித்து இந்த நாட்டின் பிரதமர் தி.மு. ஜயரத்னவைச் சந்தித்து மிகவும் கண்டித்துப் பேசினோம். தலதா மாளிகை தாக்கப்பட்டதை விட இது மிகவும் பாரதூரமானதாகும் என்று அவரிடம் கூறினோம்.

இதேவேளை, தம்புள்ளை பள்ளிவாசல் விடயமாக நாங்கள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவை நேரில் சந்தித்து பேசினோம். பள்ளிவாசலை அந்த இடத்திலிருந்து ஒரு போதும் அகற்றுவதில்லை என அவர் உறுதியளித்தார்.



எமது உலமா சபையைப் பிளவுபடுத்தி வேடிக்கை பார்க்க பல தீய சக்திகள் முயற்சி செய்து வருகின்றன. இதற்கு ஒருபோதும் நாம் இடமளிக்க மாட்டோம். முன்னோர்கள் எம்மிடம் விட்டுச் சென்ற பொறுப்பை செவ்வனே நிறைவேற்றுவதில் கண்ணும் கருத்துமாக இருக்கின்றோம்;.

ஈரானியர்கள் இங்கு வந்து மத்ரஸாக்களுக்கும் மஸ்ஜிதுகளுக்குமே நிதியுதவி செய்வதாக கூறி வருகின்றார்கள். இவர்கள் சஹாபாக்களை ஏசி திட்டுபவர்களாக இருந்தால் இவர்களின் உதவியை முஸ்லிம் சமூகம் ஒரு போதும் ஏற்றுக் கொள்ளக் கூடாது.

எமது உலமாக்கள் வெற்றுக் கைகளையுடையவர்கள் என்ற ஏனையவர்களின் கீழான எண்ணத்தை உடைத்தெறிய வேண்டும். நாம் துன்பத்தில் உழன்று கொண்டிருப்பவர்களுக்கும் அனர்த்தங்களால் பாதிப்புற்றோருக்கும் எப்போதும் உதவிக் கரம் நீட்டுபவர்கள் என்ற நல்லெண்ணத்தை மற்றவர்களின் மனதில் பதியச் செய்ய வேண்டும்.

உலமாக்களின் வழிகாட்டல் இன்று எல்லா சமூகங்களுக்கும் அவசியப்பட்டுள்ளது. 2003ம் ஆண்டிலிருந்து இன்று வரைக்கும் இன வித்தியாசமின்றி ஹலால் சான்றிதழ்களை எமது உலமா சபை வழங்கியுள்ளது. ஹலால் முஸ்லிம்களுக்கு மாத்திரமல்லாது அனைத்து சமூகங்களுக்கும் தேவையானதாகும் என்றும் அவர் தெரிவித்தார்.

## உடுகொட அரபாவில் பொன்விழா நிகழ்வுகள்

உடுகொட அறபா முஸ்லிம் மகா வித்தியாலயத்தின் பொன் விழா நிகழ்வுகள் 29ம் திகதி வெள்ளிக்கிழமை இடம்பெறும். பாடசாலை அதிபர் எம்.எம்.எம். சர்ஜுன் தலைமையில் காலை 8.30 மணி முதல் இடம் பெறவுள்ள நிகழ்வுகளில் மேல் மாகாண முதலமைச்சர் பிரசன்ன ரணதுங்க பிரதம அதிதியாகக் கலந்து கொள்வார்.

காலை முதல் மாணவர்களின் கலை நிகழ்ச்சிகள் அரங்கேற்றப்படவுள்ளன. மாலையில் பொன்விழா மலர் வெளியீடும் இடம்பெறவுள்ளது. இந்த நிகழ்வுகளில் மேல் மாகாணசபை உறுப்பினர் ஷாபி ரஹீம், கம்பளை கல்வி வலய கல்விப் பணிப்பாளர் உட்பட பிரதேச பாடசாலை அதிபர்களும் பிரமுகர்கள் பலரும் கலந்து கொள்ளவுள்ளனர்.

இதேவேளை, பொன் விழாவினையொட்டி கடந்த 26,27 ஆகிய தினங்களில் பாடசாலையில் இடம்பெற்ற மாணவர்களின் படைப்புக்கள் அடங்கிய கண்காட்சியை பெருந்திரளான மாணவர்களும் பெற்றோர்களும் கண்டு களித்தனர்.


**தெஹிவளையில் வாடகைக்கு அறை**

கொழும்பில் தனியார் நிறுவனமொன்றில் சேவை செய்யும் முஸ்லிம் இளைஞர் ஒருவருக்கு வாடகைக்கு அறை தேவைப்படுகின்றது. தெஹிவளை பிரதேசத்தில் விரும்பத்தக்கது. தொடர்பு கொள்க.

0777731180


## அமைச்சர் றிஷாதின் உதவி பெற்று கல்முனையை அபிவிருத்தி செய்வேன்

### அ.இ.மு. காங்கிரஸ் அம்பாறை அமைப்பாளர் எஹியாகான்

அகில இலங்கை முஸ்லிம் காங்கிரஸின் தலைவரும் அமைச்சருமான றிஷாத் பதியுதீனின் உதவியைப் பெற்று கல்முனைத் தொகுதியில் என்னால் முடிந்த அபிவிருத்தித் திட்டங்களை மேற்கொள்ள எண்ணியுள்ளேன். இதற்கு கிழக்கு மாகாண சுகாதார அமைச்சர் எம்.எஸ். சுபைரும் பக்கபலமாக இருப்பார் என அகில இலங்கை முஸ்லிம் காங்கிரஸின் அம்பாறை மாவட்ட அமைப்பாளரும் கிழக்கு மாகாண சுகாதார அமைச்சரின் இணைப்பாளருமான ஏ.சி. எஹியாகான் தெரிவித்தார்.

அவர் தொடர்ந்தும் குறிப்பிடுகையில், அமைச்சர் றிஷாத் பதியுதீன் இன, மத வேறுபாடுகளுக்கு அப்பால் நின்று மக்களுக்கு சேவையாற்றுபவர். பொது மக்கள் அவரை சந்திப்பதற்காக அமைச்சு அலுவலகத்துக்கு செல்லும் போது சிரித்த முகத்துடன் வரவேற்று அவர்களின் தேவைகளை உடனுக்குடன் பூர்த்தி செய்து கொடுக்கும் சுபாவமுடையவர். அவரை நாடிவரும் மக்கள் அசௌகரியத்துக்குள்ளாவதை ஒருபோதும் விரும்பாதவர். நான் அவரை அபிவிருத்திப் புயல் என்றே அழைப்பேன்.

இந்நிகழ்வில் அக்கரைப்பற்று ஆதார வைத்தியசாலையின் பல் வைத்திய நிபுணர் ஏ. வாஹித், சாய்ந்தமருது பிரதேச செயலக நிருவாக உத்தியோகத்தர் எம்.எம். உதுமாலெப்பை, சாய்ந்தமருது ஜும்ஆப் பள்ளிவாசல் நிருவாக சபை உறுப்பினர் எம்.எம். மீரா சாஹிப், அமைப்பாளரின் செயலாளர் ஏ.சி.எம். நியால் மற்றும் பிரமுகர்களும் கலந்து கொண்டனர்.

## முன்னாள் பிரதேச சபை உறுப்பினர் இம்தியாஸ் காலமானார்

(ஹெம்மாத்தகம நிருபர் எம்.எஸ். பாஹிம்)

ஹெம்மாத்தகமையைச் சேர்ந்த மாவனல்லை பிரதேச சபையின் முன்னாள் உறுப்பினர் எம்.எம். இம்தியாஸ் (48) காலமானார்.

தனது மகளின் திருமண நிக்காஹுக்காக தயாராகிக் கொண்டிருக்கும் வேளையில் திடீரென மாரடைப்பு ஏற்பட்டு மாவனல்லை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு கடந்த ஞாயிறன்று காலமானார்.

இவரது ஜனாஸா பெருந்திரளான மக்கள் பிரசன்னத்துடன் பள்ளிப்போர்வை ஜும்ஆப் பள்ளிவாசல் மையவாடியில் நல்லடக்கஞ் செய்யப்பட்டது.

சப்ரகமுவ மாகாண முதலமைச்சர் மஹிபால ஹேரத், அமைச்சர் ரஞ்சித் சியம்பளாபிடிய உட்பட்ட பிரதேச அரசியல் பிரமுகர்கள் பலரும் ஜனாஸாவில் கலந்து கொண்டனர்.


எமது சிகிச்சைகள்

- இருதய நோய்
- புற்றுநோய் தணிப்பு
- ஈரல் பிரச்சினை
- மூட்டுவலி, இடுப்புவலி
- புரோஸ்டேட் பிரச்சினை
- ஒற்றைத் தலைவலி
- மன அழுத்தம்
- இருமல், சளி
- படுக்கைப் புண்
- நீரிழிவுப் புண்
- விஷ சுவரம் பாதிப்பு


Hotline: 0777708310 0777708434

Tel :551 78 97 555 18 79 555 84 42

Fax :551 77 56

வளமான வாழ்வுக்கு நலமான இதயம் தேவை

இருதய நோயினால் அவதிப்படுபவர்கள் சுகம் பெற முடியும். விரும்பும் பலனை ஆயுர்வேத மருந்தினால் அடைய முடியும். அது இருதயத்திற்கான இரத்தவோட்டத்தை சீர்படுத்தும். நெஞ்சு வலியை நீக்கும். சிக்கலான சகிச்சை இன்றி நலமடைவீர்கள்.




இருதய அடைப்புக்கள் அறிகுறி
இதயம் எரியும் உணர்வு
குறைவான சுவாசம்
நெஞ்சு வலி

இந்நோய்களால் துன்பப்படுகிறீர்களா...?

மூட்டுவலி
மூட்டுகளில் வீக்கம்
மூட்டுக்களில் இறுக்கம்
நடமாடுவது கஷ்டம்
முதுகு வலி
கழுத்து வலி

உடனே எங்கள் மருத்துவரை சந்தியுங்கள்!



FAIR PHARMA (PVT) LTD (Kerala Ayurvedic Medicine)

Free Consultation Daily @ World Trade Centre Monthly Clinics are conducted islandwide

Level 5 / East Tower / 1C, World Trade Centre, Colombo 01.
Website: www.ayurveda.lk
E-mail : fairpharmasrilanka@yahoo.com

APPROVED BY DEPARTMENT OF AYURVEDA, BOI, AN ISO 9001 : 2008 QMS CERTIFIED COMPANY

# நவமணி

156, Hospital Road, Kalubowila, Dehiwala
Phone: 011-7393880 Fax: 011 7393883
E-mail: editornavamani@gmail.com
01st July 2012


## நம்பிக்கையூட்டும் எகிப்தின் மாற்றம் அரபுலகின் வசந்தத்துக்கு வழி காட்டுமா?

அரபுலகில் ஏற்பட்ட புரட்சியானது எகிப்தையும் பிடித்த நிலையில், 30 வருடகாலம் பலாத்கார மாக பதவியில் நீடித்த முபாரக் வீட்டுக்கு செல்ல வேண்டியேற்பட்டதுடன், இன்று அவர் கம்பிகளுக்கு பின்னாலும் நிற்கவேண்டியேற்பட்டுள்ளது.

எகிப்து மதவாத நாடாக மாறப்போவதாக மேற்குலகம் கொக்கரித்துக் கொண்டிருந்த நேரத்தில் இராணுவ நிர்வாகம் ஜனாதிபதி தேர்தல் பற்றிய அறிவிப்பையும் வெளியிட்டது. ஜனாதிபதி தேர்தலில் வாக்குகள் எண்ணப்பட்டு உத்தியோகபூர்வ முடிவுகள் வெளியாகுமுன்னே இஹ்வானுல் முஸ்லிமீனின் வேட்பாளர் முஹம்மது முர்ஸியின் வெற்றி ஓரளவு உறுதி செய்யப்பட்டது.

இந்நிலையில் நாட்டின் நிர்வாகத்துறை அதிகாரமும், சட்டத்துறை அதிகாரமான பாராளுமன்றமும் இஹ்வான்களின் கரத்திற்கு செல்வதை விரும்பாத இராணுவ கவுன்ஸில் நீதிமன்றத் துணையுடன் பாராளுமன்றத்தை கலைத்துவிட்டது.

இந்நிலையில் ஜனாதிபதித் தேர்தலில் யார் வெற்றி பெற்றது என்பதை அறிவிப்பதில் தாமதம் நிலவியது. இதனால் பரபரப்புகளும் தொற்றிக்கொண்டது. இறுதியில் எகிப்து தேர்தல் ஆணையமானது 25-06-2012 அன்று ஜனாதிபதி தேர்தலில் இஹ்வானுல் முஸ்லிமீன் வேட்பாளர் முஹம்மது முர்ஸி 13.2 மில்லியன் வாக்குகளையும், அவரை எதிர்த்துப் போட்டியிட்ட முன்னாள் பிரதமர் அஹ்மத் சபீக் 12.3 மில்லியன் வாக்குகளையும் பெற்றுள்ளதாகவும், இதன்மூலம் எகிப்தின் ஜனாதிபதியாக முஹம்மது முர்ஸி தெரிவு செய்யப்படுவதாகவும் உத்தியோகபூர்வமாக அறிவித்தது.

முஹம்மது முர்ஸியின் வெற்றி அறிவிக்கப்பட்டதும் ஜனாதிபதி தேர்தல் முடிவுக்காக தஹ்ரீர் சதுக்கத்தில் கூடியிருந்த பல்லாயிரக்கணக்கான மக்கள் அல்லாஹு அக்பர் என்ற தக்பீரை முழங்கியதுடன், எகிப்து மக்களின் பெரும்பான்மையினர் வீதிகளில் இறங்கி மகிழ்ச்சி கொண்டாட்டங்களிலும் ஈடு பட்டனர்.

இன்றைய உலகம் முஹம்மது முர்ஸியின் பெயரை அதிகம் உச்சரித்துக் கொண்டிருக்கையில், எகிப்து மக்கள் நீண்டகால தேடலுக்குப்பின் ஜனநாயக ரீதியாக தமது பிரதிநிதியை தேர்ந்தெடுத்துள்ளனர். இஹ்வானுல் முஸ்லிமீன் சார்பில் உலகின் முதலாவது ஜனாதிபதியாகவும் இவர் வர்ணிக்கப்படுகிறார்.

60 வயதான முஹம்மது முர்ஸி, அமெரிக்காவில் கலாநிதி பட்டம் பெற்றவர். ஜனாதிபதியாக தேர்ந்தெடுக்கப்பட்ட பின்னர் இஹ்வானுல் முஸ்லிமீன் அமைப்பில் வகித்துவந்த அத்தனை பதவிகளிலிருந்தும் விலகிக்கொண்டுள்ளார். எகிப்தின் ஜனாதிபதியாக வெற்றியீட்டிய பின்னர் அவர் ஊடகங்களுக்கு தெரிவித்துள்ள கருத்துக்கள் முக்கிய மானவையாக நோக்கப்படுகிறது.

நான் சகல எகிப்தியர்களுக்குமான ஜனாதிபதி. யாருக்கும் பாரபட்சம் காட்டமாட்டேன். எகிப்தில் முழு அமைதியை ஏற்படுத்துவதே எனது இலட்சியம். நான் நல்லதைச் செய்தால் எனக்கு ஒத்துழைப்புத் தாருங்கள். எகிப்தின் முன்னேற்றத்திற்காகவும் ஒத்துழையுங்கள். நான் தவறு செய்தால் என்னைத் திருத்துங்கள். நேரான பாதைக்கு அழைத்து வாருங்கள் எனவும் அவர் ஜனாதிபதியாக தெரிவு செய்யப்பட்ட பின்னர் தெரிவித்துள்ளார்.

இங்கு முஹம்மது முர்ஸி கூறிய விடயங்களைவிட அவரது மகன் அப்துல்லாஹ் முர்ஸி வெளிப்படுத்தியுள்ள விடயங்கள் முழு உலகினதும் கவனத்தை திருப்பிவிட்டுள்ளது. தந்தைக்கு வாழ்த்துச் செய்தியொன்றை அனுப்பிவைத்துள்ள அவர், நீங்கள் அல்லாஹ்விற்கு கட்டுப்படும்வரை நாங்கள் உங்களுடன் இருப்போம். நீங்கள் வரம்பு மீறினால் புரட்சி தொடரும். புரட்சிக்கு மாற்றமான முடிவுகளை நீங்கள் எடுத்தால் புரட்சி தொடரவே செய்யும் எனவும் தந்தையை எச்சரித்துள்ளார்.

எகிப்தில் இஹ்வானுல் முஸ்லிமீன் வேட்பாளர் முஹம்மது முர்ஸிக்கு அமெரிக்க ஜனாதிபதி பரக் ஒபாமாவும் தனது வாழ்த்துக்களை தெரிவித்துள்ளார். மற்றும் சில மேற்குநாடுகளும் வாழ்த்துக்களை கூறியுள்ளதுடன், இஸ்ரேலிய பிரதமர் பெஞ்சமின் நெதன்யாகு இஹ்வான்களின் வெற்றி குறித்து அறிக்கையொன்றை விடுத்துள்ளார். முஹம்மது முர்ஸியின் வெற்றியை அங்கீகரிப்பதாகவும், எகிப்து - இஸ்ரேல் நாடுகளுக்கிடையே சமாதான முயற்சிகள் தொடருமெனவும் அவர் தனதறிக்கையில் மேலும் குறிப்பிட்டுள்ளார்.

ஹமாஸ் உள்ளிட்ட இஸ்லாமிய அமைப்புக்களும் முஹம்மது முர்ஸியின் வெற்றிக்கு வாழ்த்துக்களை தெரிவித்திருப்பதுடன், முஹம்மது முர்ஸியின் வெற்றி அறிவிக்கப் பட்டவுடன், ஹமாஸ் போராளிகளின் கட்டுப்பாட்டிலுள்ள காஸா பிரதேச மக்கள் மகிழ்ச்சிக் கொண்டாட்டங்களிலும் ஈடுபட்டுள்ளனர்.

இலங்கையிலிருந்தும் முஸ்லிம் சமூகத்தின் சார்பில் நீதி அமைச்சர் ரவூப் ஹக்கீம் எகிப்தின் புதிய ஜனாதிபதிக்கு வாழ்த்துச் செய்தியொன்றை அனுப்பிவைத்துள்ளார். அரபுலகில் மகத்தான மாற்றங்களை அறிவிக்க இத்தவெற்றி துணைநிற்கும் எனவும் ஹக்கீம் அந்த வாழ்த்துச் செய்தியில் சுட்டிக்காட்டியுள்ளார்.

அதேநேரம் தமது நாட்டின் ஜனாதிபதியாக முஹம்மது முர்ஸியை எகிப்தியர்கள் ஏற்றுக்கொண்டுள்ள நிலையில் மறுபக்கம் அவருக்கு உள்நாட்டிலும், வெளிநாடுகளிலும் பல்வேறு நெருக்கடிகள் காத்திருப்பதாக நம்பப்படுகிறது.

குறிப்பாக நிறைவேற்று அதிகாரமிக்க ஜனாதிபதியிடம் அதிகாரங்களை கையளிக்க இராணுவ கவுன்ஸில் பின்னடித்து வருகிறது. குறிப்பிட்ட அதிகாரங்கள் மாத்திரமே முஹம்மது முர்ஸியிடம் கையளிக்கப்படுமெனவும், புதிதாக தெரிவு செய்யப்படும் அரசியலமைப்புச் சபையே ஜனாதிபதிக்குரிய அதிகாரங்களை தீர்மானிக்குமெனவும் இராணுவ கவுன்ஸில் அறிவித்துள்ளதுடன் ஜனாதிபதி உயர் நீதிமன்ற நீதியரசர்களின் முன்னிலையிலேயே பதவியேற்க வேண்டுமென்றும் விரும்புகிறது.

இருந்தபோதும் முஹம்மது முர்ஸியின் தரப்பினர் பாராளுமன்றம் முன்னிலையிலேயே அவர் பதவியேற்பதை விரும்புகிறது. எகிப்து அரசியலமைப்பு ரீதியாக ஜனாதிபதிக்கு இருக்கும் அதிகாரங்கள் தம்மிடம் ஒப்படைக்கப்பட வேண்டுமெனவும் அவர் தரப்பு விரும்புகிறது. நிறைவேற்று அதிகாரத்தில் இராணுவ கவுன்ஸில் தலையிடுவதையும் முர்ஸி விரும்பவில்லை.

மேலும் இராணுவ தரப்பு இஸ்ரேல் மற்றும் மேற்கு நாடுகளுடன் இரகசிய தொடர்புகளை பேணிவருவதாகவும் சந்தேகிக்கப்படும் நிலையில், இஹ்வானுல் முஸ்லிமீன் ஜனாதிபதியான முஹம்மது முர்ஸிக்கு அச்சுறுத்தல்கள் ஏற்படுமெனவும் அச்சம் வெளியாகியுள்ளது.

பலஸ்தீன் காஸா பிரதேசத்தை தமது ஆதிக்கத்தில் வைத்திருக்கும் ஹமாஸ் போராளிகளுடன் மேற்குலகம் எவ்வாறு இராஜதந்திர உறவுகளை பேணாமலும், அப்பகுதியை திட்டமிட்டு புறக்கணித்தும் வருகிறதோ அதேபோன்று எகிப்திலும் ஏற்படலாமென்ற அச்சமும் நிலவுகிறது. முஹம்மது முர்ஸி தமது கட்டுப்பாட்டை மீறிச்செல்கையில் ஹமாஸ் போராளிகள் விடயத்தில் மேற்குலகு கையாண்ட உபாயங்களை எகிப்திலும் பிரயோகிக்கலாம்.

எகிப்தில் இஹ்வானுல் முஸ்லிமீன் அடைந்திருக்கும் வெற்றியானது ஏனைய முஸ்லிம் நாடுகளிலும் தாக்கத்தை ஏற்படுத்தலாம். டுபாய் நகர பொலிஸ் அதிகாரி ஒருவர் இன்னும் 20 வருடங்களுக்குள் முழு மத்திய கிழக்குப் பகுதியும் இஹ்வானுல் முஸ்லிமீனின் ஆளுகைக்கு வந்துவிடுமென எச்சரித்துள்ளார்.

இதனால் ஏனைய முஸ்லிம் நாடுகள் இஹ்வானுல் முஸ்லிம்களுடன் அல்லது முஹம்மத் முர்ஸியுடன் இராஜதந்திர தொடர்புகளை ஏற்படுத்துவதில் தயக்கம் காட்டவும், அவர்களுடன் முரண்பட்டு போக்கை கைக்கொள்ளவும் வாய்ப்புண்டு எனலாம்.

எனவே இஹ்வானுல் முஸ்லிமின்களுக்கும், முஹம்மது முர்ஸிக்கும் எதிர்காலத்தில் இன்னும் பல சவால்கள் காத்திருக்கின்றன. அவற்றை அவர்கள் எப்படி எதிர்கொள்ளப் போகிறார்கள் என்பதே அடுத்துள்ள முக்கிய கேள்வியாகும்..!

# திரைக்குப் பின்னால்

– சஞ்சாரி

## மக்கள் அரசுடன் இருக்கின்றார்களா என்பதை பரீட்சித்துப் பார்க்க பொருத்தமான நேரம் இது என்கிறார் ஜனாதிபதி

மூன்று மாகாண சபைகளை கலைப்பது தொடர்பாக மாகாண முதலமைச்சர்கள் ஆளுநர்கள் மற்றும் கட்சி முக்கியஸ்தர்கள் கலந்து கொண்ட கூட்டம் ஒன்று ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தலைமையில் அலரி மாளிகையில் நடைபெற்றது. வடமத்திய மாகாணத்தில் நிலவும் கடும் வரட்சி காரணமாக தேர்தலை இப்போது நடத்துவது உசிதமல்ல எனப் பலரும் ஜனாதிபதிக்குத் தெரிவித்தனர். அதற்கு இணங்காத ஜனாதிபதி அரசாங்கத்துடன் மக்கள் இருக்கின்றார்களா எனப் பரீட்சித்துப் பார்ப்பதற்கு பொருத்தமான சந்தர்ப்பம் இதுதான் எனத் தெரிவித்து மூன்று மாகாண சபைகளையும் கலைப்பதே பொருத்தம் எனத் தெரிவித்தார். வரட்சி போன்ற இயற்கைக் காரணிகளின் போது மக்கள் அரசுடன் இருக்கின்றார்களா என்பது இத்தேர்தல் முடிவுகள் மூலம் தெளிவாகும் என்றும் ஜனாதிபதி கூறியுள்ளார்.

### சப்ரகமுவவில் பதவியேற்ற ஒருநாள் மாகாணசபை உறுப்பினர்

சப்ரகமுவ, வடமத்திய, கிழக்கு மாகாண சபைகளின் கடைசிக் கூட்டம் கடந்த செவ்வாயன்று இடம்பெற்றது. கூட்டம் நடைபெற்று முடியும் தருவாயில் முதலமைச்சர் மஹிபால ஹேரத் கலந்து கொண்டார். மாகாண சபை கலைக்கப்படுகின்றது என்ற தகவலுடனே மாகாண சபைக் கூட்டம் நடைபெற்றது. 13வது அரசமைப்புச் சட்டத்தின் 154(உ) சரத்தின் கீழ் ஜனாதிபதியால் ஆளுநருக்கு அனுப்பி வைத்திருந்த காணி அபிவிருத்தி கட்டளைச் சட்டத்தை திருத்தும் சட்டமூலம் சபைக்கு சமர்ப்பிக்கப்பட்டது. இதற்கு ஆதரவாக ஆளும் கட்சி உறுப்பினர்கள் 12 பேர் வாக்களித்த அதேவேளை, சபையிலிருந்த ஐ.தே.க. உறுப்பினர்கள் ஆறு பேரும் வாக்களிப்பிலிருந்து தவிர்த்துக் கொண்டனர்;. விவாதமின்றியே சட்டமூலம் நிறைவேற்றப்பட்டது.

கேகாலை மாவட்டத்தைப் பிரதிநிதித்துவப்படுத்திய ஜே.வி.பி. உறுப்பினர் பிரியந்த ரஞ்சித் குமார் நீக்கப்பட்டதால் ஏற்பட்ட வெற்றிடத்துக்கு நியமிக்கப்பட்ட மனோஜ் ராஜபக்ஷ அமர்வின் ஆரம்பத்தில் தலைவர் ரஞ்சித் பண்டார முன்னிலையில் சத்தியப்பிரமாணமேற்று பதவியேற்றார். இவரது பதவிக்காலம் ஒருநாள் மட்டுமாகும்.

### கடைசிக் கூட்டத்தில் முஸ்லிம் கல்வி பற்றி நிஹால் பாருக் உரை

இக்கூட்டத்தில் மாகாண சபை உறுப்பினர் நிஹால் பாருக் சபையில் அறிக்கை ஒன்று விடுத்துரையாற்றினார். ஆயிரம் பாடசாலை திட்டத்திற்கு தெரிவு செய்யப்பட்டுள்ள கன்னத்தோட்டை கலைமானியா மகா வித்தியாலயத்திற்கு முதல் வகுப்பிற்கு பிள்ளைகள் சேர்க்கப்படாததனால் எதிர்கொண்டுள்ள பிரச்சினை பற்றி முதலமைச்சரது கவனத்துக்கு கொண்டு வந்தார். ஆயிரம் பாடசாலைத் திட்டம் இன்னும் அமுல்படுத்தாத நிலையில் முதலாம் தர மாணவர்களை சேர்க்க கூடாதென விதித்துள்ள தடையை இத்திட்டம் அமுலுக்கு வரும் வரை அகற்றுமாறு கேட்டுக் கொண்டார்.

### ஜனாதிபதி அனுப்பிய காணிச் சட்டத்தை நிராகரித்தது வட மத்திய மாகாண சபை

இதே தினம் வட மத்திய மாகாண சபை கடைசியாக கூடியது. ஆளுநர் திவுல்கனேயூடாக ஜனாதிபதி அனுப்பி வைத்திருந்த காணித் திருத்தல் கட்டளை சபைக்கு சமர்ப்பிக்கப்பட்டது. இச்சட்டத்தை மாகாண சபை ஏற்கனவே நிராகரித்துள்ளது. இது மாகாண சபைக்குரிய அதிகாரங்களுடன் தலையிடும் விடயம். எனவே தாம் நிராகரிப்பதாக முதலமைச்சர் பேர்டி பிரேமலால் கூறினார். இதன்படி சபைத் தலைவர் பி.பி. திசாநாயக்க சமர்ப்பித்த பிரேரணையை நிராகரிப்பதற்கு சபை தீர்மானித்துள்ளது.

கிழக்கு மாகாண சபையும் கடைசியாக கடந்த செவ்வாயன்று கூடியது. காணி அபிவிருத்தி கட்டளைச் சட்டம் சமர்ப்பிக்கப்பட்டது. சட்டத்தைப் பற்றிய போதிய விளக்கமில்லை என அங்கத்தவர்கள் தெரிவித்ததனையடுத்து அதனை அடுத்த மாதம் 10ம் திகதிக்கு பரிசீலிப்பதற்கு ஒத்திப் போடப்பட்டது.

### கிழக்கு மாகாண சபை கடைசிக் கூட்டத்தில் உதுமாலெப்பை - ஜெமீல் மோதல்

கிழக்கு மாகாண சபையின் மாதாந்த சபை அமர்வில் மாகாண வீதி அபிவிருத்தி அமைச்சர் எம்.எஸ்.உதுமாலெப்பைக்கு எதிராக மாகாண சபை உறுப்பினர் ஏ.எம்.ஜெமீல் சுமத்திய குற்றச்சாட்டையடுத்து சபையில் பெரும் அமளி துமளி ஏற்பட்டதுடன் அரை மணி நேரம் சபை ஒத்தி வைக்கப்பட்டதாகவும் அறிவிக்கப்பட்டது.

கிழக்கு மாகாண சபையின் இறுதி அமர்வு செவ்வாய்க்கிழமை இடம்பெற்றது. இந்த அமர்வில் மாகாண சபை உறுப்பினர் ஏ.எம்.ஜெமீல் கிழக்கு மாகாண விளையாட்டு விழா தொடர்பிலான தனி நபர் பிரேரணை ஒன்றை சமர்ப்பித்து உரையாற்றினார்.

இதன்போது கிழக்கு மாகாண விளையாட்டு விழா ஏற்பாடுகளுக்கு பொறுப்பாக செயற்பட்ட மாகாண அமைச்சர் எம்.எஸ்.உதுமாலெப்பை , முதலமைச்சரையும் எம்மையும் அவ்விழாவுக்கு அழைக்காமல் புறக்கணித்துள்ளார் என்று மாகாண சபை உறுப்பினர் ஜெமீல் விபரித்ததுடன் குறித்த அமைச்சரின் அனைத்து நடவடிக்கைகளும் முறைகேடாகவே இடம்பெறுகின்றன என்றும் குறிப்பிட்டார்.

'குறிப்பாக மாகாண அமைச்சர் உதுமாலெப்பை, ஜெய்கா திட்டத்தின் கீழ் மேற்கொள்ளப்படுகின்ற வீதி அபிவிருத்தி நடவடிக்கைகளில் பல்வேறு முறைகேடுகளையும் பாரிய ஊழல் மோசடிகளையும் செய்து வருகின்றார். அவர் மாகாண வீதி அபிவிருத்தி அமைச்சராக இருந்து கொண்டு கொந்தராத்து செய்கிறார். இந்த கொந்தராத்து அமைச்சரின் மோசடிகள் தொடர்பான ஆதாரங்கள் என்னிடம் உண்டு' என்று மாகாண சபை உறுப்பினர் ஜெமீல் கூறியபோது ஆத்திரத்துடன் குறுக்கிட்ட மாகாண அமைச்சர் உதுமாலெப்பை, இந்த குற்றச்சாட்டையும் கொந்தராத்து அமைச்சர் என்ற வார்த்தையையும் வாபஸ் பெற வேண்டும் என்று கர்ஜித்தார்.

இல்லை நான் வாபஸ் பெற மாட்டேன். நீங்கள் செய்யும் மோசடிகளுக்கு என்னிடம் ஆதாரம் உண்டு. நீங்கள் கொந்தராத்து அமைச்சர்தான் என்று பதிலுக்கு ஆக்ரோசித்தார் மாகாண சபை உறுப்பினர் ஜெமீல். இதனைத் தொடர்ந்து சபையில் பெரும் அமளி துமளி ஏற்பட்டது. ஆளும் மற்றும் எதிர்த் தரப்பினர் சொற்போரில் குதித்தனர்.

மாகாண அமைச்சர் உதுமாலெப்பைக்கு ஆதரவாக முதலமைச்சர் சந்திரகாந்தன், ஆளும் தரப்பு மாகாண சபை உறுப்பினர்களான பிரசாந்த் புஷ்பராஜா ஆகியோரும் போர்க்கொடி தூக்கினர். ஜெமீல் தனது வார்த்தையை வாபஸ் பெற வேண்டும் என்று அவர்கள் வாதிட்டனர்.

அதேவேளை ஜெமீலுக்கு ஆதரவாக எதிர்த்தரப்பு மாகாண சபை உறுப்பினர்களான எஸ்.எஸ்.பி.மஜீத், ஜவாத் மற்றும் சசிதரன் போன்றோர் குரல் எழுப்பினர். இந்நிலையில் சபைக்கு தலைமை வகித்த பிரதித் தவிசாளர் ஆரியவதி கலப்பதி சபையை அமைதிபடுத்த எடுத்த முயற்சிகள் கை கூடாததால் சபையை ஒத்தி வைத்தார்.

### அகவை 91ல் சாம் விஜேசிங்க



91வது பிறந்த தினத்தை கொண்டாடிய பாராளுமன்றத்தின் முன்னாள் செயலாளர் நாயகம் சாம் விஜேசிங்கவின் கொள்ளுப்பிட்டி இல்லத்துக்குச் சென்று ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ அவரை வாழ்த்துவதனை படத்தில் காணலாம். பிரதி நிதியமைச்சர் கீதாஞ்சன குணவர்தன மற்றும் பாராளுமன்ற உறுப்பினர் ஏ.எச்.எம். அஸ்வரும் அருகில் காணப்படுகின்றனர்.
(படம்: நளீன் ஹேவாபதிரன)

மீண்டும் அரை மணி நேரத்தின் பின்னர் தவிசாளர் எச்.எம்.பாயிஸ் தலைமையில் சபை கூடியபோது மாகாண சபை உறுப்பினர் ஜெமீலிடம் தனது குற்றச்சாட்டை வாபஸ் பெறுமாறு வலியுறுத்தப்பட்ட போதிலும் அவர் அதற்கு மறுப்புத் தெரிவித்து அடம்பிடித்தார்.

இதனைத் தொடர்ந்து அவர் கொண்டு வந்த தனிநபர் பிரேரணையை தனது தற்துணிவு அதிகாரத்தின் கீழ் ஒட்டு மொத்தமாக தள்ளுபடி செய்த தவிசாளர் பாயிஸ், அது தொடர்பிலான விவாதங்களை ஹன்சாட்டில் இருந்து அகற்றுமாறும் பணித்து இந்த சர்ச்சையை முடிவுக்கு கொண்டு வந்தார்.

### பிரேமதாஸவை மறக்காத யூ.எல்.எம். பாருக்

முன்னாள் ஜனாதிபதி ஆர். பிரேமதாஸவின் பிறந்த தினத்தை முன்னிட்டு கடந்த ஞாயிறன்று கன்னத்தோட்டையில் நினைவு தினக் கூட்டம் ஒன்று நடைபெற்றது. யூ.எல்.எம். பாருக் மன்றம் ஏற்பாடு செய்த இந்தக் கூட்டத்தில் ஐ.தே.க. பாராளுமன்ற உறுப்பினர் கரு ஜயசூரிய பிரதம அதிதியாக கலந்து கொண்டார். ஜனாதிபதி பிரேமதாஸ 1956ல் ருவன்வல்லைத் தேர்தற் தொகுதியில் போட்டியிடும் போது 15 வயது இளைஞராக இருந்த முன்னாள் போக்குவரத்து ராஜாங்க அமைச்சர் யூ.எல்.எம். பாருக் தொடராக பிரேமதாஸ நினைவுகளை நடத்தி வருகிறார். அதன் தொடராகவே இம்முறையும் நினைவு தினக் கூட்டம் ஏற்பாடு செய்யப்பட்டது. சுமார் ஆயிரத்துக்கு மேற்பட்டோர் இந்த நிகழ்வில் கலந்து கொண்டனர். பிரேமதாஸ பெயரில் பிரதேசத்தில் வறிய குடும்பங்களைச் சேர்ந்த நூற்றுக்கணக்கானோருக்கு பண வைப்புடனான வங்கி கணக்குப் புத்தகங்களும் வழங்கப்பட்டன.

### அரசாங்கத்துக்குள் பாரிய சரிவு இடம்பெற்று வருகிறது என்கிறார் ஜனாதிபதி ஆலோசகர் ஹேமகுமார

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் ஆலோசகராக இருந்த முன்னாள் அமைச்சர் கலாநிதி ஹேமகுமார நாணயக்கார கடந்த வாரம் தனது பதவியிலிருந்து ராஜினாமாச் செய்து பரபரப்பான அறிக்கை ஒன்றை விடுத்திருந்தார். கடந்த தேர்தலின் போது நாணயக்கார உடற் சுகவீனம் காரணமாக அரசியலிலிருந்து ஒதுங்குவதாகக் கூறி தேர்தலில் போட்டியிடவில்லை. ஜனாதிபதியின் விவசாய ஆலோசகராகப் பணி புரிந்த ஹேமகுமார நாணயக்கார தனது பதவியிலிருந்து ராஜினாமாச் செய்து விட்டு அரசு மீது பல பலமான குற்றச்சாட்டுக்களைச் சுமத்தியுள்ளார். இன்று சட்டத்தின் ஆதிபத்தியம் சிதைந்துள்ளது. இலஞ்சம், ஊழல், மனிதக்கொலை, வழிப்பறி கொள்ளைகள் எங்கும் வியாபித்துள்ளன. அடுத்து சுதந்திரமாக கருத்துத் தெரிவிக்கும் உரிமை மறுக்கப்பட்டுள்ளது. இன்று மக்கள் பயந்து போய் இருக்கிறார்கள். இதிலிருந்து எமது மக்களை மீட்டெடுக்க வேண்டும் என்று கருத்துத் தெரிவித்துள்ள அவர் மீண்டும் தீவிர அரசியலிலீடுபடப் போவதாக தெரிவித்துள்ளார்.

ஹேமகுமார நாணயக்கார எக்கட்சிப் பக்கம் போவது என்று தெளிவாகக் குறிப்பிடாத போதும் புதிய அரசியல் சக்தி ஒன்றின் பக்கம் போவதாகத் தெரிவித்துள்ளார். விவசாயப் பட்டதாரியான இவர், அரசின் விவசாயக் கொள்கையையும் கடுமையாக விமர்சித்துள்ளார். இவர் இன்று அரசாங்கத்துக்குள் பாரிய சரிவு ஒன்று ஏற்பட்டு வருவதாகவும் தெரிவித்துள்ளார்.

### தான் புத்தர் எனக் கூறிக்கொண்டு நாட்டில் 25 பேர் இருக்கிறார்களாம்

தான் புத்தபெருமான் எனக் கூறிக் கொண்டு 25 பேரளவு நாட்டில் புதுவகையான பௌத்த பிரச்சாரம் மேற்கொண்டு வருவதாக பௌத்த அமைப்புக்கள் குற்றஞ்சாட்டியுள்ளன. சில தினங்களுக்கு முன் காலி வந்துரம்பையில் நடைபெற்ற நிகழ்வினை அடுத்து நீண்ட காலமாக உள்ளடங்கியிருந்த இப்பிரச்சினை பகிரங்கத்துக்கு வந்துள்ளது. இவ்வாறு தாம் புத்தர் எனக் கூறுபவர்கள் மீது இரு வாரங்களுக்குள் நடவடிக்கை எடுக்காவிடின் புத்தசாசன அமைச்சினைச் சுற்றிவளைக்கப் போவதாக பௌத்த பலசேனா சங்விதானய என்ற அமைப்பு அச்சுறுத்தல் விடுத்துள்ளது. சிரிவர்தன என்பவர் புத்த தர்மத்தை திரிபுபடுத்தி வருவதாகவும் 'திரிபீடக' என்ற பௌத்த தர்மத்தை விளக்கும் நூல் பொய்யானது என்றும் கூறி வருகிறார் என மேற்படி அமைப்பின் முக்கியஸ்தரான கலபொட அத்தே ஞானசாரதேரர் தெரிவித்துள்ளார். தான் புத்தர் எனக் கூறும் சிறிவர்தன போன்று 25 பேர் இருப்பதாகவும் இவர்களில் மூவர் இரத்தினபுரியிலிருப்பதாகவும் தகவல் கிடைத்துள்ளதாக ஞானசார தேரர் தெரிவித்துள்ளார். கடந்த ஞாயிறன்று வந்துரம்பையில் சிறிவர்தன என்பவர் புதிய புத்த தர்மம் பற்றி கூட்டம் நடத்திக் கொண்டிருக்கும்போது குறிப்பிட்ட கட்டடத்தை பௌத்த பிக்குகள் உள்ளடங்கிய பொது மக்கள் சிலரும் ஆக்கிரமிக்க முற்பட்ட போது கைகலப்பு ஏற்பட்டது குறிப்பிடத்தக்கது.

### அமைச்சர் ரிஷாதை முதன்மைப்படுத்திய நாமல் எம்.பி.

யுத்தம் மற்றும் சுனாமி அதிகூடிய அழிவுகளை ஏற்படுத்திய மாவட்டம் முல்லைத்தீவாகும். இந்த முல்லை மாவட்டத்தில் பல்வேறு அபிவிருத்தி திட்டங்களை ஆரம்பிக்கவும், மக்களிடம் கையளிக்கவுமென அமைச்சர் ரிசாத் பதியுதீன் அங்கு விஜயம் செய்தார். அமைச்சரின் வேண்டுகோளின் பேரில் முல்லை பிரதான வைத்தியசாலையில் 236 மில்லியன் செலவில் நிர்மாணிக்கப்படவுள்ள அவசர சத்திரசிகிச்சை பிரிவு உள்ளிட்ட ஏனைய வார்ட், மற்றும் வைத்தியர்கள் விடுதி என்பனவற்றுக்கான அடிக்கல் நடும் நிகழ்வு இடம் பெற்றது. இதில் அமைச்சர்களான ரிஷாத், சி.பி. ரத்னாயக்க மற்றும் எம்.பி.க்களான நாமல் ராஜபக்ஷ, ஹுனைஸ் பாருக், ஆளுநர் சந்திரசிறி உட்பட பலரும் கலந்து கொண்டார்கள். நாமல் எம்.பி, அமைச்சர் ரிஷாத்தை இந்த நிகழ்வுகளில் முதன்மைப்படுத்தி செயற்பட்டதை காணமுடிந்தது, இதே போல் 50 இலட்சம் ரூபா செலவில் புதிய பஸ்தரிப்பு நிலையத்துக்கான அடிக்கல் நடப்பட்டதுடன், புதிதாக நிர்மாணிக்கப்பட்ட முல்லைத்தீவு பிரதி சுகாதார பணிமனை அலுவலகம் மற்றும் நெனசல அறிவகம் என்பனவும் இவர்களினால் திறந்து வைக்கப்பட்டன.

### மனதை உருக்கிய பட்டதாரியொருவரின் வார்த்தை

முல்லைத்தீவு தொண்டர் ஆசிரியர்களின் நிரந்தர நியமனம் தொடர்பாக முல்லை கலைமகள் வித்தியாலயத்தில் கலந்துரையாடல் ஒன்று இடம் பெற்றது. இதனை பட்டதாரிகள் சங்கத் தலைவர் விஜிதரன் ஏற்பாடு செய்திருந்தார். இந்த கலந்துரையாடலில் அமைச்சர் ரிஷாத், முன்னாள் எம்.பி. கனகரத்தினம், உட்பட பலரும் கலந்து கொண்டனர். நீண்டகாலமாக தாங்கள் நியமனம் கோரி நிற்பதாகவும், அந்த நியமனங்களை பெற்றுக் கொடுக்க தங்களால் தான் முடியுமென்றும் அமைச்சரிடத்தில் தொண்டர் ஆசிரியர்கள் கூறினர். இது குறித்து கல்வி அமைச்சருடன் பேசியுள்ளதாகவும், ஜனாதிபதியினையும் சந்தித்து பேசவுள்ளதாகவும், அதில் தொண்டர் ஆசிரியர்கள் சிலரும் கலந்து கொள்ள ஏற்பாடு செய்வதாகவும் அமைச்சர் ரிஷாத் அவர்களிடம் தெரிவித்தார். அப்போது அக் கூட்டத்திற்கு வருகை தந்திருந்த பட்டதாரி ஒருவர் எழுந்து, நாங்கள் மெனிக் பார்ம் நலன்புரி நிலையத்தில் இருந்த போது, நீங்கள் எங்களுக்கு ஆற்றிய பணிகளை ஒரு போதும் நன்றியுள்ள எமது தமிழ் சமூகம் மறக்காது அதற்கு உங்களுக்கு நாம் நன்றிக் கடன் பட்டவர்களாகவே இருப்போம். மெனிக் பார்ம் முகாமில் சிதறிக் கிடந்த எங்களை ஒன்று சேர்த்து கொழும்பில் தலை சிறந்த பாடசாலை ஆசிரியர்களை அழைத்து வந்து எமக்கு கற்றுத் தந்து இன்று ஒரு பட்டதாரியாக வருவதற்கு ஆற்றிய பணிகளை நாம் இன்றும் நினைத்துப் பார்க்கின்றோம் என கண்ணீர் மல்க கூறிய காட்சி எல்லோரது மனதையும் நெகிழவைத்ததை அங்கு அவதானிக்க முடிந்தது.


### சொல்வதை செய்பவர் நீங்கள் ஐயா என்றார் துனுக்காய் வயோதிபர்

பாண்டியன்குளம், துனுக்காய் பிரதேசத்தில் நிர்மாணிக்கப்பட்ட சுகாதார மத்திய கட்டிடம்;, முன்பள்ளி பாலர் பாடசாலை, பொது நோக்கு மண்டபம், சந்தை தொகுதி,

(11ம் பக்கம் பார்க்க)

# தனது அயராத உழைப்பால் பேருவளையில் ஸ்ரீ.ல.சு. கட்சிக்கு புத்துயிரூட்டிய பெருந்தகை

## பளீல் ஹாஜியார்



(பேருவளை தொகுதியின் ஸ்ரீ.ல.சு. கட்சியின் மூத்த அரசியல் பிரமுகரும் மேல் மாகாண சபை முன்னாள் உறுப்பினருமான எம்.எஸ்.எம். பளீல் ஹாஜியாரின் நினைவு தினத்தை முன்னிட்டு இடம்பெறும் சிறப்புக் கட்டுரை)

நாட்டையும் மக்களையும் நேசித்து அரும் பணிபுரிந்தவர்கள் மறைந்தாலும் அவர்கள் நிலைநாட்டிச் சென்ற உன்னத சேவைகளின் நறுமணம் மங்கி மறையாது. அத்தகைய அரும் பணி செய்த உதாரண புருஷர்கள் குறித்து பேசும்போது, பேருவளைத் தொகுதியைப் பிரதிநிதித்துவப்படுத்திய முன்னாள் மாகாணசபை உறுப்பினர் மர்ஹூம் எம்.எஸ்.எம். பளீல் ஹாஜியார் உன்னத புருஷராகத் திகழ்கிறார்.

**பீ.எம்.முக்தார் - பேருவளை**

பளீல் ஹாஜியாரின் சிறந்த சேவைகள், குணவியல்புகள் குறித்து எமது சபைத் தலைவர் உட்பட எமது சக உறுப்பினர் சமிந்தலால் மெண்டிஸ் ஆகியோரும் சிறப்பாக எடுத்தியம்பினார்கள். களுத்துறை மாவட்டத்தில் ஸ்ரீலங்காசுதந்திரக்கட்சியில் தான் பளீல் ஹாஜியாரின் அரசியல் பிரவேசம் நிகழ்ந்தது.

களுத்துறை மாவட்டத்தில் முஸ்லிம் வாக்குளில் சுமார் 20% தான் எமது கட்சிக்கு அப்போது இருந்தது. இதனை மாற்றியமைக்க தன்னாலான முழுப் பலத்தையும் பிரயோகித்து, இம்மாவட்ட முஸ்லிம் மக்களைத்தட்டியெழுப்பி, கட்சியின்பால்அவர்களை ஈர்க்கச்செய்து அயராது உழைத்ததன் விளைவாக 55-60% மக்களை சுதந்திரக் கட்சியின் பக்கம் திரும்பச்செய்த சாதனையாளராகவே நான் பளீல் ஹாஜியாரைக் காண்கிறேன்.

1933ஆம்ஆண்டுபேருவளையில்பிறந்து தர்காநகர் சாஹிராவில் ஆரம்பக் கல்வியைத் தொடர்ந்த பளீல் ஹாஜியார் உயர் கல்விக்காக இரத்தினபுரியிலுள்ள சென். அலோசியஸ் மகாவித்தியாலயத்தில் கற்றுக்கொண்டிருந்த போதே அரசியலிலும் ஈடுபாடு காட்ட ஆரம்பித்தார். அப்போது தனது சேவை மனப்பான்மையால் மக்கள் மனங்களை வென்று இரத்தினபுரி மாநகர சபையில் உபநகர பிதாவாக இளம்வயதிலேயேதன்னைவளர்த்துக்கொண்டஅரசியல் தலைவராவார்.

தான் பிறந்து வளர்ந்த தேர்தல் தொகுதிக்கு சேவையாற்ற வேண்டும் என்ற பேராவாவில் இரத்தினபுரியை விட்டு பேருவளைக்கு வந்து அரசியலில் ஈடுபடலானார்.

1983ஆம் ஆண்டில் ஜே.ஆர். ஜயவர்த்தனவின் தலைமையில் ஐ.தே.க. மிகவும் பலம்பெற்றிருந்தவேளையில்அன்று நடைபெற்ற நகரசபைத் தேர்தலில் பேருவளையில் சுயேச்சைக் குழுவினூடாக போட்டியிட்டு ஐ.தே.க., ஸ்ரீ.ல.சு.க. ஆகிய பிரதான கட்சிகளைத் தோற்கடிக்கச் செய்து, வெற்றி பெற்று நகரசபைத் தலைவரானார். அந்தப் பயணத்தில் தொடர்ந்து 13 ஆண்டுகள் நகர சபைத் தலைவராகவிருந்து ஆற்றிய பணிகள்வரலாற்றில் மறக்கமுடியாதவையாகும்.

இவரது திறமை, ஆற்றல்கள், சேவை மனப்பான்மையை நன்கு உணர்ந்துகொண்ட ஸ்ரீ.ல.சு. கட்சித் தலைவி ஸ்ரீமாவோ பண்டாரநாயக்க இவரை தம் கட்சியில் இணைத்துக்கொண்டு 1993இல்பேருவளைத்தொகுதியில் பிரதான அமைப்பாளர் பதவியை வழங்கினார்.

1994 பாராளுமன்றத் தேர்தலில் சுதந்திரக் கட்சி வேட்பாளர் எவரும் இதுவரை பெற்றிராத அளவுக்கு 24,500 வாக்குளைப் பெற்று சாதனை நிலைநாட்டினார்.

ஐ.தே.க. கோட்டையாகவிருந்த பேருவளை தேர்தல் தொகுதியை சுதந்திரக் கட்சியின் கோட்டையாக மாற்றியமைத்த பெருமை பளீல் ஹாஜியாரையே சாரும். அவர் அன்று அமைத்த பலமான அடித்தளத்திலேயே இன்று இத்தொகுதி சுதந்திரக் கட்சியின்பலம்பொருந்திய கோட்டையாக மேலும் உரம்பெற்று வளர்ந்து வருகின்றதென்றால் மிகையாகாது.

அரச உதவியோடும் தன் சொந்த பணத்தினாலும் தொகுதிக்கும் மாவட்டத்தின் பல பகுதிகளிலும் பொதுச்சேவை செய்து தன்னை அர்ப்பணித்த இந்த பெருமகனை எமது தொகுதி மட்டுமல்ல மாவட்டமும் நாடும் இன்றும்கூட போற்றிப் புகழவே செய்கின்றன.

**மேல்மாகாண சபையில் மர்ஹூம் பளீல் ஹாஜியாருக்கான அனுதாபக் கூட்டத்தில் மேல் மாகாண சபை உறுப்பினரும் பேருவளைத் தொகுதி ஸ்ரீ.ல.சு.க. அமைப்பாளருமான பட்டயப் பொறியியலாளர் எம்.எம்.எம். அம்ஜத் ஆற்றிய உரையிலிருந்து...**

மேல் மகாணத்தில் 5 வருடங்களாக உறுப்பினராகவிருந்து மிகவும் மேலான சேவை செய்த பளீல் ஹாஜியாருக்கு அனுதாபம் தெரிவிக்கும் இச்சந்தர்ப்பத்தில் நாம் பின்பற்றும் எமது சமயத்தின் சார்பாகவும் இந்நாட்டின் பெரும்பான்மை சமயமான புத்த தர்மத்தின் கோட்பாடுகளுக்கமையவும் அன்னாருக்காகப் பிரார்த்திப்போம்.



கண்டி மாவட்ட ஐக்கிய தேசியக் கட்சியின் அமைப்பாளராக அல்ஹாஜ் நஸார் நியமிக்கப் பட்டுள்ளார். இவரது நியமனக் கடிதத்தை ஐ.தே.க. தலைவர் ரணில் விக்கிரமசிங்க கையளிப்பதனை படத்தில் காணலாம். கட்சியின் செயலாளர் திஸ்ஸ அத்தநாயக்காவும் அருகில் காணப்படுகிறார்.

# கஹட்டோவிட்டவில் இலவச கத்னா நிகழ்வு

கஹட்டோவிட்ட 'முஸ்லிம் லேடிஸ் ஸ்டடி சேர்கிள்' நடத்தும் இலவச கத்னா நடைமுறை ஆயுர்வேத வைத்தியமுகாம் மற்றும் இலவச கத்னா வைபவம் 30ஆம் திகதி சனிக்கிழமை அதன் ஸ்தாபகத்தில் நடைபெறவுள்ளது.

முன்னாள் முஸ்லிம் சேவைப் பணிப்பாளரும் ஆலோசகருமான எம்.இஸட். அஹமட் முனவ்வரின் தலைமையில் நடைபெறும் இவ்வைபவத்திற்கு பிரதம அதிதியாக சுதேச சேவைக்கான பிரதியமைச்சர் பண்டு பண்டாரநாயக்கவும் விசேட அதிதியாக அத்தனகல்ல பிரதேசசபைத் தலைவர் உபுல் மகேந்திர ராஜபக்ஷவும் கலந்து கொள்ளவுள்ளனர்.

பிரதேச வைத்திய நிபுணர்களைக்கொண்டு ஆண்கள், பெண்கள், முதியோர், சிறியோருக்கான அனைத்து விதமான நோய்களுக்கும் சிகிச்சை அளிக்கப்படவுள்ளதோடு, ஆயுர்வேத சிகிச்சைமுறை பற்றி பெண்களுக்கான விசேட வைத்திய ஆலோசனைகளும் வழங்கப்படவுள்ளது.

காலை 9 மணி முதல் பிற்பகல் 2 மணி வரை வைத்தியமுகாமும் பிற்பகல் 3.30 மணிக்கு இலவச கத்னா வைபவமும் நடத்தப்படுவதற்கு ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ளன. கடந்த 4 வருடகாலமாக ஏழைச் சிறார்களின் நலன்கருதி நடாத்தப்பட்டு வரும் கத்னா நிகழ்வு இம்முறை கனடாவைச் சேர்ந்த அல்ஹாஜ் இஸ்ரானின் தலைமையில் நடத்த ஏற்பாடு செய்யப்பட்டுள்ளதுடன், அதற்கான பதிவுகளும் தற்போது நடைபெற்று வருகின்றன.

மேலதிக விபரங்களுக்கு அப்பிரதேச வாசிகள் பின்வரும் இலக்கங்களுடன் தொடர்புகொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றனர். தொலைபேசி: 077 3171720, 0715311310.

# சாய்ந்தமருது மாவட்ட வைத்தியசாலையின் மருந்தாளர் பற்றாக்குறைக்கு விரைவில் தீர்வு

**அமைப்பாளர் ஏஹியாகானிடம் மகாண அமைச்சர் தெரிவிப்பு**



சாய்ந்தமருது மாவட்ட வைத்தியசாலையில் நிலவும் மருந்தாளர் பற்றாக்குறை இன்னும் ஓரிரு வாரங்களில் நிவர்த்தி செய்யப்படும். அதற்கான சகல நடவடிக்கைகளையும் முன்னெடுத்துள்ளேன் என கிழக்கு மாகாண சுகாதார, விளையாட்டுத் துறை மற்றும் தொழில்நுட்பக் கல்வி அமைச்சர் எம்.எஸ். சுபைர் தெரிவித்தார்.

கல்முனைத் தொகுதியின் அபிவிருத்தி தொடர்பாக அகில இலங்கை முஸ்லிம் காங்கிரஸ் கட்சியின் அம்பாறை மாவட்ட அமைப்பாளரும் கிழக்கு மாகாண சுகாதார அமைச்சின் இணைப்பாளருமான ஏ.சி. ஏஹியாகான் தலைமையில் கல்முனைக்குடி மயோன் மாவத்தையில் அமைந்துள்ள அவரது அலுவலகத்தில் நடைபெற்ற கூட்டத்திலேயே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அமைப்பாளர் ஏஹியாகான் அவரது கல்முனை அலுவலகத்தில நடத்திய ஊடகவியலாளர் மாநாட்டின்போது, சாய்ந்தமருது மாவட்ட வைத்தியசாலையில் நிலவும் மருந்தாளர் பற்றாக்குறையை ஊடகவியலாளர் ஒருவர் சுட்டிக் காட்டினார். இவ்விடயம் தொடர்பாக அமைப்பாளர் மாகாண சுகாதார அமைச்சரிடம் எடுத்துக் கூறியதற்கு பதிலளித்து உரையாற்றுகையிலேயே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

மாகாண அமைச்சர் தொடர்ந்தும் கருத்து தெரிவிக்கையில், அமைப்பாளர் ஏஹியாகானின் வேண்டுகோளுக்கு இணங்க சாய்ந்தமருது மாவட்ட வைத்தியசாலையை சகல வசதியும் கொண்ட மாவட்ட வைத்தியசாலையாக தரமுயர்த்தவுள்ளேன். அதற்காக அமைச்சரவையின் அனுமதியையும் பெற்றுள்ளேன் எனவும் தெரிவித்தார்.

இந்நிகழ்வில் சாய்ந்தமருது பிரதேச செயலக உத்தியோகத்தரும் ஆலோசகருமானஎம்.எம். உதுமாலெப்பை, அமைப்பாளரின் செயலாளர் ஏ.சி.எம். நியால், துறைமுக அதிகாரசபையின் உத்தியோகத்தர் எம்.ஐ.எம். ஹில்மி, பிரதேச முக்கியஸ்தர் ஏ.எல். அன்வர்கான், மயோன் ரவல்ஸ் உரிமையாளர் எம்.மீராசாஹிப் மற்றும் பீ.எம். ரியாத் ஆகியோரும் கலந்துகொண்டனர்.



இலங்கை ஜமாஅதே இஸ்லாமி அகில இலங்கை ரீதியில் 'கண்குளிர்ச்சி தரும் குடும்பம்- மனிதம் வாழும் தேசம்' எனும் கருப்பொருளில் இஜ்திமாக்களை நடாத்தி வருகின்றது. ஜமாஅத்தின் களுத்துறை உப பிராந்தியம் ஏற்பாடு செய்த மேற்படி 52ஆவது இஜ்திமா பாணந்துறை ஜீலான் மத்திய கல்லூரி உம்முல் மலீஹா மண்டபத்தில் நடைபெற்றபோது, மேற்படி தலைப்புக்களில் அஷ்ஷேஹ் ஹுஸ்னி முபாரக் இஸ்லாஹி, அஷ்ஷேஹ் பஸ்லுல்லா பாரிஸ் நளீமி, அஷ்ஷேஹ் உவைஸ் இஸ்லாஹி ஆகியோர் உரையாற்றுவதனையும் கலந்துகொண்ட பெருந்திரளான ஆண்களில் ஒரு பகுதியினரையும் படங்களில் காணலாம்.

(படங்கள்: இல்யாஸ் தாஸிம்)

# பாலமுனை அல் மின்ஹாஜில் உயர்தர வர்த்தகப் பிரிவு

(எஸ்.எச்.ஏ.முசாத்)

அக்கரைப்பற்று வலயக் கல்விப் பிரிவுக்குட்பட்ட மின்ஹாஜ் மகாவித்தியாலயத்தில் இவ்வருடம் முதல் க.பொ.த. (உ/த) வர்த்தக்கப் பிரிவுக்கு மாணவர்கள் அனுமதிக்கப்பட்டுள்ளதாக பாடசாலை அதிபர் எஸ்.எம்.எம். ஹனீபா தெரிவித்தார்.

மேற்படி பாடசாலையில் கடந்த பத்து வருடங்களாக க.பொ.த. (உ/த) கலைப் பிரிவுக்கு மாத்திரம் மாணவர்கள் அனுமதிக்கப்பட்டு வந்தனர். கல்வி அமைச்சின் ஆயிரம் பாடசாலை அபிவிருத்தித் திட்டத்தின்கீழ் இப்பாடசாலையும் உள்வாங்கப்பட்டுள்ளதால் கலைப்பிரிவுடன் சேர்த்து வர்த்தகப் பிரிவுக்கும் இவ்வாண்டு முதல் மாணவர்கள் அனுமதிக்கபடவுள்ளதாக அதிபர் மேலும் தெரிவித்தார்.

இதற்கு முன்னர் க.பொ.த. (உ/த) வர்த்தகப் பிரிவில் கல்வி கற்கக்கூடிய மாணவர்கள் பல சிரமங்களுக்கு மத்தியில் வெளியிடங்களில் சென்று கற்கவேண்டிய நிலை ஏற்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

# களுத்துறை மாவட்ட எழுத்தாளர் ஒன்றியம் அங்குராப்பணம்

களுத்துறை மாவட்டத்திலுள்ள எழுத்தாளர்கள் அனைவரையும் ஒன்றிணைத்து அவர்களின் பிரச்சினைகளுக்கு தீர்வுகாணும் நோக்கோடு, எழுத்தாளர் ஒன்றியம் ஒன்று பேருவளை ஓசன் கிரேண்ட் வரவேற்பு மண்டபத்தில் அங்குரார்ப்பணம் செய்து வைக்கப்பட்டது.

மாவட்டத்தைச் சேர்ந்த எழுத்தாளர்களுக்கு உதவி உபகாரம் புரிவது, உறுப்பினர் ஒருவரின் நூல் வெளியிட்டு விழாவில் ஒன்றியத்தின் உறுப்பினர்கள் அனைவரும் கலந்து சிறப்பிப்பது, பிரதிகளை வாங்குவது குறித்த எழுத்தாளரை ஊக்குவிப்பது போன்ற நடைமுறைகளை இதன் மூலம் மேற்கொள்ளவிருக்கிறது.

சமூகநலன் விரும்பிகள், தனவந்தர்கள் பலரும் இதற்கு ஒத்துழைப்புத் தருவதற்கு முன் வந்திருக்கிறார்கள்.

எனவே களுத்துறை மாவட்டத்திலுள்ள கலை, இலக்கிய, எழுத்தாளர்கள் இந்த ஒன்றியத்தில் அங்கத்துவராக இணைந்து கொள்ளுமாறு தர்காநகர் பிரபல அறிவிப்பாளரும், எழுத்தாளரும், கலைஞருமான அல்ஹாஜ் எம். பாஸி ஸுபைர் நவமணிக்கு தெரிவித்தார். மேலதிக விபரங்களுக்கு 0777-233398 என்ற தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொள்ளவும். 36, ஸாவியா லேன், மஹகொட பேருவளை.

# நிந்தவூரில் இலவச சிங்களப் போதனை

(நிந்தவூர் நிருபர்)

தேசிய மொழிகள் மற்றும் சமூக ஒருமைப்பாட்டு அமைச்சின் அனுசரணையில் நிந்தவூர் பிரதேச மக்களின் நலன் கருதி அண்மையில் இலவச சிங்கள பயிற்சி வகுப்புகள் ஆரம்பித்து வைக்கப்பட்டுள்ளது.

நிந்தவூர் மொழி அபிவிருத்திச் சங்கத்தின் தலைவர் எம்.ரி.ஏ. கபூர் ஜே.பி. தலைமையில் நடைபெற்ற வைபவத்தில், தேசிய மொழிகள் மற்றும் சமூக ஒருமைப்பாட்டு அமைச்சின் அம்பாறை மாவட்ட இணைப்பாளர் ஏ.எம். நிஸார், நிந்தவூர் கோட்டக் கல்வி அதிகாரி எஸ்.எல்.எம். சலீம், அல்- மதீனா வித்தியாலய அதிபர் அல்ஹாஜ் எஸ். அகமட், அல் மஸ்ஹர் பெண்கள் உயர்தரப் பாடசாலை பிரதி அதிபர் ஏ.எல். நிஜாமுதீன் உட்பட கல்விமான்கள் மற்றும் மாணவ, மாணவிகளும் கலந்துகொண்டனர்.

இதன் முதல் கட்டமாக 40 மாணவ, மாணவிகள் இலவச சிங்களப் பாடநெறியில் இணைந்துள்ளனர்.

# கணித ஆறிவுப் போட்டியில் பாணந்துறை ஜீலானுக்கு அதிக வெற்றிகள்

களுத்துறை கல்வி வலயத்திலுள்ள ஏழு 1 ஏபீ மற்றும் தேசிய பாடசாலைகள் மட்டத்தில் அண்மையில் நடைபெற்ற கணித அறிவுப் போட்டியில் பாணந்துறை, ஹேனமுல்லை, ஜீலான் மத்திய கல்லூரி அதிக முதலாம் இடங்களைப் பெற்றுள்ளது.

இதில் இக்கல்லூரிக்கு 3 முதலாம் இடங்களும் 2 இரண்டாம் இடங்களும் 1 மூன்றாம் இடமும் கிடைத்துள்ளன. சீனன் கோட்டை நளீம் ஹாஜியார் மகளிர் கல்லூரி 2 முதலாமிடங்களையும் 3 இரண்டாம் இடங்களையும் பெற்றுள்ளது. களுத்துறை முஸ்லிம் மத்திய கல்லூரி 1 முதலாமிடத்துடன் 2 மூன்றாம் இடங்களையும் வென்றுள்ளது.

முதலாம் இடங்களைப் பெற்றுக்கொண்ட ஆறு போட்டியாளர்களும் மேல்மாகாணப் போட்டியில் கலந்துகொள்ளவுள்ளனர்.

# இஸ்லாமிய ஆசிரியர் சங்க மாநாட்டில் ஜெஸ்மி எம்.மூஸாவின் நூல் வெளியீடு

ஆசிரியரும் இலக்கிய மதிப்பீட்டாளருமான ஜெஸ்மி எம்.மூஸா எழுதிய தரம் 10,11 மாணவர்களுக்கும் ஆசிரியர்களின் வழிகாட்டிக்குமான 'தமிழ் வினா விடைப் பேழை' நூல் வெளியீட்டுவிழா சம்மாந்துறை அல்-மர்ஜான் முஸ்லிம் மகளிர் கல்லூரியில் அண்மையில் நடைபெற்றது.

இலங்கை இஸ்லாமிய ஆசிரியர் சங்கம் ஏற்பாடு செய்த சங்கத்தின் 59ஆவது பேராளர் மாநாட்டையொட்டி இடம்பெற்ற பிரதான நிகழ்வாகவே இந்நூல் வெளியிடப்பட்டது.

ஆசிரியர் சங்கத்தின் தலைவர் எம்.அனஸ் தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வின் ஆரம்ப அம்சமாக சங்கத்தில் அங்கத்துவர்களாக இருந்து மரணித்தவர்களுக்கான துஆ பிரார்த்தனை இடம்பெற்றது. மௌலவி முகம்மட் றஷீட் இதனை நிகழ்த்தி வைத்தார்.

ஜெஸ்மி எம்.மூஸாவின் நான்காவது வெளியீடான இந்நூல் வெளியீட்டு நிகழ்வு சம்மாந்துறை அல்-மர்ஜான் முஸ்லிம் மகளிர் கல்லூரி அதிபர் திருமதி அபீரா சலீம் முன்னிலையில் நடைபெற்றது.

ஆசிரியர் ஏ.எம். முபாறக் வெளியீட்டு உரையினையும் அட்டாளைச்சேனை கல்விக் கல்லூரி விரிவுரையாளர் எப்.எம். அன்ஸார்மௌலானா ஆசியுரையினையும், பிரதம அதிதியாகக் கலந்துகொண்ட அனைத்து இந்திய முகாமைத்துவக் கற்கை நிலையத்தின் இலங்கைக்கான இணைப்பாளர் கவிஞர் மருதூர் ஏ.ஹஸன் அதிதியுரையினையும் நூலாசிரியர் ஜெஸ்மி எம்.மூஸா ஏற்புரையினையும் நிகழ்த்தினார்.

நூல் வெளியீட்டினைத் தொடர்ந்து கணனி கற்பித்தல் உலகளவில் தெரிவு செய்யப்பட்ட 50 சிறந்த ஆசிரியர்களுள் ஒருவரான சம்மாந்துறை முஸ்லிம் மத்திய கல்லூரியின் ஆசிரியர் எம்.பி. ஹஸீன், 5ஆம் ஆண்டு புலமைப்பரிசில் பரீட்சையில் அகில இலங்கை ரீதியில் முதலாம் இடம்பெற்ற கெக்கிராவ முஸ்லிம் மகாவித்தியாலய மாணவன் என்.எம்.ஸகி அகமட் ஆகியோருக்கு பொன்னாடை போர்த்தி வாழ்த்துப் பத்திரத்திரமும் பணப்பரிசும் வழங்கப்பட்டன.

நிகழ்வின் பிரதம அதிதியாகக் கலந்துகொண்ட கவிஞர் மருதூர் ஏ. ஹஸன் இதனை வழங்கி வைத்தார். பாராட்டுப் பெற்ற இருவரையும் வாழ்த்தி, பாராட்டு உரையினையும் இலங்கை ஆசிரியர் சங்கத்தின் சம்மாந்துறை கிளைத் தலைவர் ஆசிரியர் அப்துல் றஹீம் நிகழ்த்தினார்.

# அக்குறணை அல் அஸ்ஹருக்கு மும்மாடி விடுதிக் கட்டடம்

(அக்குறணை செய்தியாளர் எஸ்.எச்.எம். நம்ஸிர்)

அக்குறணை அல் - அஸ்ஹர் தேசிய பாடசாலையில் மூன்று மாடிகளைக் கொண்ட விடுதி ஒன்று அமைக்கப் படவுள்ளது.

அல்-அஸ்ஹர் பழைய மாணவர் தலைவர் சங்கம் இக்கட்டடத்தை நிர்மாணித்து பாடசாலைக்கு அன்பளிப்புச் செய்யவுள்ளது.

இந்த விடுதிக் கட்டடத்துக்கான அடிக்கல் நாட்டு வைபவம் பாடசாலை அதிபர் ஏ.ஆர்.எம் உவைஸ் தலைமையில் அண்மையில் நடைபெற்றது.

பிரபல வர்த்தகர் அல்ஹாஜ் உவைஸ் பைசுல் முதல் மாடியை தனது சொந்த நிதியில் கட்டி அன்பளிப்புச் செய்யவுள்ளார்.

அத்துடன் இச்சங்கத்தின் மூலம் மாணவர்களுக்கான வழிகாட்டல் கருத்தரங்குகளும் பெற்றோர்களுக்கான விழிப்பூட்டல் நடவடிக்கைகளும் நடாத்த உத்தேசிக்கப்பட்டிருப்பதாக பொதுச் செயலாளர் எம்.பி. எம். பவாஸ் நவமணிக்குத் தெரிவித்தார்.

# வீதிப் போக்குவரத்து கருத்தரங்கு



ஏறாவூர் எம்.ஏ.சி.ஏ. றகுமான் இளைஞர் கழகமும், முனீர் சாரதிப் பயிற்சி நிலையமும் இணைந்து வீதிப் போக்குரவத்து தொடர்பான ஒழுங்கு விதிகள் மற்றும் விழிப்புணர்வுக் கருத்தரங்கு ஒன்றினை பாடசாலை மாணவர்களுக்காக ஏற்பாடு செய்திருந்தது.

ஏறாவூர் அறபா வித்தியாலய கேட்போர் கூடத்தில் இடம்பெற்ற இக்கருத்தரங்கில் பெருந்தொகையான மாணவர்கள் கலந்துகொண்டனர்.

இந்நிகழ்வில் மாவட்ட மத்திய வலயக் கல்விப் பணிப்பாளர் யூ.எஸ். செய்யதீன், பிரதேச செயலாளர் எஸ்.எல்.எம். ஹனீபா, ஏறாவூர் பொலிஸ் பரிசோதகர் அதிகாரி ஏ.எல். ஹிதாயதுல்லாஹ் ஆகியோரும் கலந்துகொண்டனர். பங்குபற்றிய மாணவர்களுக்கு சான்றிதழ்களும் வழங்கப்பட்டன.



பாலமுனை அக்/அல்-ஹிக்மா வித்தியாலயத்தில் இடம்பெற்ற அக்கரைப்பற்று வலய பாடசாலைகளுக்குஇடையிலானகரம் போட்டியில் 15 வயதுக்குக்கீழ் பிரிவில் சம்பியனாகத் தெரிவு செய்யப்பட்ட பாலமுனை அல் ஹிக்மா வித்தியாலய மாணவனுக்கு அதிபர் ஐ.எம். பாஹிம் சான்றிதழ் வழங்குவதினையும், உடற்கல்வி உதவிக் கல்விப் பணிப்பாளர் எஸ்.எம். ஜெமீல் மற்றும் ஆசிரியர்கள் அருகில் நிற்பதையும் படத்தில் காணலாம்.



ஆலங்குளம் ஆயுர்வேத மத்திய மருந்தகம் ஏற்பாடு செய்த வைத்திய முகாம் ஒன்று தீகவாபி பிரதேச முன்பள்ளி பாலர் பாடசாலை கட்டிடத்தில் நடைபெற்ற போது பிரதம அதிதியாக கலந்து கொண்ட கிழக்கு மாகாண சுகாதார அமைச்சின் செயலாளர் யூ.எல்.ஏ. அஸீஸ் முகாமை திறந்துவைத்து உரையாற்றுவதனையும், அட்டாளைச்சேனை மாவட்ட ஆயுர்வேத வைத்திய அதிகாரி எம்.ஏ. நபீல் உட்பட சக அதிகாரிகள் மேடையில் வீற்றிருப்பதனையும் படத்தில் காணலாம்.

(படம்: எம்.ஐ. சம்சுதீன், ஆலங்குளம் நிருபர்)

# ஒன்றுபட்ட சமூகமாக எழுச்சிபெற்று கிழக்கில் மு.கா.வின் வெற்றியை உறுதி செய்வோம்

## மு.கா. பிரதித் தலைவர் ஹாபிஸ் நஸீர் அழைப்பு



கிழக்கு மாகாண சபை தேர்தல் ஸ்ரீலங்கா முஸ்லிம்களின் வரலாற்றில் மிக முக்கியத்துவம் வாய்ந்த தேர்தல் களமாகும். முஸ்லிம்களின் வாழ்வியல் இருப்பு, பாதுகாப்பு உள்ளிட்ட சமூக, அரசியல் உரிமைகளுக்கு உத்தரவாதம் வழங்கப்போகும் தேர்தல் களமாக இது இருக்கும்.

அரசியலில் அடிமையாக இருந்த எமது சமூகம் 198களுக்குப் பின் எழுச்சி பெற்றது. மறைந்த தலைவர் மர்ஹூம் எம்.எச்.எம். அஷ்ரப்பால் முன்னெடுக்கப்பட்ட முஸ்லிம் சமூகத்தின் அரசியல் விடுதலைப் போராட்டங்கள், அவருக்குப் பிந்திய ஒரு காலகட்டத்தில் ஒற்றுமை எனும் கயிற்றைப் பற்றிப் பிடிக்கத் தவறியதால் பின்னடைவுக்குள்ளானது. எனினும் இப்போது வரவிருக்கும் இந்த அரிய சந்தர்ப்பம் முஸ்லிம் சமூகத்தின் அபிலாஷைகளை நிறைவேற்றி வைக்கும் என்பதில் இன்ஷா அல்லாஹ் எந்த ஐயுறவும் எமக்கு வேண்டாம் என வரவிருக்கும் கிழக்கு மாகாண சபைத் தேர்தல் குறித்து அறிக்கை ஒன்றை வெளியிட்டிருக்கும் ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸின் பிரதி தலைவர் நசீர் அஹமட் தெரிவிக்கின்றார்.

சுதந்திர இலங்கையில் தமிழர்கள் தம் உரிமைகளுக்காக அஹிம்சா, ஆயுத வழிகளில் போராடியும் வெற்றி கிட்டவில்லை. யுத்தத்தின்முடிவு பல்வேறு தலைமைகளை அவர்களுக்கு இல்லாமல் செய்தது. எனினும் இன்று அதில் ஒரு தெளிவு கிட்டியிருக்கிறது. சர்வதேசத்துக்கும் அவர்களது பிரச்சினை தெளிவுபடுத்தப்பட்டிருக்கிறது.

அச்சமூகத்தின் அவலநிலை சர்வதேசத்தின் சகல தரப்பினரையும் அறிவூட்டியிருக்கிறது. அவர்களது பிரச்சினைகளுக்கு எவரும் எதுவும் இல்லாத நிலையிலும்கூட விடிவுகாலம் பிறக்கின்ற சாத்தியக் கூறுகள் இப்போது தென்படுகின்றன. நிச்சயமாக அது அவர்களுக்கு கிடைக்கும். எவர் எதைச் சொன்னாலும் அவர்களது அபிலாஷைகள் நிறைவேறும் ஒரு காலம் மிக அண்மையில் வரவிருக்கிறது. முஸ்லிம் சமூகம் இதனை புரிந்து கொள்ள வேண்டும்.

முஸ்லிம்களின் உரிமைப் போராட்டங்களில் தனி அலகு, நிர்வாக அலகு முஸ்லிம் தேசம் என முயற்சிகள் முன்னெடுக்கப்பட்ட. உள்நாட்டு அரசியல் அழுத்தங்களும் இன்னோரன்ன அரசியல், சமூக சிக்கல்களும் எமது போராட்ட களங்களை அவ்வப்போது இடைநிறுத்தம் செய்து மந்த நிலைக்கு கொண்டுசென்றன. அல்லாஹ் மிக இலகுவாக தந்திருக்கும் அரிய சந்தர்ப்பம் இதுவாகும். இத்தருணத்தில் முஸ்லிம்கள் ஒற்றுமைப்பட வேண்டும்.

இது முஸ்லிம் தலைவர்கள் உட்பட்ட முஸ்லிம் சகோதரர்கள் முன்னிற்கும் முதன்மைச் சவாலாகும்.

எதிர்வரும் கிழக்கிலங்கை மாகாணசபைத் தேர்தலில் முஸ்லிம்கள் ஒற்றுமைப்பட்டு இரண்டு விடயங்களை தீர்மானிக்கும் சக்தியாக மாறவேண்டும். முதலாவது முஸ்லிம் முதலமைச்சர் ஒருவரை தீர்மானிப்பது. இரண்டாவது இருபதுக்கு மேற்பட்ட முஸ்லிம் உறுப்பினர்களை கிழக்கு மாகாண சபைக்கு கொண்டு செல்வது. ஒற்றுமையின் மூலம் 22 உறுப்பினர்களை முஸ்லிம்கள் மிக இலகுவாகப் பெறமுடியும்.

குறிப்பாக முஸ்லிம் இளைஞர்கள் இவ்விடயத்தில் சிந்தித்து செயலாற்ற வேண்டும். ஒரு மனப்பட்டு ஒற்றுமையுடன் கால் பதிக்க வேண்டும். உறுதிபூண்டு செயற்பட வேண்டும். இந்நாட்டு தலைவர்கள் வெளிநாட்டு சக்திகளை புறந்தள்ளி செயலாற்ற முடியாத நிலையிலேயே காலங்காலமாக இருந்து வருகின்றனர்.

எனவே, கிழக்கு வாழ் முஸ்லிம்கள் ஒற்றுமைப்பட்டு மேறக்கூறிய இரண்டு விடயங்களையும் தீர்மானிப்பார்களேயானால் வட, கிழக்கு தீர்வில் எமது அபிலாஷைகளையும் எம்மால் உறுதிப்படுத்த முடியும். எந்த விதத்திலாவது ஒன்றுபட்ட ஒரு சமூகமாக எழுச்சி கொண்டு இவைகளை நாம் சாதிக்க வேண்டும்.

இவ்விடயங்களை முஸ்லிம் சமூகம் விளங்காது போனால், மீண்டும் வழிதவறிய சமூகமாக நட்டநடுவில் கைவிடப்படுவார்கள். முஸ்லிம் தலைவர்கள், சமூக பிரமுகர்கள், புத்திஜீவிகள், உலமாக்கள் எனப்பலரும் ஒன்றிணைந்து எதிர்கால சந்ததிக்கு 'ஜவாபு' சொல்லக் கூடியவர்களாக மரணிக்க வேண்டும் எனவும் அவ்வறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# இதயம் பேசுகிறது...

17 மாதங்களுக்கு முன் முஹம்மட் முர்ஸி எகிப்திய ஜனாதிபதி ஹொஸ்னி முபாரக்கின் சிறைக் கைதியாக இருந்தார். இன்று முஹம்மட் முர்ஸி எகிப்திய ஜனாதிபதியாக தெரிவு செய்யப்படும் போது ஹொஸ்னி முபாரக் சிறைக்கைதியாக இருக்கிறார். அன்று இந்த நிலை தனக்கு ஏற்படும் என்று ஹொஸ்னி முபாரக் கனவில் கூட நினைத்திருக்க மாட்டார்.

இவர்கள் இருவரதும் எதிர்காலமும் எகிப்தின் எதிர்காலமும் இன்று மாறிக் கொண்டிருக்கின்றது. 26 வருட காலமாக சிறைக்கூட்டிலிருந்து ஜனாதிபதி மாளிகைக்குச் சென்ற தென்னாபிரிக்காவின் நெல்சன் மண்டேலா போன்று இன்று எகிப்தின் முஹம்மட் முர்ஸி ஜனாதிபதி மாளிகைக்கு செல்வதற்கு தயாராகிக்கொண்டிருக்கிறார். அது எகிப்திய மக்களது சக்தியினாலாகும்.

வைராக்கியம் மற்றும் பழிவாங்கல்கள் அற்ற புதிய தென்னாபிரிக்கா போன்று, இனவாதமற்ற நாளைய தினத்துக்கான தகவலை உலகுக்கு வழங்கி நெல்சன் மண்டேலா சிறையிலிருந்து வெளியே வந்தார். அதேபோன்று எகிப்திலிருந்து முஹம்மட் முர்ஸி எகிப்து உட்பட்ட அரபு உலகுக்கும் அதேபோன்று முழு உலகுக்கும் வைராக்கியம், பழிவாங்கலற்ற ஜனநாயக சமூகத்தின் இருப்புக்கான எதிர்பார்ப்பினை ஒளியேற்றுவதற்காக ஜனாதிபதியாக பதவியேற்பதற்கு தயாராகிக் கொண்டிருக்கின்றார்.

எகிப்தின் இந்த புரட்சி அரபுலகு முழுவதும் பறந்துகொண்டிருக்கும் ஜனநாயக போக்கின் மற்றொரு செயற்பாடாகும்.

புதிய ஜனாதிபதியாக தெரிவு செய்யப்பட்டிருக்கும் முஹம்மட் முர்ஸிக்கு முதன் முதலில் தொலைபேசி அழைப்பை வழங்கிய நாட்டுத் தலைவர் அமெரிக்க ஜனாதிபதி பரக் ஒபாமாவாகும்.

ஜனநாயகம், சட்டத்தின் ஆதிபத்தியம், தேசிய ஒற்றுமை மற்றும் எகிப்தின் பொருளாதாரத்தை கட்டியெழுப்புவது அவருடைய பிரதான இலக்குகளாக இருப்பதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

சுதந்திரத்தை வென்றெடுப்பதற்காக அரபு உலகின் சகல சமூகங்களின் மக்கள் விருப்பத்திற்கு தெரிவாகியிருப்பது இஸ்லாமிய சகோதரத்துவத்துடன் இணைந்த சக்தீ என்பதை இங்கு குறிப்பிட வேண்டும்.

'அவர்கள் பொறிக்குள் சிக்கியிருக்கிறார்கள். இஸ்லாமிய சக்தி தேர்தல்களில் மிக விரைவில் வெற்றிபெறும், அதிகாரத்திற்கும் வருவார்கள். அது அவர்களது கடைசியாக இருக்கும். எங்களை போன்று மக்களுடைய எரிகின்ற பிரச்சினைகளுக்கு அவர்களால் தீர்வு வழங்கமுடியாது என்று மக்கள் விளங்கிக் கொள்வார்கள். பிரச்சினைகள் தீவிரமாகும் போது மக்கள் அவர்களை கண்டிக்கத் துடங்குவார்கள். அவர்களுக்கு எதிராக எழுச்சி பெறத் தொடங்குவார்கள். அதன் பின் அவர்கள் எமது பக்கம் திரும்புவார்கள்''

மேற்குறிப்பிட்ட கூற்று 1991இல் அல்ஜீரிய தேர்தலின் போது கூறப்பட்டது. 1962ல் வெளிநாட்டு பிடியிலிருந்த அல்ஜீரியாவின் சுதந்திர காலகட்டம் முதல் அந்த நாட்டை ஆட்சி செய்த தேசிய விடுதலை முன்னணியின் தலைவரான இராணுவ அதிகாரி ஒருவரே இக்கூற்றை கூறியிருந்தார். இந்த கூற்று எகிப்து ஜனாதிபதி தேர்தலின்போது ஹொஸ்னி முபாரகின் கட்சியை சேர்ந்த இராணுவ அதிகாரி ஒருவரால் கூறப்பட்ட கூற்றல்ல. எனினும் இந்த இரு தரப்பினரதும் சிந்தனைகளில் மாற்றம் இருக்காது.

மத்திய கிழக்கில் உதயமாகும் இந்த ஜனநாயகம் மத்திய கிழக்கு அமெரிக்க நிகழ்ச்சி நிரலுக்கு சவாலாக அமையும். எகிப்திய ஜனாதிபதியை முதலில் வாழ்த்தியவர் பரக் ஒபாமாவாக இருந்தாலும் மத்திய கிழக்கில் மக்கள் சார்பு ஆட்சி உருவாகுவது அந்த பிராந்தியத்தில் தமது தேவைகளுக்கு ஏற்ப வழிநடாத்துவதற்கு தமக்கிருந்த வாய்ப்புகள் இல்லாமல் போவது என அமெரிக்க அரசியலை வழி நடாத்தும் சியோனிச சக்திகளுக்கு நன்கு தெரியும். வெளிப்பார்வையில் ஜனநாயகம் பற்றி உயர்வாக பேசினாலும் ஏற்பட்டு வரும் மத்திய கிழக்கு வரைபடத்தின் மாற்றம் இந்த சக்திகளுக்கு நடுக்கத்தை ஏற்படுத்தியிருப்பதில் எந்த சந்தேகமும் இல்லை.

இதனால், முர்ஸிக்கு அதிகாரங்களை வழங்குவதில் இராணுவ அதிகாரிகளின் எதிரான செயற்பாட்டு பின்னணியில் அமெரிக்கா குறிப்பிடத்தக்க தாக்கத்தை ஏற்படுத்துவதற்கு முன்வந்திருப்பதை இதுவரை எங்களால் காணமுடியாமல் உள்ளது.

பாராளுமன்றத்தை ரத்து செய்தல் உட்பட சட்ட ஆக்க மற்றும் நிர்வாக அதிகாரங்களை கட்டுப்படுத்துவதற்காக இராணுவ அதிகாரிகள் மேற்கொண்டு வரும் நடவடிக்கைகளுக்கு எதிராக தஹ்ரீர் சதுக்கத்தில் கூடியிருக்கும் மக்கள் கூட்டாக எழுப்பும் கோஷத்தில் இருப்பது 'if they want it to be syria, we will give them libiya' என்பதாகும்.

குறிப்பாக எகிப்து மக்களுடைய விருப்பம் ஜனநாயக சமூகம் ஒன்று உருவாகுவதாகும். எகிப்து அரேபியாவின் வரலாற்று உரிமை அடிப்படையில் மிக முக்கிய இடம் வகிக்கின்றது. அரபுலகில் ஆக கூடுதலான சனத்தொகை இருப்பது எகிப்திலாகும். அரபுலகின் அறிவின் கேந்திர நிலையமும் எகிப்தாகும்.

எகிப்தின் புதிய ஜனாதிபதி தான் ஜனாதிபதி பதவியை ஏற்றதும். தான் பதவி வகித்த 'freedom and justice party' என்ற கட்சியில் இருந்து தான் நீங்கிவிடுவதாக அறிவித்துள்ளார். அதிலிருந்து அவர் காட்ட முற்படுவது எகிப்து சமூகத்தின் சகல சக்திகளதும் பொதுவான தலைவராக தான் செயற்பட போகின்றேன் என்பதாகும்.

சமய சுதந்திரம், பெண்கள் உரிமை, சட்டத்தின் ஆதிபத்தியம் போன்றனவோடு அமைச்சரவை நியமனத்தின்போது தான் சிந்திக்கின்ற முறை பற்றி அவர் தெரிவித்திருக்கின்ற கருத்துக்கள் பரந்த அடிப்படையிலும் யதார்த்த அடிப்படையிலும் நாட்டை கொண்டு நடாத்த வேண்டுமென்பதை உணர்த்துவதாகவுள்ளது.

டியுனீஷியாவில் ஆட்சிப் பொறுப்பை ஏற்றுள்ள இஸ்லாமிய சகோதரத்துவ இயக்கத்திற்கு தொடர்புடைய ரஷீத் கன்னோச்சியின் கட்சி டியுனீஷிய பாராளுமன்றத்தில் யூத மக்களுக்கு இரு பிரதிநிதித்துவத்தை வழங்குவதற்கு தயாராக உள்ளதாக தெரிவித்துள்ளது. 50 இலட்சம் மக்கள் வாழும் டியுனீஷியாவில் சுமார் 2000 யூதர்களே வாழ்கிறார்கள்.

அரபுலகில் மக்களது விருப்பை வென்றுகொண்டிருக்கும் இஸ்லாமி சகோதரத்துவ இயக்கம் பற்றி மேற்குலக ஊடகங்கள் காட்டிக்கொண்டிருக்கும் தீவிரவாத போக்கு ஒரு மாயை என்பதை காட்டுகின்ற முறையில் அவர்களுடைய நடத்தை அமைந்திருப்பது மிக முக்கியமானது. இஸ்ரேலுக்குள் அரபு மக்கள் எதிர்கொண்டிருக்கும் மூன்றாம் தர பிரஜைகளுக்கான கவனிப்பு இனவாதம், பலமான மனித உரிமை மீறல்களை கவனத்தில் கொள்ளும்பொழுது இந்த சமூகம் இஸ்ரேலுக்கு முன்மாதிரி காட்டியுள்ளது.

எகிப்து, டியுனீஷியா, மொரோக்கோ, ஜோர்தான், குவைட் உட்பட்ட அரபு நாடுகளில் எல்லாம் மக்கள் பிரதிநிதிகளைக் கொண்ட பாராளுமன்றத்தின் பெரும்பான்மையை இந்த இயக்கம் கொண்டிருப்பதன் மூலம் அரபுலகின் எதிர்காலம் பற்றிய நம்பிக்கையை ஏற்படுத்திக் கொள்ள முடிகிறது.

மேற்குலகினால் மத்திய கிழக்கு வரை படத்தில் செயற்கையாக மேற்கொண்டுள்ள பிரிவினைக்கு பதிலாக எதிர்காலத்தில் ஜனநாயகத்தை உயர்வாக மதிக்கின்ற ஐக்கியம் மிகு அரபுலகொன்று உருவாகக்கூடிய முன் அடையாளங்கள் உதயமாகிக் கொண்டிருக்கின்றன என்பது கவனிக்கத்தக்கதாகும்.

- குமரன்

## தனியார் வைத்தியக் கல்லூரி வேண்டாம்

# 10 இலட்சம் கையெழுத்து வேட்டை

தனியார் வைத்தியக் கல்லூரிகளை நிறுவுவதற்கு எதிர்ப்புத் தெரிவித்தும், நிறுவப்பட்டுள்ள கல்லூரிகளை மூடிவிடுமாறு வலியுறுத்தியும் 10 இலட்சம் கையெழுத்துகளைத் திரட்டும் பணிகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

தனியார் வைத்தியக் கல்லூரிக்கு எதிரான அமைப்பு, கற்றோர் ஒன்றியம் ஆகியவற்றினால் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள இந்நடவடிக்கை கோட்டை ரயில் நிலையத்துக்கு முன்னால் கடந்த திங்கட்கிழமை ஆரம்பித்து வைக்கப்பட்டது.

வைத்தியர்கள், தாதிமார்கள், சுகாதார தொழிற்சங்க பிரதிநிதிகள், பல்கலைக்கழக விரிவுரையாளர்கள் உட்பட பெரும் திரளானோர் இந்நிகழ்வில் பங்கேற்றனர்.

தனியார் வைத்தியக் கல்லூரிகளை அகற்றும் பாரிய திட்டத்தின் முதல் அங்கம் மாத்திரமே இதுவென்றும், அடுத்து வரும் காலங்களில் பாரிய போராட்டம் முன்னெடுக்கப்படும் என்றும் டாக்டர் அசங்க விக்கிரமசிங்க தெரிவித்தார்.

## பட்டதாரி நியமனங்களில் பாரபட்சம்

# அம்பாறை மாவட்ட பட்டதாரிகள் ஜனாதிபதி, அமைச்சர்களுக்கு மகஜர்





நாட்டிலுள்ள ஏனைய ஏழு மாகாணங்களில் 2012 காலப்பகுதி வரை பட்டம் பெற்ற பட்டதாரிகளுக்கு பட்டதாரி பயிலுனர் நியமனம் வழங்கப்பட்டுள்ள போதிலும் வடக்கு, கிழக்கு மாகாணங்களில் மாத்திரம் 2009ஆம் ஆண்டு காலப்பகுதியை வரையறை செய்து நியமனம் வழங்கப்பட்டிருக்கின்றது.

இதனைத் தளர்த்தி 2012ஆம் ஆண்டு வரை பட்டம் பெற்ற பட்டதாரிகளுக்கு பட்டதாரி பயிலுனர் நியமனம் வழங்குமாறு அரசைக் கோரும் தீர்மானமொன்று அம்பாறைமாவட்டபட்டதாரிகளால் நிறைவேற்றப்பட்டது.

அம்பாறை மாவட்டத்தில் 2011 தொடக்கம் 2012 வரையான காலப்பகுதியில் பட்டம்பெற்ற பட்டதாரிகளின் ஒன்றுகூடல் சாய்ந்தமருது அல்-ஹிலால் வித்தியாலயத்தில் 24ஆம் திகதி நடைபெற்றது. அதன்போதே இத்தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

இவ்விடயம் தொடர்பாக மாவட்டத்திலுள்ள அமைச்சர்களை சந்தித்து அவர்களூடாக ஜனாதிபதியின் கவனத்திற்கு கொண்டுசென்று நியமனம் பெற்றுக் கொள்வதற்கு நடவடிக்கை மேற்கொள்ளவும் கலந்துரையாடப்பட்டது.

பட்டதாரி பயிலுனர்களை ஆட்சேர்ப்பு செய்வதற்காக விண்ணப்பங்கள் கோரப்பட்டபோது அதில் பட்டம் பெற்ற ஆண்டு வரையறை செய்யப்படவில்லை. அவ்வாறு விண்ணப்பித்து நேர்முகப்பரீட்சைக்கு அழைக்கப்பட்டவர்களுக்கு நியமனம் வழங்காமல் ஏமாற்றப்பட்டுள்ளார்கள்.

ஒவ்வொரு மாவட்டத்திலும் 1350 பட்டதாரிகளுக்கு பயிலுனர் நியமனம் வழங்குவதற்கு அரசு நடவடிக்கை மேற்கொண்டபோதிலும் அம்பாறை மாவட்டத்தில் இதுவரை 1180 பேருக்கு மாத்திரமே நியமனம் வழங்கப்பட்டுள்ளதாகவும் சுட்டிக் காட்டப்பட்டது.

இது தொடர்பான மகஜரொன்றை ஜனாதிபதி, நிதி அமைச்சர், பொது நிர்வாக உள்நாட்டலுவல்கள் அமைச்சர், அரசாங்க அதிபர் ஆகியோர்களுக்கு அனுப்புவதற்கும் ஒன்றுகூடலில் தீர்மானிக்கப்பட்டது.

# தென்னமரவாடி தமிழ் குடும்பங்களுக்கு உலர் உணவு நிவாரணங்களை வழங்குங்கள்

## அஸ்வர் எம்.பி. அமைச்சர் வீரக்கோனிடம் வேண்டுகோள்



புல்மோட்டை பிரதேசத்துக்குட்பட்ட தென்னமரவாடி கிராமத்தில் மீள்குடியேற்றம் செய்யப்பட்டுள்ள தமிழ் குடும்பங்களுக்கு உடனடியாக மீள்குடியேற்ற உலர் உணவு நிவாரண உதவிகளை வழங்குமாறு பாராளுமன்ற உறுப்பினர் ஏ.எச்.எம். அஸ்வர் மீள்குடியேற்ற அமைச்சர் குணரத்ன வீரக்கோனை வேண்டியுள்ளார்.

சென்றவாரம் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் புனரமைப்பு நடவடிக்கைகள் சம்பந்தமாக புல்மோட்டை கிராமத்துக்கு விஜயம் செய்த அல்ஹாஜ் அஸ்வர் அங்கு குறிஞ்சிப்பிட்டிப் பிரதேசசபையின் தலைவர் தௌபீக், அமைச்சர் சுசந்த புஞ்சிநிலமேயின் செயலாளர் மஹேஷ் ஆகியோருடன் அக்கிராமத்துக்கு விஜயம்செய்து மக்களின் குறைகளைக் கேட்டறிந்தார்.

திருகோணமலை மாவட்டத்தை பிரதிநிதித்துவப் படுத்தும் ஒரு தமிழ் பாராளுமன்ற பிரதிநிதியும் தங்களது கிராமத்து குறைகளைத் தீர்க்க இன்றுவரை முன்வரவில்லை என்பதையும் அவ்வூர் மக்கள் கூட்டத்தில் தெரிவித்தனர்.

30வருடகாலமாக அக்கிராமத்தில் வசித்த மக்கள் முல்லைத்தீவு போன்ற பிரதேசங்களுக்கு இடம்பெயர்ந்து சென்றபிறகு, தற்பொழுது ஏற்பட்டுள்ள சமாதான சூழ்நிலை காரணமாக மீண்டும் தென்னமரவாடி கிராமத்துக்கு வந்துள்ளனர். எனினும், அவர்களுக்கு போக்குவரத்துக்குரிய சீரான பாதைகளோ, மருத்துவமனைகளோ, பிள்ளைகள் கல்வி கற்பதற்கு பாடசாலை போன்ற அடிப்படை வசதிகளோ இல்லாமல் மிகவும் கஷ்டமான நிலையில் வாழ்ந்து வருகின்றனர்.

இவர்கள் எதிர்நோக்கியுள்ள இந்த வாழ்வாதார பிரச்சினைகளுக்கு தீர்வுபெறுவதற்கு சம்பந்தப்பட்ட அமைச்சுகளோடு தொடர்புகொண்டு நடவடிக்கை எடுப்பதாக பாராளுமன்ற உறுப்பினர் அஸ்வரிடம் கூறினார். அங்கு ஆண்கள், பெண்கள் கூடியிருந்த கூட்டத்தில் அவர் பேசினார்.

'ஒரு கிராமத்துக்கு ஒரு வேலைத்திட்டம்' என்ற பொருளாதார அபிவிருத்தி அமைச்சின் வேலைத்திட்டத்தின்கீழ் இக்கிராமத்துக்கு ஆரம்பப் பாடசாலை ஒன்றைப் பெற்றுத்தருவதற்கு தாம் சிபாரிசு செய்துள்ளதாக பிரதேசசபையின் உபதலைவர் தௌபீக் தெரிவித்தார்.



வலது குறைந்தவர்களுக்கான முச்சக்கர மிதிவண்டி வழங்கும் நிகழ்வில் வட மாகாண ஆளுநரின் பிராந்திய ஆணையாளர் எஸ்.எல்.டீன் ரசூல்நகர் எம். வஹாப் என்பவருக்கு முச்சக்கர மிதிவண்டியொன்றை வழங்குவதையும் அருகில் சமூக சேவை அதிகாரி எம். அஸ்ஹரையும் காணலாம்.

(படம்: ஏ.சி.ஏ. மிஸ்காத், புத்தளம்)

# பிங்கிரிய தொகுதி அபிவிருத்திக்கு மு.கா. உறுப்பினர்கள் நிதி ஒதுக்கீடு

வடமேல் மாகாண சபை உறுப்பினர்களான சட்டத்தரணி றிஸ்வி ஜவஹர்ஷா மற்றும் முஹம்மத் தஸ்லீம் ஆகியோரது மாகாண சபை பண்முகப்படுத்தப்பட்ட நிதியின் மூலம் பிங்கிரிய தொகுதிக்கான அபிவிருத்தி திட்டங்களுக்கு ஒதுக்கீடுகள் செய்யப்பட்டுள்ளன.

குளி/யகம்வெல மு. வித்தியாலயத்திற்கான ஒலிபெருக்கி வசதிகளை பெற ரூபா 20,000 மேலும் மனாருல் ஹூதா அரபுக் கல்லூரிக்கு பிளாஸ்டிக் கதிரைகளை பெற ரூபா 15,000 மேலும் எதுன்கஹகொடுவ மத்திய கல்லூரியின் சிறுவர் பூங்கா அமைப்பதற்காக ரூபா 60,000 மேலும் நாகொள்ளாகொட இளைஞர் கழகத்திற்கு பிலாஸ்டிக் கதிரைகளை பெற 20000 ரூபாவும் கினியம ஆயிஷா பள்ளிவாயலுக்கு மின் இணைப்பைப் பெற்றுக் கொடுக்க ரூபா 85,000 அரோமா. வி. கழகத்திற்கான ஒலிபெருக்கி வசதிகளை பெற ரூபா 35000 ரூபாவுமாக 2,15,000 ரூபாவை சட்டத்தரணி றிஸ்வி ஜவஹர்ஷா ஒதுக்கியுள்ளார்.

அதேவேளை, மா.சபை உறுப்பினர் தஸ்லீம் எதுன்கஹ கொடுவ முஸ்லிம் மத்திய கல்லூரிக்கு 40,000 ரூபாவும் யகம்பெல மையவாடிக்காக 50,000 ரூபாவும் மொத்தமாக 90,000 ரூபாவை ஒதுக்கியுள்ளார். அபிவிருத்தித் திட்டங்கள் பிங்கிரிய தொகுதி மு.க. அமைப்பாளர் ஷாம் மௌலானாவின் மேற்பார்வையில் ஆரம்பிக்கப்பட்டு செயற்படுத்தப்பட்டு வருகின்றது.

# அரபுக் கல்லூரிக்கு மாணவர் அனுமதி

புத்தளம் பாத்திமா அரபுக் கல்லூரிக்கு புதிய மாணவிகள் சேர்த்துக் கொள்ளப்படுகின்றனர். 13 வயதுக்குட்பட்ட அல்குர்ஆனை சரளமாக ஓதத் தெரிந்தவர்கள் விண்ணப்பிக்கலாம். அனாதைப் பெண்கள், கற்க வசதியற்றவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.

அத்துடன் இக்கல்லூரியில் கற்பிக்கத் தகுதியுள்ள முஅல்லிமார்கள் தேவைப்படுகின்றனர். பாதுகாப்பான தங்குமிடம், உணவு மேலும் பல சலுகைகள் வழங்கப்படும்.

தொடர்புகளுக்கு: அதிபர், பாத்திமா பெண்கள் அரபுக் கல்லூரி, கொழும்பு வீதி, கடயாமோட்டை, கெம்பட்டை, நாகவில்லு. தொ.பேசி: 0775361023

# நீதிக்கும் நியாயத்துக்கும் கிடைத்த மிகப்பெரிய வெற்றி

## எகிப்து ஜனாதிபதியின் வெற்றிக்கு முபாறக் மௌலவி வாழ்த்து

எகிப்து நாட்டின் புதிய ஜனாதிபதியாக தெரிவு செய்யப்பட்டுள்ள முஹம்மத் முர்ஷிக்கு அகில இலங்கை உலமா கட்சி வாழ்த்துச் செய்தி ஒன்றை அனுப்பி வைத்துள்ளது. உலமா கட்சியின் தலைவர் முபாறக் அப்துல் மஜீத்தினால் அனுப்பி வைக்கப்பட்டுள்ள வாழ்த்துச் செய்தியில் குறிப்பிடப்பட்டுள்ளதாவது,

தங்களின் வெற்றி என்பது நீதிக்கும் நியாயத்துக்கும் கிடைத்த மிகப்பெரிய வெற்றியாகவேகருதப்படுகின்றது. அநீதி எத்தனை காலம் அடக்குமுறையுடன் ஆட்சி செய்தாலும் என்றாவது ஒருநாள் நீதிக்கு வெற்றி கிடைத்தே தீரும் என்பதை இத்தேர்தல் வெற்றி சுட்டிக்காட்டுகிறது.

முஸ்லிம்களை மிகப் பெரும்பான்மையாகக் கொண்ட இஸ்லாமிய புராதன வரலாறு கொண்ட எகிப்தை அந்நிய நாடுகளின் தலையீடுகளுக்கு அடிபணியாத சுயமரியாதையும், இறைமையும் கொண்ட நாடாக மாற்றி அந்நாட்டு மக்களின் சமய விழுமியங்களின் அடிப்படையிலான நீதிமிக்க நாடாக மாற்ற வேண்டும் என்ற சிந்தனை சுமார் 80 வருடங்களின் முன்பு இஸ்லாமிய அறிஞர்களினால் விதைக்கப்பட்டது.

இதன் காரணமாக இமாம் ஹசனுல் பன்னா, அறிஞர் சைய்யித் குதுப் போன்ற சிந்தனையாளர்கள் பலர் தமது வாழ்வை தியாகம் செய்தனர். ஆயிரக்கணக்கான சகோதரர்கள் சிறையிலடைக்கப்பட்டனர், கொல்லப்பட்டனர். ஆனாலும் ஆயுதப் போராட்டம் இன்றி ஜனநாயக ரீதியில் நீதியை நிலைநாட்ட முடியும் என்ற தொடர்ச்சியான போராட்டத்துக்கு இப்போது வெற்றி கிடைத்துள்ளது.

அத்துடன் எகிப்திய சமூகவாதிகளான இஸ்லாமிய அறிஞர்களின் தியாகத்துக்கும் சிந்தனைக்கும் இத்தனை வருடங்களின் பின்னரே வெற்றி கிடைத்துள்ளமை நீதிக்கும், சமயம் சார்ந்த புத்திஜீவிகளின் போராட்டத்துக்கும் என்றாவது ஒருநாள் வெற்றி கிடைத்தே தீரும் என்பதையே உலகுக்கு காட்டியுள்ளது.

எனவே, தங்களது ஆட்சியில் எகிப்திய முஸ்லிம்களின் தன்மானம் காப்பாற்றப்பட்டு அனைத்து மக்களுக்கும் நீதியான, சமாதானமான வாழ்வு கிடைக்க வேண்டும் என வாழ்த்துகிறோம் என முபாறக் அப்துல் மஜீத் குறிப்பிட்டுள்ளார்.

# ஒன்றுபட்ட சமூகமாக எழுச்சிபெற்று கிழக்கில் மு.கா.வின் வெற்றியை உறுதி செய்வோம்

## மு.கா. பிரதித் தலைவர் ஹாபிஸ் நஸீர் அழைப்பு



கிழக்கு மாகாண சபை தேர்தல் ஸ்ரீலங்கா முஸ்லிம்களின் வரலாற்றில் மிக முக்கியத்துவம் வாய்ந்த தேர்தல் களமாகும். முஸ்லிம்களின் வாழ்வியல் இருப்பு, பாதுகாப்பு உள்ளிட்ட சமூக, அரசியல் உரிமைகளுக்கு உத்தரவாதம் வழங்கப்போகும் தேர்தல் களமாக இது இருக்கும்.

அரசியலில் அடிமையாக இருந்த எமது சமூகம் 198களுக்குப் பின் எழுச்சி பெற்றது. மறைந்த தலைவர் மர்ஹூம் எம்.எச்.எம். அஷ்ரப்பால் முன்னெடுக்கப்பட்ட முஸ்லிம் சமூகத்தின் அரசியல் விடுதலைப் போராட்டங்கள், அவருக்குப் பிந்திய ஒரு காலகட்டத்தில் ஒற்றுமை எனும் கயிற்றைப் பற்றிப் பிடிக்கத் தவறியதால் பின்னடைவுக்குள்ளானது. எனினும் இப்போது வரவிருக்கும் இந்த அரிய சந்தர்ப்பம் முஸ்லிம் சமூகத்தின் அபிலாஷைகளை நிறைவேற்றி வைக்கும் என்பதில் இன்ஷா அல்லாஹ் எந்த ஐயுறவும் எமக்கு வேண்டாம் என வரவிருக்கும் கிழக்கு மாகாண சபைத் தேர்தல் குறித்து அறிக்கை ஒன்றை வெளியிட்டிருக்கும் ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸின் பிரதி தலைவர் நசீர் அஹமட் தெரிவிக்கின்றார்.

சுதந்திர இலங்கையில் தமிழர்கள் தம் உரிமைகளுக்காக அஹிம்சா, ஆயுத வழிகளில் போராடியும் வெற்றி கிட்டவில்லை. யுத்தத்தின்முடிவு பல்வேறு தலைமைகளை அவர்களுக்கு இல்லாமல் செய்தது. எனினும் இன்று அதில் ஒரு தெளிவு கிட்டியிருக்கிறது. சர்வதேசத்துக்கும் அவர்களது பிரச்சினைதெளிவுபடுத்தப்பட்டிருக்கிறது.

அச்சமூகத்தின் அவலநிலை சர்வதேசத்தின் சகல தரப்பினரையும் அறிவூட்டியிருக்கிறது. அவர்களது பிரச்சினைகளுக்கு எவரும் எதுவும் இல்லாத நிலையிலும்கூட விடிவுகாலம் பிறக்கின்ற சாத்தியக் கூறுகள் இப்போது தென்படுகின்றன. நிச்சயமாக அது அவர்களுக்கு கிடைக்கும். எவர் எதைச் சொன்னாலும் அவர்களது அபிலாஷைகள் நிறைவேறும் ஒரு காலம் மிக அண்மையில் வரவிருக்கிறது. முஸ்லிம் சமூகம் இதனை புரிந்து கொள்ள வேண்டும்.

முஸ்லிம்களின் உரிமைப் போராட்டங்களில் தனி அலகு, நிர்வாக அலகு முஸ்லிம் தேசம் என முயற்சிகள் முன்னெடுக்கப்பட்ட. உள்நாட்டு அரசியல் அழுத்தங்களும் இன்னோரன்ன அரசியல், சமூக சிக்கல்களும் எமது போராட்ட களங்களை அவ்வப்போது இடைநிறுத்தம் செய்து மந்த நிலைக்கு கொண்டுசென்றன. அல்லாஹ் மிக இலகுவாக தந்திருக்கும் அரிய சந்தர்ப்பம் இதுவாகும். இத்தருணத்தில் முஸ்லிம்கள் ஒற்றுமைப்பட வேண்டும்.

இது முஸ்லிம் தலைவர்கள் உட்பட்ட முஸ்லிம் சகோதரர்கள் முன்னிற்கும் முதன்மைச் சவாலாகும்.

எதிர்வரும் கிழக்கிலங்கை மாகாணசபைத் தேர்தலில் முஸ்லிம்கள் ஒற்றுமைப்பட்டு இரண்டு விடயங்களை தீர்மானிக்கும் சக்தியாக மாறவேண்டும். முதலாவது முஸ்லிம் முதலமைச்சர் ஒருவரை தீர்மானிப்பது. இரண்டாவது இருபதுக்கு மேற்பட்ட முஸ்லிம் உறுப்பினர்களை கிழக்கு மாகாண சபைக்கு கொண்டு செல்வது. ஒற்றுமையின் மூலம் 22 உறுப்பினர்களை முஸ்லிம்கள் மிக இலகுவாகப் பெறமுடியும்.

குறிப்பாக முஸ்லிம் இளைஞர்கள் இவ்விடயத்தில் சிந்தித்து செயலாற்ற வேண்டும். ஒரு மனப்பட்டு ஒற்றுமையுடன் கால் பதிக்க வேண்டும். உறுதிபூண்டு செயற்பட வேண்டும். இந்நாட்டு தலைவர்கள் வெளிநாட்டு சக்திகளை புறந்தள்ளி செயலாற்ற முடியாத நிலையிலேயே காலங்காலமாக இருந்து வருகின்றனர்.

எனவே, கிழக்கு வாழ் முஸ்லிம்கள் ஒற்றுமைப்பட்டு மேறக்கூறிய இரண்டு விடயங்களையும் தீர்மானிப்பார்களேயானால் வட, கிழக்கு தீர்வில் எமது அபிலாஷைகளையும் எம்மால் உறுதிப்படுத்த முடியும். எந்த விதத்திலாவது ஒன்றுபட்ட ஒரு சமூகமாக எழுச்சி கொண்டு இவைகளை நாம் சாதிக்க வேண்டும்.

இவ்விடயங்களை முஸ்லிம் சமூகம் விளங்காது போனால், மீண்டும்வழிதவறிய சமூகமாக நட்டநடுவில் கைவிடப்படுவார்கள். முஸ்லிம் தலைவர்கள், சமூக பிரமுகர்கள், புத்திஜீவிகள், உலமாக்கள் எனப்பலரும் ஒன்றிணைந்து எதிர்கால சந்ததிக்கு 'ஜவாபு' சொல்லக் கூடியவர்களாக மரணிக்க வேண்டும் எனவும் அவ்வறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.



# இதயம் பேசுகிறது...

17 மாதங்களுக்கு முன் முஹம்மட் முர்ஸி எகிப்திய ஜனாதிபதி ஹொஸ்னி முபாரக்கின் சிறைக் கைதியாக இருந்தார். இன்று முஹம்மட் முர்ஸி எகிப்திய ஜனாதிபதியாக தெரிவு செய்யப்படும் போது ஹொஸ்னி முபாரக் சிறைக்கைதியாக இருக்கிறார். அன்று இந்த நிலை தனக்கு ஏற்படும் என்று ஹொஸ்னி முபாரக் கனவில் கூட நினைத்திருக்க மாட்டார்.

இவர்கள் இருவரதும் எதிர்காலமும் எகிப்தின் எதிர்காலமும் இன்று மாறிக் கொண்டிருக்கின்றது. 26 வருட காலமாக சிறைக்கூட்டிலிருந்து ஜனாதிபதி மாளிகைக்குச் சென்ற தென்னாபிரிக்காவின் நெல்சன் மண்டேலா போன்று இன்று எகிப்தின் முஹம்மட் முர்ஸி ஜனாதிபதி மாளிகைக்கு செல்வதற்கு தயாராகிக்கொண்டிருக்கிறார். அது எகிப்திய மக்களது சக்தியினாலாகும்.

வைராக்கியம் மற்றும் பழிவாங்கல்கள் அற்ற புதிய தென்னாபிரிக்கா போன்று, இனவாதமற்ற நாளைய தினத்துக்கான தகவலை உலகுக்கு வழங்கி நெல்சன் மண்டேலா சிறையிலிருந்து வெளியே வந்தார். அதேபோன்று எகிப்திலிருந்து முஹம்மட் முர்ஸி எகிப்து உட்பட அரபு உலகுக்கும் அதேபோன்று முழு உலகுக்கும் வைராக்கியம், பழிவாங்கலற்ற ஜனநாயக சமூகத்தின் இருப்புக்கான எதிர்பார்ப்பினை ஒளியேற்றுவதற்காக ஜனாதிபதியாக பதவியேற்பதற்கு தயாராகிக் கொண்டிருக்கின்றார்.

எகிப்தின் இந்த புரட்சி அரபுலகு முழுவதும் பரந்துகொண்டிருக்கும் ஜனநாயக போக்கின் மற்றொரு செயற்பாடாகும்.

புதிய ஜனாதிபதியாக தெரிவு செய்யப்பட்டிருக்கும் முஹம்மட் முர்ஸிக்கு முதன் முதலில் தொலைபேசி அழைப்பை வழங்கிய நாட்டுத் தலைவர் அமெரிக்க ஜனாதிபதி பராக் ஒபாமாவாகும்.

ஜனநாயகம், சட்டத்தின் ஆதிபத்தியம், தேசிய ஒற்றுமை மற்றும் எகிப்தின் பொருளாதாரத்தை கட்டியெழுப்புவது அவருடைய பிரதான இலக்குகளாக இருப்பதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

சுதந்திரத்தை வென்றெடுப்பதற்காக அரபு உலகின் சகல சமூகங்களின் மக்கள் விருப்பத்திற்கு தெரிவாகியிருப்பது இஸ்லாமிய சகோதரத்துவத்துடன் இணைந்த சக்தி என்பதை இங்கு குறிப்பிட வேண்டும்.

'அவர்கள் பொறிக்குள் சிக்கியிருக்கிறார்கள். இஸ்லாமிய சக்தி தேர்தல்களில் மிக விரைவில் வெற்றிபெறும், அதிகாரத்திற்கும் வருவார்கள். அது அவர்களது கடைசியாக இருக்கும். எங்களை போன்று மக்களுடைய எரிகின்ற பிரச்சினைகளுக்கு அவர்களால் தீர்வு வழங்கமுடியாது என்று மக்கள் விளங்கிக் கொள்வார்கள். பிரச்சினைகள் தீவிரமாகும் போது மக்கள் அவர்களை கண்டிக்கத் துடங்குவார்கள். அவர்களுக்கு எதிராக எழுச்சி பெறத் தொடங்குவார்கள். அதன் பின் அவர்கள் எமது பக்கம் திரும்புவார்கள்'

மேற்குறிப்பிட்ட கூற்று 1991இல் அல்ஜீரிய தேர்தலின் போது கூறப்பட்டது. 1962ல் வெளிநாட்டு பிடியிலிருந்த அல்ஜீரியாவின் சுதந்திர காலகட்டம் முதல் அந்த நாட்டை ஆட்சி செய்த தேசிய விடுதலை முன்னணியின் தலைவரான இராணுவ அதிகாரி ஒருவரே இக்கூற்றை கூறியிருந்தார். இந்த கூற்று எகிப்து ஜனாதிபதித் தேர்தலின்போது ஹொஸ்னி முபாரக்கின் கட்சியை சேர்ந்த இராணுவ அதிகாரி ஒருவரால் கூறப்பட்ட கூற்றல்ல. எனினும் இந்த இரு தரப்பினரதும் சிந்தனைகளில் மாற்றம் இருக்காது.

மத்திய கிழக்கில் உதயமாகும் இந்த ஜனநாயகம் மத்திய கிழக்கு அமெரிக்க நிகழ்ச்சி நிரலுக்கு சவாலாக அமையும். எகிப்திய ஜனாதிபதியை முதலில் வாழ்த்தியவர் பராக் ஒபாமாவாக இருந்தாலும் மத்திய கிழக்கின் மக்கள் சார்பு ஆட்சி உருவாகுவது அந்த பிராந்தியத்தில் தமது தேவைகளுக்கு ஏற்ப வழிநடாத்துவதற்கு தமக்கிருந்த வாய்ப்புகள் இல்லாமல் போவது என அமெரிக்க அரசியலை வழி நடாத்தும் சியோனிச சக்திகளுக்கு நன்கு தெரியும். வெளிப்பார்வையில் ஜனநாயகம் பற்றி உயர்வாக பேசினாலும் ஏற்பட்டு வரும் மத்திய கிழக்கு வரைபடத்தின் மாற்றம் இந்த சக்திகளுக்கு நடுக்கத்தை ஏற்படுத்தியிருப்பதில் எந்த சந்தேகமும் இல்லை.

இதனால், முர்ஸிக்கு அதிகாரங்களை வழங்குவதில் இராணுவ அதிகாரிகளின் எதிரான செயற்பாட்டின் பின்னணியில் அமெரிக்கா குறிப்பிடத்தக்க தாக்கத்தை ஏற்படுத்துவதற்கு முன்வந்திருப்பதை இதுவரை எங்களால் காணமுடியாமல் உள்ளது.

பாராளுமன்றத்தை ரத்து செய்தல் உட்பட சட்ட ஆக்க மற்றும் நிர்வாக அதிகாரங்களை கட்டுப்படுத்துவதற்காக இராணுவ அதிகாரிகள் மேற்கொண்டு வரும் நடவடிக்கைகளுக்கு எதிராக தஹ்ரீர் சதுக்கத்தில் கூடியிருக்கும் மக்கள் கூட்டாக எழுப்பும் கோஷத்தில் இருப்பது 'if they want it to be syria, we will give them libiya' என்பதாகும்.

குறிப்பாக எகிப்து மக்களுடைய விருப்பம் ஜனநாயக சமூகம் ஒன்று உருவாகுவதாகும். எகிப்து அரேபியாவின் வரலாற்று உரிமை அடிப்படையில் மிக முக்கிய இடம் வகிக்கின்றது. அரபுலகில் ஆக கூடுதலான சனத்தொகை இருப்பது எகிப்திலாகும். அரபுலகின் அறிவின் கேந்திர நிலையமும் எகிப்தாகும்.

எகிப்தின் புதிய ஜனாதிபதி தான் ஜனாதிபதி பதவியை ஏற்றதும், தான் பதவி வகித்த 'freedom and justice party' என்ற கட்சியில் இருந்து தான் நீங்கிவிடுவதாக அறிவித்துள்ளார். அதிலிருந்து அவர் காட்ட முற்படுவது எகிப்து சமூகத்தின் சகல சக்திகளதும் பொதுவான தலைவராக தான் செயற்பட போகின்றேன் என்பதாகும்.

சமய சுதந்திரம், பெண்கள் உரிமை, சட்டத்தின் ஆதிபத்தியம் போன்றனவோடு அமைச்சரவை நியமனத்தின்போது தான் சிந்திக்கின்ற முறை பற்றி அவர் தெரிவித்திருக்கின்ற கருத்துக்கள் பரந்த அடிப்படையிலும் யதார்த்த அடிப்படையிலும் நாட்டை கொண்டு நடாத்த வேண்டுமென்பதை உணர்த்துவதாகவுள்ளது.

டியூனீஷியாவின் ஆட்சி பொறுப்பை ஏற்றுள்ள இஸ்லாமிய சகோதரத்துவ இயக்கத் திற்கு தொடர்புடைய ரஷித் கன்னோச்சியின் கட்சி டியூனீஷிய பாராளுமன்றத்தில் யூத மக்களுக்கு இரு பிரதிநிதித்துவத்தை வழங்குவதற்கு தயாராக உள்ளதாக தெரிவித்துள்ளது. 50 இலட்சம் மக்கள் வாழும் டியூனீஷியாவில் சுமார் 2000 யூதர்களே வாழ்கின்றார்கள்.

அரபுலகில் மக்களது விருப்பை வென்றுகொண்டிருக்கும் இஸ்லாமி சகோதரத்துவ இயக்கம் பற்றி மேற்குலக ஊடகங்கள் காட்டிக்கொண்டிருக்கும் தீவிரவாத போக்கு ஒரு மாயை என்பதை காட்டுகின்ற முறையில் அவர்களுடைய நடத்தை அமைந்திருப்பது மிக முக்கியமானது. இஸ்ரேலுக்குள் அரபு மக்கள் எதிர்கொண்டிருக்கும் மூன்றாம் தர பிரஜைகளுக்கான கவனிப்பு இனவாதம், பலமான மத உரிமை மீறல்களை கவனத்தில் கொள்ளும்பொழுது இந்த சமூகம் இஸ்ரேலுக்கு முன்மாதிரி காட்டியுள்ளது.

எகிப்து, டியூனீஷியா, மொரோக்கோ, ஜோர்தான், குவைட் உட்பட அரபு நாடுகளில் எல்லாம் மக்கள் பிரதிநிதிகளைக் கொண்ட பாராளுமன்றத்தில் பெரும்பான்மையை இந்த இயக்கம் கொண்டிருப்பதன் மூலம் அரபுலகின் எதிர்கால பற்றிய நம்பிக்கையை ஏற்படுத்திக் கொள்ள முடிகிறது.

மேற்குலகினால் மத்திய கிழக்கு வரை படத்தில் செயற்கையாக மேற்கொண்டுள்ள பிரிவினைகளுக்கு பதிலாக எதிர்காலத்தை உயர்வாக மதிக்கின்ற ஐக்கியம் மிகு அரபுலகொன்று உருவாகக்கூடிய முன் அடையாளங்கள் உதயமாகிக் கொண்டிருக்கின்றன என்பது கவனிக்கத்தக்கதாகும்.

- குமரன்

# தென்னமரவாடி தமிழ் குடும்பங்களுக்கு உலர் உணவு நிவாரணங்களை வழங்குங்கள்

## அஸ்வர் எம்.பி. அமைச்சர் வீரக்கோனிடம் வேண்டுகோள்



புல்மோட்டை பிரதேசத்துக்குட்பட்ட தென்னமரவாடி கிராமத்தில் மீள்குடியேற்றம் செய்யப்பட்டுள்ள தமிழ் குடும்பங்களுக்கு உடனடியாக மீள்குடியேற்ற உலர் உணவு நிவாரண உதவிகளை வழங்குமாறு பாராளுமன்ற உறுப்பினர் ஏ.எச்.எம். அஸ்வர் மீள்குடியேற்ற அமைச்சர் குணரத்ன வீரக்கோனை வேண்டியுள்ளார்.

சென்றவாரம் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் புனரமைப்பு நடவடிக்கைகள் சம்பந்தமாக புல்மோட்டை கிராமத்துக்கு விஜயம் செய்த அல்ஹாஜ் அஸ்வர் அங்கு குறிஞ்சிப்பிட்டி பிரதேசசபைத்தலைவர் தௌபீக், அமைச்சர் சுசந்த புஞ்சிநிலமேயின் செயலாளர் மஹேஷ் ஆகியோருடன் அக்கிராமத்துக்கு விஜயம்செய்து மக்களின் குறைகளைக் கேட்டறிந்தார்.

திருகோணமலை மாவட்டத்தை பிரதிநிதித்துவப் படுத்தும் ஒரு தமிழ் பாராளுமன்ற பிரதிநிதியும் தங்களது கிராமத்து குறைகளைத் தீர்க்க இன்றுவரை முன்வரவில்லை என்பதையும் அவ்வூர் மக்கள் கூட்டத்தில் தெரிவித்தனர்.

30 வருடகாலமாக அக்கிராமத்தில் வசித்த மக்கள் முல்லைத்தீவு போன்ற பிரதேசங்களுக்கு இடம்பெயர்ந்து சென்றபிறகு, தற்பொழுது ஏற்பட்டுள்ள சமாதான சூழ்நிலை காரணமாக மீண்டும் தென்னமரவாடி கிராமத்துக்கு வந்துள்ளனர். எனினும், அவர்களுக்கு போக்குவரத்துக்குரிய சீரான பாதைகளோ, மருத்துவமனைகளோ, பிள்ளைகள் கல்வி கற்பதற்கு பாடசாலை போன்ற அடிப்படை வசதிகளோ இல்லாமல் மிகவும் கஷ்டமான நிலையில் வாழ்ந்து வருகின்றனர்.

இவர்கள் எதிர்நோக்கியுள்ள இந்த வாழ்வாதார பிரச்சினைகளுக்கு தீர்வுபெறுவதற்கு சம்பந்தப்பட்ட அமைச்சுகளோடு தொடர்புகொண்டு நடவடிக்கை எடுப்பதாக பாராளுமன்ற உறுப்பினர் அஸ்வரிடம் கூறினார். அங்கு ஆண்கள், பெண்கள் கூடியிருந்த கூட்டத்தில் அவர் பேசினார்.

'ஒரு கிராமத்துக்கு ஒரு வேலைத்திட்டம்' என்ற பொருளாதார அபிவிருத்தி அமைச்சின் வேலைத்திட்டத்தின்கீழ் இக்கிராமத்துக்கு ஆரம்பப் பாடசாலை ஒன்றைப் பெற்றுத்தருவதற்கு தாம் சிபாரிசு செய்துள்ளதாக பிரதேசசபையின் உபதலைவர் தௌபீக் தெரிவித்தார்.

# பிங்கிரிய தொகுதி அபிவிருத்திக்கு மு.கா. உறுப்பினர்கள் நிதி ஒதுக்கீடு

வடமேல் மாகாண சபை உறுப்பினர்களான சட்டத்தரணி றிஸ்வி ஜவஹர்ஷா மற்றும் முஹம்மத் தஸ்லீம் ஆகியோரது மாகாண சபை பண்முகப்படுத்தப்பட்ட நிதியின் மூலம் பிங்கிரிய தொகுதிக்கான அபிவிருத்தி திட்டங்களுக்கு ஒதுக்கீடுகள் செய்யப்பட்டுள்ளன.

குளி/யகம்வெல மு. வித்தியாலயத்திற்கான ஒலிபெருக்கி வசதிகளை பெற ரூபா 20,000 மேலும் மனாருல் ஹூதா அரபுக் கல்லூரிக்கு பிளாஸ்டிக் கதிரைகளை பெற ரூபா 15,000 மேலும் எதுன்கஹகொடுவ மத்திய கல்லூரியின் சிறுவர் பூங்கா அமைப்பதற்காக ரூபா 60,000 மேலும் நாகொள்ளாகொட இளைஞர் கழகத்திற்கு பிலாஸ்டிக் கதிரைகளை பெற 20000 ரூபாவும் கினியம ஆயிஷா பள்ளிவாயலுக்கு மின் இணைப்பைப் பெற்றுக் கொடுக்க ரூபா 85,000 அரோமா. வி. கழகத்திற்கான ஒலிபெருக்கி வசதிகளை பெற ரூபா 35000 ரூபாவுமாக 2,15,000 ரூபாவை சட்டத்தரணி றிஸ்வி ஜவஹர்ஷா ஒதுக்கியுள்ளார்.

அதேவேளை, மா.சபை உறுப்பினர் தஸ்லீம் எதுன்கஹ கொடுவ முஸ்லிம் மத்திய கல்லூரிக்கு 40,000 ரூபாவும் யகம்பெல மையவாடிக்காக 50,000 ரூபாவும் மொத்தமாக 90,000 ரூபாவை ஒதுக்கியுள்ளார். அபிவிருத்தித் திட்டங்கள் பிங்கிரிய தொகுதி மு.க. அமைப்பாளர் ஷாம் மௌலானாவின் மேற்பார்வையில் ஆரம்பிக்கப்பட்டு செயற்படுத்தப்பட்டு வருகின்றது.

# அரபுக் கல்லூரிக்கு மாணவர் அனுமதி

புத்தளம் பாத்திமா அரபுக் கல்லூரிக்கு புதிய மாணவிகள் சேர்த்துக் கொள்ளப்படுகின்றனர். 13 வயதுக்குட்பட்ட அல்குர்ஆனை சரளமாக ஓதத் தெரிந்தவர்கள் விண்ணப்பிக்கலாம். அனாதைப் பெண்கள், கற்க வசதியற்றவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.

அத்துடன் இக்கல்லூரியில் கற்பிக்கத் தகுதியுள்ள முஅல்லிமார்கள் தேவைப்படுகின்றனர். பாதுகாப்பான தங்குமிடம், உணவு மேலும் பல சலுகைகள் வழங்கப்படும்.

தொடர்புகளுக்கு: அதிபர், பாத்திமா பெண்கள் அரபுக் கல்லூரி, கொழும்பு வீதி, கடயாமோட்டை, கெம்பட்டை, நாகவில்லு. தொ.பேசி: 0775361023

## தனியார் வைத்தியக் கல்லூரி வேண்டாம்

# 10 இலட்சம் கையெழுத்து வேட்டை

தனியார் வைத்தியக் கல்லூரிகளை நிறுவுவதற்கு எதிர்ப்புத் தெரிவித்தும், நிறுவப்பட்டுள்ள கல்லூரிகளை மூடுவதுமாறு வலியுறுத்தியும் 10 இலட்சம் கையெழுத்துகளைத் திரட்டும் பணிகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

தனியார் வைத்தியக் கல்லூரிக்கு எதிரான அமைப்பு, கற்றோர் ஒன்றியம் ஆகிய வற்றினால் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள இந்நடவடிக்கை கோட்டை ரயில் நிலையத்துக்கு முன்னால் கடந்த திங்கட்கிழமை ஆரம்பித்து வைக்கப்பட்டது.

வைத்தியர்கள், தாதிமார்கள், சுகாதார தொழிற்சங்க பிரதிநிதிகள், பல்கலைக்கழக விரிவுரையாளர்கள் உட்பட பெரும் திரளானோர் இந்நிகழ்வில் பங்கேற்றனர்.

தனியார் வைத்தியக் கல்லூரிகளை அகற்றும் பாரிய திட்டத்தின் முதல் அங்கம் மாத்திரமே இதுவென்றும், அடுத்து வரும் காலங்களில் பாரிய போராட்டம் முன்னெடுக்கப்படும் என்றும் டாக்டர் அசங்க விக்கிரமசிங்க தெரிவித்தார்.

## பட்டதாரி நியமனங்களில் பாரபட்சம்

# அம்பாறை மாவட்ட பட்டதாரிகள் ஜனாதிபதி, அமைச்சர்களுக்கு மகஜர்





நாட்டிலுள்ள ஏனைய ஏழு மாகாணங்களில் 2012 காலப்பகுதி வரை பட்டம் பெற்ற பட்டதாரிகளுக்கு பட்டதாரி பயிலுனர் நியமனம் வழங்கப்பட்டுள்ள போதிலும் வடக்கு, கிழக்கு மாகாணங்களில் மாத்திரம் 2009ஆம் ஆண்டு காலப்பகுதியை வரையறை செய்து நியமனம் வழங்கப்பட்டிருக்கின்றது.

இதனைத் தளர்த்தி 2012ஆம் ஆண்டு வரை பட்டம் பெற்ற பட்டதாரிகளுக்கு பட்டதாரி பயிலுனர் நியமனம் வழங்குமாறு அரசைக் கோரும் தீர்மானமொன்று அம்பாறைமாவட்டபட்டதாரிகளால்நிறைவேற்றப்பட்டது.

அம்பாறை மாவட்டத்தில் 2011 தொடக்கம் 2012 வரையான காலப்பகுதியில் பட்டம்பெற்ற பட்டதாரிகளின் ஒன்று கூடல் சாய்ந்தமருது அல்-ஹிலால் வித்தியாலயத்தில் 24ஆம் திகதி நடைபெற்றது. அதன்போதே இத்தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

இவ்விடயம் தொடர்பாக மாவட்டத்திலுள்ள அமைச்சர்களை சந்தித்து அவர்களூடாக ஜனாதிபதியின் கவனத்திற்கு கொண்டுசென்று நியமனம் பெற்றுக் கொள்வதற்கு நடவடிக்கை மேற்கொள்ளவும் கலந்துரையாடப்பட்டது.

பட்டதாரி பயிலுனர்களை ஆட்சேர்ப்பு செய்வதற்காக விண்ணப்பங்கள் கோரப்பட்டபோது அதில் பட்டம் பெற்ற ஆண்டு வரையறை செய்யப்படவில்லை. அவ்வாறு விண்ணப்பித்து நேர்முகப்பரீட்சைக்கு அழைக்கப்பட்டவர்களுக்கு நியமனம் வழங்காமல் ஏமாற்றப்பட்டுள்ளார்கள்.

ஒவ்வொரு மாவட்டத்திலும் 1360 பட்டதாரிகளுக்கு பயிலுனர் நியமனம் வழங்குவதற்கு அரசு நடவடிக்கை மேற்கொண்டபோதிலும் அம்பாறை மாவட்டத்தில் இது வரை 1180 பேருக்கு மாத்திரமே நியமனம் வழங்கப்பட்டுள்ளதாகவும் சுட்டிக் காட்டப்பட்டது.

இது தொடர்பான மகஜரொன்றை ஜனாதிபதி, நிதி அமைச்சர், பொது நிர்வாக உள்நாட்டலுவல்கள் அமைச்சர், அரசாங்க அதிபர் ஆகியோர்களுக்கு அனுப்புவதற்கும் ஒன்றுகூடலில் தீர்மானிக்கப்பட்டது.



வலது குறைந்தவர்களுக்கான முச்சக்கர மிதிவண்டி வழங்கும் நிகழ்வில் வட மாகாண ஆளுநரின் பிராந்திய ஆணையாளர் எஸ்.எல்.டீன் ரசூல்நகர் எம். வஹாப் என்பவருக்கு முச்சக்கர மிதிவண்டியொன்றை வழங்குவதையும் அருகில் சமூக சேவை அதிகாரி எம். அஸ்ஹரையும் காணலாம்.

(படம்: ஏ.சி.ஏ. மிஸ்காத், புத்தளம்)

# நீதிக்கும் நியாயத்துக்கும் கிடைத்த மிகப்பெரிய வெற்றி

## எகிப்து ஜனாதிபதியின் வெற்றிக்கு முபாறக் மௌலவி வாழ்த்து

எகிப்து நாட்டின் புதிய ஜனாதிபதியாக தெரிவு செய்யப்பட்டுள்ள முஹம்மத் முர்ஷிக்கு அகில இலங்கை உலமா கட்சி வாழ்த்துச் செய்தி ஒன்றை அனுப்பி வைத்துள்ளது. உலமா கட்சியின் தலைவர் முபாறக் அப்துல் மஜீத்தினால் அனுப்பி வைக்கப்பட்டுள்ள வாழ்த்துச் செய்தியில் குறிப்பிடப்பட்டுள்ளதாவது,

தங்களின் வெற்றி என்பது நீதிக்கும் நியாயத்துக்கும் கிடைத்த மிகப்பெரிய வெற்றியாகவே கருதப்படுகின்றது. அநீதி எத்தனை காலம் அடக்குமுறையுடன் ஆட்சி செய்தாலும் என்றாவது ஒருநாள் நீதிக்கு வெற்றி கிடைத்தே தீரும் என்பதை இத்தேர்தல் வெற்றி சுட்டிக்காட்டுகிறது.

முஸ்லிம்களை மிகப் பெரும்பான்மையாகக் கொண்ட இஸ்லாமிய புராதன வரலாறு கொண்ட எகிப்தை அந்நிய நாடுகளின் தலையீடுகளுக்கு அடிபணியாத சுயமரியாதையும், இறைமையும் கொண்ட நாடாக மாற்றி அந்நாட்டு மக்களின் சமய விழுமியங்களின் அடிப்படையிலான நீதிமிக்க நாடாக மாற்ற வேண்டும் என்ற சிந்தனை சுமார் 80 வருடங்களின் முன்பு இஸ்லாமிய அறிஞர்களினால் விதைக்கப்பட்டது.

இதன் காரணமாக இமாம் ஹசனுல் பன்னா, அறிஞர் சைய்யித் குதுப் போன்ற சிந்தனையாளர்கள் பலர் தமது வாழ்வை தியாகம் செய்தனர். ஆயிரக்கணக்கான சகோதரர்கள் சிறையிலடைக்கப்பட்டனர், கொல்லப்பட்டனர். ஆனாலும் ஆயுதப் போராட்டம் இன்றி ஜனநாயக ரீதியில் நீதியை நிலைநாட்ட முடியும் என்ற தொடர்ச்சியான போராட்டத்துக்கு இப்போது வெற்றி கிடைத்துள்ளது.

அத்துடன் எகிப்திய சமூகவாதிகளான இஸ்லாமிய அறிஞர்களின் தியாகத்துக்கும் சிந்தனைக்கும் இத்தனை வருடங்களின் பின்னரே வெற்றி கிடைத்துள்ளமை நீதிக்கும், சமயம் சார்ந்த புத்திஜீவிகளின் போராட்டத்துக்கும் என்றாவது ஒருநாள் வெற்றி கிடைத்தே தீரும் என்பதையே உலகுக்கு காட்டியுள்ளது.

எனவே, தங்களது ஆட்சியில் எகிப்திய முஸ்லிம்களின் தன்மானம் காப்பாற்றப்பட்டு அனைத்து மக்களுக்கும் நீதியான, சமாதானமான வாழ்வு கிடைக்க வேண்டும் என வாழ்த்துகிறோம் என முபாறக் அப்துல் மஜீத் குறிப்பிட்டுள்ளார்.

# ஆண்டு 17இல் தடம்பதிக்கும் 'முஸ்லிம் மீடியா போரம்'

SLMMF

ஸ்ரீ லங்கா முஸ்லிம் மீடியா போரம் இன்று தனது 16வது அகவையைப் பூர்த்தி செய்து 17வது ஆண்டில் கால் பதித்துள்ளது. பெருமைக்கும் பெரு மகிழ்ச்சிக்குமுரிய இந்நன்நாளில் முஸ்லிம் மீடியா போரத்தின் கடந்த கால சாதனைகளையும் சோதனைகளையும் சற்று தூரம் பின்னோக்கிப் பார்க்க வேண்டியுள்ளது. ஏனெனில் அவை, ஒரு ஊடக வரலாற்றுப் பதிவுகளாகும்.

1995ஆம் ஆண்டு ஜூன் மாதம் 9ஆம் திகதி ஸ்ரீ லங்கா முஸ்லிம் மீடியா போரம் அங்குரார்ப்பணம் செய்து வைக்கப்பட்டது. அந்த அங்குரார்ப்பணமே முஸ்லிம் ஊடகவியலாளர்களுக்கு அர்ப்பணமாக வழங்கப்பட்டது. அவ்வர்ப்பணம் இற்றை நாள் வரை வெற்றிநடை, வீறுநடை போட்டு இலங்கையின் எண்டிசையிலும் பெரு விருட்சமாக வியாபித்து நிற்கிறது.

மீடியா போரம் அங்குரார்ப்பணம் செய்யப்பட்ட நாளில் வெறும் 34 பேர் மட்டுமே சங்கத்தில் அங்கத்துவம் பெற்றிருந்தனர். ஆயினும் அந்த முப்பத்து நால்வரும் இந்நாட்டின் புகழ்மிக்க ஊடகவியலாளர்கள் என்பதை மறுப்பதற்கில்லை. போரத்தின் ஸ்தாபக தலைவராக பிரபல தேசிய, சர்வதேசிய ஊடகவியலாளர் எஸ்.பி.ஸி. ஹலால்தீன் ஏக மனதாக தெரிவு செய்யப்பட்டார். கௌரவ செயலாளராக தினகரன் ஆசிரியர் பீடத்தில் பணியாற்றிக் கொண்டிருந்த சிரேஷ்ட ஊடகவியலாளர் என்.எம். அமீனும் ஏகமனதாகவே தெரிவு செய்யப்பட்டார். அது போலவே கௌரவ பொருளாளராக நவமணி தேசிய வார ஏட்டின் பிரதம ஆசிரியரும் மூத்த ஊடகவியலாளருமான எம்.பி.எம். அஸ்ஹர் போட்டியின்றி தெரிவு செய்யப்பட்டார்.

இன்று எஸ்.பி.ஸி. ஹலால்தீனும் எம்.பி.எம். அஸ்ஹரும் நம்மத்தியில் இல்லை. ஆயினும் இவர்கள் இருவரும் ஊடகத்துறைக்கும் முஸ்லிம் மீடியா போரத்துக்கும் ஆற்றிய பங்களிப்பும் கடும் உழைப்பும் என்றென்றும் நினைவு கூரத்தக்கவை. ஸ்தாபக உறுப்பினர்களில் பிரதான பதவி வகித்தவர்கள் என்ற வகையில் என்.எம். அமீன் மட்டுமே இற்றைவரை கௌரவ செயலாளராகவும் தொடர்ச்சியாக கௌரவ தலைவராகவும் தெரிவு செய்யப்பட்டு வருகிறார். இம்முறையும் கௌரவ தலைவராக போட்டியின்றி தெரிவு செய்யப்பட்டுள்ளார். இதுவும் கூட, ஏனைய ஊடக அமைப்புக்களைப் பொறுத்தவரை ஒரு சாதனை என்றே கூற வேண்டும்.

34 அங்கத்தவர்களுடன் அங்குரார்ப்பணம் செய்து வைக்கப்பட்ட மீடியா போரம் இன்று ஆல் போல் தழைத்து அறுகு போல் வேரூன்றி விட்டது. உண்மையில் ஆச்சரியப்படத்தக்க விடயம் என்னவெனில் இன்று போரத்தில் 600க்கும் மேற்பட்ட ஊடகவியலாளர்கள் அங்கத்துவம் வகிக்கின்றனர். இவர்கள் இலங்கையின் எண்டிசையிலிருந்தும் உள்வாங்கப்பட்டுள்ளனர். கிட்டத்தட்ட எல்லா முஸ்லிம் ஊடகவியலாளர்களும்-அச்சு, இலத்திரனியல் மற்றும் இணையம் ஆகியவற்றில் பணியாற்றுகின்ற எல்லா ஊடகவியலாளர்களும் (சுயாதீன ஊடகவியலாளர்கள் உட்பட) மீடியா போரத்தில் அங்கம் வகிப்பது மீடியா போரத்தின் பலத்தையும் ஊடகவியலாளர்கள் மீடியா போரத்தின் மீது வைத்திருக்கும் அபரிமித நம்பிக்கையையுமே கோடிட்டுக் காட்டுகிறது.

இலங்கையில் தற்போது பலம் வாய்ந்த ஆறு ஊடக அமைப்புக்கள் இருக்கின்றன. தமிழ், சிங்கள, ஆங்கில ஊடகவியலாளர்களுக்கென தனியாகவும் பொதுவாகவும் இவ்வமைப்புக்கள் உள்ளன. இவ்வமைப்புக்களின் கூட்டமைப்பில் ஓர் இணை அமைப்பாக ஸ்ரீலங்கா முஸ்லிம் மீடியா போரமும் இணைந்துள்ளது. ஆயினும் ஏனைய ஐந்து அமைப்புக்களையும் விட ஒரு படி மேலே சென்று நன்கு பிரபலமானதும் செல்வாக்கு மிக்கதுமான அமைப்பாக போரம் மாறி உள்ளது எனில் அது மிகையல்ல.

ஸ்ரீலங்கா முஸ்லிம் மீடியா போரம் உருவாக்கப்பட்டு இத்தனை ஆண்டுகளில் பல்வேறு சாதனைகளைப் புரிந்திருக்கிறது.

★ உயர் வகுப்பு மாணவர்களுக்காக ஐம்பதுக்கும் மேற்பட்ட செயலமர்வுகளையும் கருத்தரங்குகளையும் வெற்றிகரமாக நடத்தி சான்றிதழ்கள் வழங்கியுள்ளது.

★ ஊடகவியலாளர்களுக்கான ஒரு நாள், இருநாள் கருத்தரங்குகளை நடத்தி அவர்களை நெறிப்படுத்தியிருக்கிறது.

★ பாடசாலைகள் மட்டுமன்றி கல்லூரிகள், பல்கலைக்கழகங்கள், ஆசிரியர் கலாசாலைகள், அரபுக் கல்லூரிகள் ஆகியவற்றிலும் கருத்தரங்குகளை நடத்தி, சிறந்த பெறுபேறுகளை வழங்கியிருக்கிறது. இக்கருத்தரங்குகளில் பங்கு கொண்ட அனைவருக்கும் சான்றிதழ்கள் வழங்கியிருக்கின்றது.

**கலைவாதி கலீல்**
**தேசிய அமைப்பாளர்**

★ இக்கருத்தரங்குகளின் பொருட்டு இலங்கையின் எண்டிசைக்கும் சென்று இரண்டொரு நாள் தங்கி நின்று இலங்கையின் புகழ் பெற்ற மூத்த ஊடகவியலாளர்களைக் கொண்டு விரிவுரைகள் நடத்தப்பட்டுள்ளன.

★ அங்கத்தவர்களின் பிள்ளைகளுக்கு புலமைப் பரிசில்களும் அங்கத்தவர்களுக்கு வெளிநாட்டுப் பயிற்சிகளும் வழங்கப்பட்டுள்ளன.

★ சுனாமி மற்றும் இயற்கை அனர்த்தங்களின் போது பாதிக்கப்பட்ட எமது அங்கத்தவர்களுக்கு பணம் மற்றும் பொருள் உதவிகள் வழங்கப்பட்டுள்ளன. கடந்த வருடம் வெள்ளத்தினால் பாதிக்கப்பட்ட கிழக்கு மாகாண ஊடகவியலாளர்கள் 77 பேருக்கு இலட்சக்கணக்கான ரூபாய்கள் பகிர்ந்தளிக்கப்பட்டன.

நோய்வாய்ப்பட்டிருக்கும், விபத்தினால் பாதிக்கப்பட்டிருக்கும் குண்டர்களால் தாக்குதலுக்குள்ளாகியிருக்கும் எமது ஊடகவியலாளர்களுக்கு பணத்தாலும் மனத்தாலும் உதவிகள் வழங்கியிருக்கிறது மீடியா போரம்.

★ இலத்திரணியல் ஊடக (தொலைக் காட்சி, வானொலி) பயிற்சி நெறிகளை உருவாக்கி அதில் ஆர்வமுடையோருக்கு ஆறுமாத பயிற்சிகளை வழங்கி அவர்களைச் சிறந்த இலத்திரணியல் ஊடகவியலாளர்களாக உருவாக்கியமை. மீடியா போரத்தின் பாரிய பணிகளில் ஒன்றாகும். மிகச் சிறந்த வானொலி, தொலைக்காட்சி வளவாளர்கள் பயிற்சியளித்தமை குறிப்பிடத்தக்கது.

★ ஊடகம் மற்றும் ஊடகவியலாளர்களுக்கு எதிராக அரசும் அரச சாரா அமைப்புக்களும் மேற்கொள்ளும் நடவடிக்கைகளை உடனடியாகக் கண்டித்தும் அறிக்கை விட்டும் கோட்டை புகையிரத நிலையத்தின் முன் ஆர்ப்பாட்டம் நடத்தியும் ஊடக உரிமையைக் காப்பதற்காக போராடியிருக்கிறது மீடியா போரம். இவ்வாறே முஸ்லிம் சமுதாயத்துக்கெதிரான அரசு மற்றும் தனியார் அமைப்புக்களின் நடவடிக்கைகளைக் கண்டித்தும் போர்க்கொடி தூக்கியிருக்கிறது. தம்புள்ளைப் பள்ளிவாசல் தகர்க்கப்பட்ட சம்பவத்தைக் கண்டித்து ஏனைய அமைப்புக்களுடன் சேர்ந்து தனது கடும் கண்டனத்தையும் ஆட்சேபனையையும் செலுத்தியிருக்கிறது போரம். மேற்படி பள்ளி விவகாரம் தொடர்பாக ரி.என்.எல். தொலைக்காட்சி நடத்திய கருத்தரங்கொன்றில் கலந்துகொண்ட போரத்தின் தலைவர் என்.எம். அமீன் யதார்த்தத்தையும் முஸ்லிம் மக்களது நிலைப்பாட்டையும் சிங்கள சமுதாயத்துக்குப் புரிய வைத்து முஸ்லிம்கள் பற்றிய தப்பபிப்பிராயங்களைப் போக்கியிருக்கிறார்.

★ வருடா வருடம் நடைபெறும் ஆண்டிறுதிப் பொதுக் கூட்டத்தில் இந்நாட்டின் சிறந்த, சிரேஷ்ட ஊடகவியலாளர்களை கௌரவித்து அவர்களுக்குப் பொற்கிழி வழங்கி வருகிறது போரம். இதில் முஸ்லிம்கள் மட்டுமன்றி முஸ்லிமல்லாத ஒரு சிலரும் இணைத்துக் கொள்ளப்படுவது தனிச்சிறப்பம்சமாகும்.

பதவி விலகும் செயற்குழுவும் பல்வேறு நற்காரியங்களை ஆற்றியிருக்கின்றது. இக்காலகட்டத்தில் 5 செயலமர்வுகளை போரம் நடத்தியிருக்கின்றது.

மன்வானை, கிண்ணியா, சியம்பலகஸ்கொடுவ, புளிச்சாக்குளம், கொழும்பு ஆகிய இடங்களில் இச்செயலமர்வுகள் நடத்தப்பட்டன. இச்செயலமர்வுகளின் வெற்றிக்கு அவ்வப்பிரதேச அமைப்பாளர்கள் பெருந்துணை நின்றனர். செயலமர்வுகளில் பங்கு கொண்ட அனைவருக்கும் சான்றிதழ்கள் வழங்கப்பட்டன.

## மூத்த ஊடகவியலாளர்கள் கௌரவிப்பு

எமது அங்கத்தவர்களின் இன்ப துன்பங்களில் பங்கு கொள்ளும் மீடியா போரம் தன்னால் இயன்ற அளவு உதவிகளை வழங்கி வருவதையும் இவ்விடத்தில் சுட்டிக்காட்ட வேண்டியுள்ளது.

தெற்காசிய ஊடக அமைப்பில் மீடியா போரமும் இணைந்திருப்பது எமது பலத்தை பன்மடங்கு அதிகரித்திருப்பதுடன் பல்வேறு உதவிகளையும் பெற வாய்ப்பளித்துள்ளமையை மறுப்பதற்கில்லை.

வெள்ளையிலே ஒரு புள்ளி போல் இரண்டு சம்பவங்கள் மீடியா போரத்தின் வரலாற்றில் கரும் புள்ளிகளாக அமைந்தன.

அவற்றுள் ஒன்று மீடியா போரத்தை உடைத்துக் கொண்டு ஒரு அதிருப்தி குழுவினர் மாற்று மீடியா அமைப்பொன்றை உருவாக்கியமை. (ஆனால் அது கால சக்கரத்தின் சுழற்சியால் கரைந்து போய்விட்டது)

இல. 310 டீ.ஆர். விஜயவர்தன மாவத்தையில் அமைந்துள்ள தபால் பகுதி தலைமை அலுவலக கேட்போர் கூடத்தில் நடைபெறும் 16ஆவது வருடாந்த மாநாட்டில் மூத்த ஊடகவியலாளர் கௌரவிப்பும் மீடியா டிரக்டரி வெளியீடும் ஒரு முக்கிய அம்சமாக இடம்பெறுகிறது. அது மட்டுமல்லாது மீடியா போரத்தின் வரலாற்றில் முதற் தடவையாக நிறைவேற்றுக்குழு உறுப்பினர்கள் போட்டியேதுமின்றி தெரிவு செய்யப்பட்டுள்ளார்கள். இது மீடியா போரத்தின் மீது அங்கத்தவர்கள் வைத்திருக்கும் நம்பிக்கையையும் புரிந்துணர்வையுமே காட்டுகிறது.

போரத்தின் தலைவர் என்.எம். அமீன் தலைமையில் நடைபெறும் இன்றைய விழாவில் தேர்தல் ஆணையாளர் திரு. மஹிந்த தேசப்பிரிய பிரதம அதிதியாக கலந்து கொள்கிறார்.

தமிழக அறிஞரும் அகில இந்திய முஸ்லிம் லீக்கின் பொதுச் செயலாளருமான திருமதி பாத்திமா முஸஃப்பர் சிறப்புரை ஆற்றுகிறார். இவர் முன்னைநாள் தமிழக முஸ்லிம் லீக் தலைவர் அறிஞர் ஆ.கா.அ. அப்துஸ்ஸமது அவர்களின் புதல்வியாவார்.

காலை 9.30 மணிக்குத் தொடங்கவுள்ள ஆண்டு விழாவுக்கு மீடியா போர அங்கத்தவர்களும் பிரமுகர்களும் அழைக்கப்பட்டுள்ளார்கள். ஆண்டு விழா வெற்றிபெற வாழ்த்துக்கள்.



முஸ்லிம் மீடியா போரத்தின் புளிச்சாங்குளக் கருத்தரங்கு... (படம்: நமாஸ்)

# பாகிஸ்தான் அதிபர் சர்தாரி மீதான ஊழல் வழக்கை விசாரிக்கவேண்டும்

## பிரதமர் அஷ்ரபுக்கு சுப்ரீம் கோர்ட் கட்டளை



சுப்ரீம் கோர்ட்டு உத்தரவுப்படி பாகிஸ்தான் அதிபர் ஆசிப் அலி சர்தாரி மீதான ஊழல் புகாரை விசாரிக்க சுவிட்சர்லாந்து அரசுக்கு கடிதம் எழுதி தகவல்பெற முன்னாள் பிரதமர் கிலானி மறுத்து விட்டார்.

எனவே, அவர்மீது கோர்ட்டு அவமதிப்பு வழக்கு தொடரப்பட்டது. அதில், அவர் குற்றவாளி என சுப்ரீம் கோர்ட்டு தீர்ப்பளித்தது. மேலும் கோர்ட்டு கலையும் வரை அவருக்கு தண்டனையும் வழங்கப்பட்டது.

அதை தொடர்ந்து பிரதமர் பதவியில் இருந்து கிலானி நீக்கப்பட்டார். அவரது எம்.பி. பதவியும் பறிக்கப்பட்டது. இதையடுத்து, பாகிஸ்தானின் புதிய பிரதமராக ராஜா பர்வேஸ் அஷ்ரப் நியமிக்கப்பட்டு பதவி ஏற்றார்.

இவர் பாகிஸ்தான் மக்கள் கட்சி தலைவரும், அதிபருமான ஆசிப் அலி சர்தாரிக்கு மிக நெருக்கமானவர். இந்த நிலையில், ஆசிப் அலி சர்தாரிக்கு எதிரான ஊழல் வழக்கு சுப்ரீம் கோர்ட்டில் நீதிபதி நசீர்-உல்-முல்க் தலைமையிலான 3 பேர் அடங்கிய பெஞ்ச் முன்பு இன்று விசாரணைக்கு வந்தது.

அப்போது சர்தாரி மீதான ஊழல் புகாரை மீண்டும் விசாரிக்க பிரதமர் ராஜா பர்வேஸ் அஷ்ரபுக்கு நீதிபதிகள் உத்தரவிட்டனர். இந்த தகவலை அரசு தரப்பில் ஆஜரான அட்டர்னி ஜெனரல் இர்பான் சுதிரிடம் தெரிவித்தனர்.

மேலும், இதுகுறித்த அரசின் நிலைப்பாட்டை அடுத்த விசாரணை நடைபெறும் ஜூலை 12ஆம் திகதி அன்று கோர்ட்டில் தெரிவிக்கவும் உத்தரவிட்டனர். சுப்ரீம் கோர்ட்டின் இந்த அதிரடி உத்தரவு பாகிஸ்தானில் புதிதாக பொறுப்பேற்று இருக்கும் பிரதமர் அஷ்ரப்புக்கு இக்கட்டான சூழ்நிலையை ஏற்படுத்தி உள்ளது. ஏனெனில் சர்தாரி மீதான ஊழல் புகாரை விசாரிக்க மறுத்ததால்தான் கிலானி தனது பதவி இழந்தார். அதே நிலை மீண்டும் ஏற்படும் சூழல் உருவாகி உள்ளது.

# 17 பாகிஸ்தான் இராணுவ வீரர்களின் தலை துண்டிக்கப்பட்ட வீடியோவை வெளியிட்டது தலிபான்

ஆப்கானிஸ்தானில் உள்ள தலிபான்களை அமெரிக்க இராணுவம் வேட்டையாடி வருகிறது. இதற்கு பாகிஸ்தான் பல்வேறு வகைகளில் அமெரிக்காவுக்கு உதவிகள் செய்து வருகிறது.

இதனால் பாகிஸ்தான்மீது தலிபான்கள் கடுமையான கோபத்தில் உள்ளனர். அமெரிக்காவுக்கு உதவி செய்யாதீர்கள் என்று பாகிஸ்தான் அரசை தலிபான்கள் வற்புறுத்தி வருகிறார்கள். ஆனால், சர்வதேச அழுத்தம் காரணமாக அமெரிக்காவுக்கு பாகிஸ்தான் தொடர்ந்து உதவிசெய்து வருகிறது.

இதனால் கோபமடைந்துள்ள தலிபான்கள் பாகிஸ்தானின் வடமேற்கு மாவட்டமான திர் மாவட்டத்துக்குள் தலிபான்கள் ஊடுருவினார்கள். அங்குள்ள ஒரு சோதனைச் சாவடியை தாக்கினர்கள். அந்த சோதனை சாவடியில் பாதுகாப்புக்கு இருந்த பாகிஸ்தான் இராணுவ வீரர்கள் 18 பேரை தலிபான்கள் கடத்திச் சென்றனர்.



கடந்த ஞாயிற்றுக்கிழமை இந்த கடத்தல் சம்பவம் நடந்தது. பாகிஸ்தான் வீரர்களை மிரட்டி விட்டு விடுவித்து விடுவார்கள் என்று எதிர்பார்க்கப்பட்டது. ஆனால், 18 பாகிஸ்தான் வீரர்களையும் தலிபான்கள் தலையை துண்டித்து கொலை செய்திருப்பது தெரியவந்துள்ளது.

18 இராணுவ வீரர்களும் தலை துண்டிக்கப்படும் வீடியோ காட்சிகளை தலிபான்கள் வெளியிட்டுள்ளனர். தலிபான் இயக்கத்தில் உள்ள தெரீக்-ஈ-தலிபான் என்ற பிரிவு இந்த தலை துண்டிப்புக்கு பொறுப்பு ஏற்றுள்ளது.

தலிபான்கள் வெளியிட்ட அந்த வீடியோ தொடக்கத்தில் பாகிஸ்தானில் உள்ள தலிபான் இயக்கத் தலைவர் ஹகிமுல்லா மசூத் பேசுகிறார். அவர் பேசுகையில், கடவுள் எங்களுக்கு இந்த வெற்றியை கொடுத்துள்ளார். பாகிஸ்தான் அரசு, அமெரிக்காவுக்கு உதவி செய்வதை நிறுத்தும்வரைஇத்தகைய போர்தொடரும்என்று கூறியுள்ளார்.

தலிபான்களின் இந்த மிரட்டல் பாகிஸ்தான் தலைவர்களை அதிர்ச்சியில் உறைய வைத்துள்ளது.

# போதையில் பக்கத்து வீட்டு நாயை உயிருடன் சாப்பிட்ட இளைஞர்

டெக்சாசில் பக்கத்துவீட்டுக்காரரின் நாயை உயிரோடு சாப்பிட்டவரை பொலிஸார் கைது செய்துள்ளனர்.

டெக்சாஸைச் சேர்ந்தவர் மைக்கேல் டெர்ரன் டேனியல் (வயது 22). அவர் போதைப் பொருள் உட்கொண்டுவிட்டு பக்கத்துவீட்டுகாரரின் நாயைப் பிடித்து கடித்து அதன் உடம்பில் உள்ள சதையை எடுத்துள்ளார். அதன் பிறகு அதை அடித்தும், கழுத்தை நெறித்தும் கொலை செய்தார். போதையில் செய்வதறியாது கை, வாய் மற்றும் ஆடையில் ரத்தக் கறையுடன் அமர்திருந்திருக்கிறார்.

இதைப் பார்த்து அதிர்ச்சி அடைந்த அப்பகுதி மக்கள் உடனடியாக பொலிஸாருக்கு தகவல் தெரிவித்தனர். உடனே பொலிஸார் சம்பவ இடத்திற்கு வந்து டேனியலை கைதுசெய்து சிகிச்சைக்காகமருத்துவமனைக்கு கொண்டு சென்றனர்.

கடந்த மே மாதம் மியாமியில் ரூடி யூஜின் என்பவர் போதைப் பொருள் உட்கொண்டுவிட்டு நிர்வாணக் கோலத்தில் வந்து தெருவோரம் வசிக்கும் நபர் ஒருவரின் முகத்தில் 80 சதவீதத்தை கடித்து தின்றுவிட்டார். இதையடுத்து பொலிஸார் ரூடியை சுட்டுக் கொன்றனர் என்பது குறிப்பிடத்தக்கது.

# நிகழ்வுகள்

## இஸ்லாஹிய்யா பழைய மாணவர் ஒன்றுகூடல்


மாதம்பை இஸ்லாஹிய்யா அரபுக் கல்லூரியில் கற்று வெளியாகிய கல்லூரியின் அனைத்து மாணவர்களுக்குமான ஒன்றுகூடல் நிகழ்வு எதிர்வரும் ஜூலை 3ம் திகதி செவ்வாய்க்கிழமை இல. 77 தெமடகொட வீதி, கொழும்பு - 09ல் அமைந்துள்ள இலங்கை ஜமாஅதே இஸ்லாமியின் தலைமையகமான தாருல் ஈமானில் நடைபெறவுள்ளதாக ஏற்பாட்டுக்குழுவினர்தெரிவிக்கின்றனர். இதுவரை இஸ்லாஹிய்யாவிலிருந்து கற்று வெளியேறிய 12 தொகுதி மாணவர்களையும் குறித்த திகதியில் காலை ஒன்பது மணிக்கு சமூகம் தருமாறு பழைய மாணவர் அமைப்பின் ஏற்பாட்டாளர்கள் தெரிவிக்கின்றனர். மேலதிக விபரங்களுக்கு 0776614826, 0777412053, 0773573679, 0777874984

## கலாநிதி பதியுத்தீன் நினைவாக சுவடிகூட நிகழ்ச்சி

இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபன முஸ்லிம் சேவையில் 24ஆம் திகதி இரவு 8.25க்கு முன்னாள் கல்வியமைச்சர் கலாநிதி பதியுதீன் மஹ்மூதின் 15வது வருட நினைவாக சுவடிகூட நிகழ்ச்சி இடம்பெறுகிறது.

முஸ்லிம் சேவை ஆலோசகர் எம்.இஸட். அகமட் முனவ்வர் நிகழ்ச்சியைத் தொகுத்தளிக்கிறார்.

## வஹீதா அவ்தாத்தின் தந்தைக்கொரு தாலாட்டு



மகா வித்வான் எம்.ஏ. றஹ்மானின் புதல்வி ஆசிரியை வஹீதா அவ்தாத் எழுதிய தந்தைக்கொரு தாலாட்டு என்ற கவிதை நூலின் வெளியீட்டு விழா 1ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை கெவி ஓயா அல்மனார் தேசிய பாடசாலையில் நடைபெறும்.

பாடசாலை அதிபர் எம்.எஸ். மீராஸ் தலைமையில் நடைபெறும் இவ்விழாவில் புரவலர் ஹாஸிம் உமர் பிரதம அதிதியாக கலந்து கொள்கிறார். கௌரவ அதிதியாக மன்னார் தமிழ்ச்சங்கத் தலைவர் அருட் திரு. தமிழ்நேசன் அடிகள் கலந்து கொள்கிறார்.

சிறப்பதிதிகளாக ஊர்ப்பிரமுகர்கள் கலந்து கொள்ளும் இவ்விழாவில் கொழும்பிலிருந்து நவமணியின் பிரதம ஆசிரியர் என்.எம். அமீன், எஸ்.ஐ. நாகூர்கனி, சமூகஜோதி ரபீக், மக்கள் காதர் , கலைவாதி கலீல் ஆகியோரும் கலந்து கொள்கின்றனர்.

நவமணி ஆசிரியர்பீட ஏ.எல்.எம்.சத்தார் நூல் நயவுரை நிகழ்த்துகிறார். தமிழகத்திலிருந்து வருகை தந்துள்ள பிரபல பேச்சாளர் அகில இந்திய முஸ்லிம் லீக்கின் பொதுச் செயலாளர் திருமதி பாத்திமா முஸஃப்பர் சிறப்புரை ஆற்றுகிறார். நூலின் முதற் பிரதியைப் புரவலர் ஹாசிம் உமர் பெற்றுக் கொள்கிறார்.

## திரு/சாஹிரா அஹதிய்யாவில் மீலாதுன்னபி பரிசளிப்பு விழா

(கே.எம்.எம். பௌமி, திருகோணமலை)

திருகோணமலை சாஹிராக் கல்லூரியில் சிறப்பாக இயங்கிவரும் சாஹிரா அஹதிய்யாப் பாடசாலையின் மீலாதுன் நபி பரிசளிப்பு விழா ஜூலை மாதம் 1ம் திகதி பிற்பகல் 3 மணிக்குத் திருகோணமலை ஸாஹிராக் கல்லூரி பிரதான மண்டபத்தில் சாஹிரா கல்லூரி அதிபரும் அஹதிய்யாவின் தலைவருமான சாமஸ்ரீ எஸ்.எம். முஹம்மத் அலி தலைமையில் நடைபெறுகின்றது.

இவ்வைபவத்தில் அஹதிய்யாத் தேசிய அமைப்பாளரும் கிழக்கு மாகாண இணைப்பாளருமான தேசகீர்த்தி அல்ஹாஜ் ஏ.எல்.எம். அஸ்வர்சிறப்பதிதியாககலந்துகொள்ளவுள்ளார்.

## அஹதிய்யா இடைநிலை பரீட்சை 30ஆம் திகதி நாடெங்கும்

(முல்லையூர் அஸ்வர்)

அஹதிய்யா மத்திய சம்மேளனம் தேசிய ரீதியாக நடத்தும் அஹதிய்யா இடைநிலைப் பரீட்சை ஜூன் 30ஆம் திகதி காலை 9 மணி முதல் மாலை 4 மணி வரை நாடளாவிய ரீதியில் நடைபெறுகின்றது.

சகல விண்ணப்பதாரிகளுக்கும் பிரவேசப் பத்திரங்கள் அனுப்பப்பட்டுள்ளதாகவும் சுமார் ஆறாயிரம் பரீட்சார்த்திகள் இம்முறை தோற்றவுள்ளதாகவும் அஹதிய்யா பரீட்சை ஆணையாளர் அல்ஹாஜ் ஏ.எல். செய்னுல் ஆப்தீன் தெரிவித்துள்ளார்.

## தெஹிவளை கௌஸிய்யாவில் 7ஆவது பட்டமளிப்பு விழா

தெஹிவளை அல் ஜாமிஅதுல் கௌஸிய்யா அரபு கலாபீடத்தின் ஆறாவது மௌலவி, ஏழாவது ஹாபிழ் பட்டமளிப்பு விழா 08ம் திகதி ஞாயிறு காலை 9 மணிக்கு மத்ரஸா மண்டபத்தில் இடம்பெறவுள்ளது.

அஸ்ஸெய்யித் முஹம்மத் ஹஸன் கோயாத்தங்கள் அஸ்ஸெய்யித் முஹம்மத் ஹுசைன் கோயாத்தங்கள் ஆகியோர் பிரதம அதிதிகளாக கலந்து கொள்கின்றனர். மேல் மாகாண ஆளுநர் அஸ்ஸெய்யித் அலவி மௌலானா கௌரவ அதிதியாக கலந்து கொள்கிறார்.

மாத்தளை நஜாஹிய்யா அரபுக் கல்லூரி அதிபர் மௌலவி ஏ.எல்.எம். முஹாஜிரீன் நத்வி சிறப்பு சொற்பொழிவாற்றவுள்ளார்.

## கண்டியில் அஹதிய்யா செயலமர்வு

(கண்டி நிருபர்)

கண்டி மாவட்ட அஹதிய்யா பாடசாலையில் கற்பிக்கும் ஆசிரியர்களுக்கான விஷேட செயலமர்வு 3ஆம் திகதி காலை 8.30 மணிக்கு கண்டி பழைய மாத்தளை வீதியிலுள்ள முஸ்லிம் லேடீஸ் யூனியன் மண்டபத்தில் நடைபெறும். இதில் பிரதேசத்தைச் சேர்ந்த அஹதிய்யா அதிபரும் ஆசிரியர்களும் கலந்து கொள்வர்.

இந்த செயலமர்வில் புதிதாக ஆரம்பிக்கப்படவுள்ள அஹதிய்யா பாடசாலைகளுக்கென பாட விதானப் பாடபதிவேடுகள் போன்றன வழங்கப்படவுள்ளதாக கண்டி மாவட்ட அஹதிய்யா பாடசாலைகளின் மத்திய சம்மேளனத் தலைவர் ஜே.எம். சில்மி தெரிவித்தார்.

நவமணி Education
தயாரிப்பு : சிஹாம் அபூபக்கர்
FOR ALL STUDENTS
OVERSEAS EDUCATION

# IBS Campus

## இஸ்லாமிய வங்கி, நிதித்துறையில் 4ஆவது தடவையாகவும் விருது



'Islamic Banking & Finance' துறையில், 4ஆவது தடவையாகவும் உலகப் பரிசினை வென்றுள்ளது IBS Campus நிறுவனம். தற்போது நிதியியல் சந்தையில் அதிவேகமாக வளர்ந்துவரும் ஒரு துறையாக 'இஸ்லாமிய வங்கித்துறை' காணப்படுகிறது.

'Islamic Banking & Finance' துறையில் உலகப் பரிசில்களை உருவாக்கும் இலங்கையின் ஒரே நிறுவனமாக திகழ்வதில் IBS Campus பெருமையடைகிறது.

ABE – The Association of Business Executives (ABE–UK) மற்றும் Institute of Islamic Banking & Insurance (IIBI-UK) போன்ற முதன்மையான நிறுவனங்களுடன் இணைந்து 'Islamic Banking & Finance' பாடநெறியினை இன்றைய கல்வித் திட்டத்திற்கு ஏற்ப இஸ்லாமிய நிதியியலை அறிமுகப்படுத்தி செயல்படுத்துகிறது IBS Campus நிறுவனம்.

அந்தவகையில், 'Islamic Banking & Finance' துறையில் கல்வி கற்கும் மாணவர்களுக்கு உலகப் பரிசினை தொடராக பெற்றுக் கொடுக்கும் முகமாக மாணவர்களை வழிநடத்திச் செல்வதில் பெருமையடைகிறது IBS Campus நிறுவனம்.

அதேநேரம், Concepts and Principals of Islamic Economics (Diploma Level), Islamic Finance (Advanced Level) போன்ற பாடநெறிகளில் உலகப் பரிசினைப் பெற்ற எமது மாணவர்களுக்கு IBS Campus நிறுவனம் மனமார்ந்த வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

**டிசம்பர் 2009 பரீட்சையில்:**
★ பர்ஹானா மொஹமட்
★ ரஷாத் ரஸ்ஸாக்
**ஜூன் 2010 பரீட்சையில்:**
★ பாத்திமா சியானா சுஹைப்
**ஜூன் 2011 பரீட்சையில்:**
★ மொஹமட் ரிபாஸ்
**டிசம்பர் 2011 பரீட்சையில்:**
★ பாத்திமா நுஸ்லா கப்பார்
★ மொஹமட் ஆகிப் அர்ஷத்

IBS

வங்கியில் தொழில்புரிவோர், வழக்கறிஞர்கள், 'ஷரீஆ ஆலோசகர்கள் மற்றும் இஸ்லாமிய நிதியியல் சம்பந்தப்பட்ட சட்ட ஆலோசகர்களின்தேவையினைநோக்காகக் கொண்டு விரிவான விதத்தில் 'Islamic Banking & Finance Qualification' இனை ABE –UK யின் சகோதர நிறுவனமான 'The Association of Business Practitioners (ABP-UK) உடன் இணைந்து IBS Campus அறிமுகப்படுத்தியுள்ளது.

ABP Graduate Diploma in Applied Islamic Finance & Banking (QCF – Level 6 Qualification)

ABP Post - Graduate Diploma in Essentials in Islamic Finance & Banking (QCF – Level 7 Qualification)

ABP Graduate Diploma and Postgraduate Diploma Qualification ஆனது ஐஸடயஅடிஉரு குடியெணஉந துறையில் தேர்ச்சி பெற விரும்புபவர்களுக்கும் Islamic Banking & Finance பாடநெறியின் முதுமாணிப் பட்டத்தினை பெற விரும்புபவர்களுக்கும் ஏற்ற வகையில் இப்பாடநெறிகள் வடிவமைக்கப்பட்டிருக்கின்றன.

இப்பாடநெறியானது, Islamic Banking & Finance இன் தத்துவங்களை படித்து புரிந்துகொள்ள ஆர்வமுள்ள அறிஞர்களுக்கு ஏற்ற வகையில் அமைந்துள்ளது.

இக்கற்கை நெறியின் PGD Level இனை பூர்த்தி செய்தபின், University of Gloucester shire, UK இனால் வழங்கப்படும் Masters Degree இனையும் Online மூலம் மேற்கொள்ள முடியும். உலகளாவிய டகதியில் அறியப்பெற்ற QCF, ABP-UK இனைக் கொண்டு, MSc, MBA கற்கைநெறிகளையும் UK பல்கலைக்கழகங்களிலும் மேற்கொள்ளலாம்.

உலகளாவிய ரீதியில் அங்கீகரிக்கப்பட்ட Islamic Banking தகைமையினை எம்முடன் இணைந்து மேற்கொள்ள IBS Campus உங்களை வரவேற்கின்றது. தொழில்புரிவோருக்கு விசேட கழிவுகளும் வழங்கப்படும்.

மேலதிக தகவல்களுக்கு 0776206449/ 0774271384 என்ற தொலைபேசி இலக்கங்களுக்கு தொடர்பு கொள்ளவும்.

## SAFA - CMA Sri Lanka Conference 2012




அண்மையில் கொழும்பு தாஜ் ஹோட்டலில் நடைபெற்ற SAFA - CMA Sri Lanka Conference 2012 நிகழ்வுக்கு பிரதம அதிதியாகக் கலந்துகொண்ட கைத்தொழில் அமைச்சர் றிஷாத் பதியுதீன், சபா தலைவர் முஹம்மத் ராபி, சிமா தலைவர் பேராசிரியர் லக்ஷ்மன் ஆர். வட்டவல கனடா உயர் ஸ்தானிகர் புருஸ்லெவி, பேராசிரியர், உஸித லியனகே ஆகியோரும் படத்தில் காணப்படுகின்றன.

## முன்பள்ளி ஆசிரியைகளுக்கான ஒருநாள் இலவச கருத்தரங்கு




(எஸ்.அஷ்ரப்கான்)

கல்முனை கல்வி வலய முன்பள்ளி ஆசிரியர்களுக்கான ஒருநாள் இலவச பயிற்சிக் கருத்தரங்கு அண்மையில் சாய்ந்தமருது கொம்டெக் உயர் கல்வி நிறுவனத்தில் நடைபெற்ற போது பிரதம அதிதி பாராளுமன்ற உறுப்பினர் பைசால் காசிம், கொம்டெக் நிறுவனத்தின் முகாமைத்துவப் பணிப்பாளரும் கிழக்கு மாகாணசபை உறுப்பினருமான ஏ.எம். ஜெமீல், ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் சிரேஷ்ட பிரதித் தலைவர் ஏ.எல்.ஏ.மஜீத் ஆகியோர் ஆசிரியைகளுக்கு சான்றிதழ்களை வழங்கி வைத்தார்கள்.



கம்பளை கல்வி வலய பாடசாலைகளுக்கிடையில் பதின்மூன்று வயதிற்குட்பட்ட அணிகளுக்கிடையிலான கால்பந்தாட்ட சுற்றுப் போட்டியில் பங்குபற்றிய கம்பளை முஸ்லிம் மகா வித்தியாலயம் மற்றும் ஆண்டியாகடவத்தை அல் ஹிக்மா வித்தியாலயம் என்பவற்றின் அணிகளைப் படத்தில் இங்கு காணலாம். (படம்: எம்.எம்.எம். ரம்ஸீன்)



மத்திய மாகாண தமிழ்மொழி தினப் போட்டியில் வெற்றி பெற்ற கம்பளை முஸ்லிம் மகாவித்தியாலய மாணவர்களான எம்.என்.எப். நுஸ்ஹா, எப்.கே.எம். அப்ரத், ஆர்.எப். ரிமாசா பானு மற்றும் எ ல்.ஏ.எம். அல்அமீன் ஆகியோர் அதிபர் எம்.பி.எம்.சாஜஹானுடன் நிற்பதை இங்கு காணலாம். (படம் : எம்.எம்.எம். ரம்ஸீன்)

## 3ஆவது ஆண்டில் கால்பதித்துள்ள பதுளை முஸ்லிம் மகளிர் கல்லூரி

**2007**.05.27ஆம் திகதி ஆரம்பித்த மேற்படி பாடசாலை மிகக் குறுகிய கால வரலாற்றில் பல சாதனைகளைப் படைத்து இன்று பதுளை மாநகர பிரபலமான பாடசாலைகளுடன் முன்னணியில் போட்டியிடக்கூடிய நிலையில் தன்னை நிலைநிறுத்தியுள்ளது.

கடந்த 2009ஆம் ஆண்டில் ப/அல் அதான் மகா வித்தியாலயத்தில் தரம் 1,2,3 ஆம் வகுப்புகளில் கல்வி பயின்ற பெண் மாணவிகள் 127 பேருடனும் 6 ஆசிரியைகளுடன் பதுளை உமேடா நிறுவனத்தின் கட்டிடத்தில் தற்காலிகமாக ஆரம்பிக்கப்பட்ட இப்பாடசாலை, தற்போது தரம் 6 வரையான வகுப்புகளையும் 196 மாணவிகள் 14 ஆசிரியர்களுடனும் இயங்கிக் கொண்டிருக்கின்றது.

குறிப்பிட்ட காலத்தினுள் இக்கல்லூரிக்கான தனியானதொரு காணியைப் பெற்று இதற்கான சொந்தக் கட்டிடத்தையும் நிர்மாணிக்க வேண்டியிருந்த பாரிய சவால்களுக்கு மத்தியிலும் சமூகத்தின் மாற்று கருத்தைக்கொண்ட சிலரின் எதிர் செயற்பாடுகளுக்கு மத்தியிலும் குறிப்பிட்ட காணியையும் பெற்று அதில் மூன்றுமாடிக் கட்டிடத்தின் முதலாம் கட்டத்தையும் கட்டி முடிக்கும் தருவாய்க்கு வந்துள்ளது குறிப்பிடத்தக்கது. இன்ஷா அல்லாஹ் 2012ஆம் ஆண்டின் மூன்றாம் தவணைப் பாடசாலைகள் ஆரம்பிக்கப்படும்போது இக்கல்லூரி அதன் சொந்தக் காணியில் சொந்தக் கட்டிடத்தில் இயங்கக் கூடிய தருவாயில் உள்ளதும் மகிழ்ச்சிக்குரிய விடயமாகும்.

**அபூஷிபா - பதுளை**

ஊவா மாகாண முஸ்லிம் பாடசாலைகளின் எண்ணிக்கையில் மேலும் ஓர் பாடசாலை கூடியுள்ளது என்ற எண்ணப்பாட்டைவிட ஒரு தரமான முன்மாதிரிப் பாடசாலை உருவாக்கப்பட்டுள்ளது என்ற கருத்தை மக்கள் மத்தியில் நிலைநிறுத்த வேண்டுமென்ற பாரிய சவாலை இதன் அதிபருடன் ஆசிரியர் குழாம், பெற்றார்கள் ஆகியோர் சிரமேற்கொண்டு அதற்கான பாதையில் கடினமாக உழைத்துக்கொண்டிருக்கின்றார்கள். இவர்களின் மேலான முயற்சியின் பயனாக...

★ இப்பாடசாலையின்வரலாற்றில்முதன் முறையாக தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சைக்குத் தோற்றிய மாணவிகள் 26 பேரில் 6 பேர் சித்தியடைந்து அதில் ஒரு மாணவி பதுளை மாவட்ட முஸ்லிம் பாடசாலைகளுக்கு மத்தியில் அதிகூடிய புள்ளியாக 176 புள்ளிகளைப் பெற்று முதலாமிடத்தையும் பொதுவாக மாகாண மட்டத்தில் 9 ஆம் இடத்தையும் பெற்று சாதனை படைத்துள்ளார்.

★ இப்பரீட்சைக்குத் தோற்றிய 26 மாணவிகளும் 77 புள்ளிகளுக்கு மேல் பெற்று இலங்கைக் கல்வியமைச்சினால் 70 புள்ளிகளுக்குமேல் பெற்ற மாணவர்களுக்கு வழங்கப்படும் சான்றிதழ்களைப் பெற தகுதிபெற்றுள்ளனர். இது பொதுவான மாவட்ட மட்டக் கணிப்பில் ஆகக் கூடுதலான சதவீதத்தைப் பெற்ற பாடசாலை என்றும் கணிக்கப்பட்டுள்ளது.

★ கடந்த ஆண்டு பதுளை வலயமட்ட தமிழ் மொழித்தினப் போட்டியில் ஆக்கத்திறன் போட்டியில் பங்குகொண்ட ஒரு மாணவி முதலாமிடத்தைப் பெற்று மாகாண மட்டத்திலும் முதலாமிடத்தைப் பெற்று அகில இலங்கை ரீதியான போட்டிகளுக்கு தெரிவாகியுள்ளார்.

★ அதேபோல் கடந்த ஆண்டு பதுளை



வலயமட்ட ஆங்கிலதின போட்டிகளில் ஐந்து நிகழ்ச்சிகளுக்காக போட்டியிட்ட இம்மாணவிகள் நான்கு போட்டிகளில் வெற்றிநிலைகளைப்பெற்றஅதேவேளை, இவர்களால் அரங்கேற்றப்பட்ட ஆங்கில நாடகம் மூன்றாமிடத்தை கவீகரித்துக் கொண்டது. இதில் பதுளையின் பிரபல தேசியப் பாடசாலைகளான ப/விசாகா மகளிர் கல்லூரி, ப/விஹாரமகாதேவி மகளிர் கல்லூரி ஆகியன 1ஆம், 2ஆம் நிலைகளைப் பெற்றது குறிப்பிடத்தக்க தாகும்.

இவர்களின் இத்தகைய சாதனைகள் மேலான அடைவு மட்டங்களை குறுகிய கால வரலாற்றினுள் நிலைநிறுத்தி வருவதை அவதானித்த மாகாணக் கல்வியமைச்சின் செயலாளர், மாகாணக்கல்விப் பணிப்பாளர், வலயக் கல்விப்பணிப்பாளர் போன்ற மேலதிகாரிகளின் கவனயீர்ப்பை பெற்றதால் இக்கல்லூரியில் தரம் 6 முதல் 11 வரை வகுப்புகளை நடாத்த அனுமதி வழங்கியுள்ளதுடன் தரம் 6 முதல் ஆங்கில மொழி மூலமும் கல்வியைத் தொடர இருமொழி மூல பாடசாலையாக (Bylingual) பாடசாலையாகவும் இக்கல்லூரியைப் பிரகடனப்படுத்தியதுடன் அதற்கான ஆசிரிய வளத்தையும் பெற்றுத் தந்துள்ளார்கள்.

ஆகவே, இத்தகைய கடந்தகால நிகழ்வுகளை நினைவூட்டும் வகையிலும், பெற்றார், ஆசிரியர், மாணவர், நலன்விரும்பிகள் மத்தியில் ஒரு சமூக உறவை மேம்படுத்தும் நோக்கிலும் இம்மூன்றாண்டு நிறைவு விழா பதுளை மாநகரப் பூங்காவில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. வித்தியாலய அதிபர், ஆசிரியர்களால் ஏற்பாடு செய்யப்பட்ட நிகழ்ச்சியில் பெற்றார்கள் அன்றைய தின நிகழ்வுக்கு கொண்டுவந்த இனிப்புப் பண்டங்கள் மற்றும் பலகாரங்கள் ஏனையோருக்கு பகிர்ந்தளித்து தமது சகோதர வாஞ்சையை வெளிப்படுத்தினார்கள்.

இந்நிகழ்ச்சியில் சிறப்பு அதிதியாக அழைக்கப்பட்டிருந்த உமேடா நிறுவனத்தின் பிரதித் தலைவரும், கண்டி பிரதான வைத்தியசாலையில்கடமையாற்றும்வைத்திய கலாநிதி. டாக்டர் எம்.எச்.சலாஹுதீனின் உருக்கமான உரை கூடியிருந்தோர் உள்ளங்களை நெகிழச் செய்தது.

டாக்டர் எம்.எச்.சலாஹுதீன் தமது உரையில், 'இன்றைய தின நிகழ்வுகளைக் காணும்போது கண்குளிர்ச்சியும், அளவிலா மகிழ்ச்சியும் உள்ளத்தில் ஏற்படுகிறது.



இந்நிகழ்ச்சியைக் காண்பதற்கு பலருடைய உண்மை உழைப்பும் பல தியாகங்களும் வரலாறாக இருந்துள்ளதை எவராலும் மறக்கவோ, மறுக்கவோ முடியாது. இன்றைக்கு சுமார் 12 ஆண்டுகளுக்கு முன் எமது முஸ்லிம் பெண் சிறார்களுக்கும் சில ஆசிரிய சகோதரிகளுக்கும் பர்தாவை அணிய தடைவிதித்த ஒரு சகோதரப் பாடசாலையின் நிர்வாகம் ஒரு பாரிய பிரச்சினையை உண்டுபண்ணிய அதேவேளை, ஊவா முஸ்லிம்களின் கல்விக் கண்களையும் திறந்தது என்றேகூற வேண்டும்.

இன்று நாம் காணக்கூடிய ஊவா மாகாணத்தின் முதலாவது முஸ்லிம் மகளிர் கல்லூரி அந்தத் தாக்கத்தின் வெளிப்பாடாகும். இன்று எம் பெண் சிறார்களுக்கும் எமது கலாசார அடிப்படைகளைப் பேணியவாறு கல்வியின் உயர்நிலைக்கு செல்லும் வாய்ப்பு இக்கல்லூரியின் உருவாக்கத்தின் மூலம் எமது சமூகத்திற்குக் கிடைத்துள்ளது.

உமேடாவின் முக்கிய உறுப்பினர்கள் சிலரின் கடுமையான உழைப்பால் இன்று மலையக முஸ்லிம் இளைஞர், யுவதிகள் 600 பேருக்கு ஆசிரியர் நியமனம் வழங்கப்



பட்டு, அவர்கள் இன்று மலையக முஸ்லிம் பாடசாலைகளின் கல்வி வளர்ச்சியில் பாரிய பங்களிப்பைச் செலுத்திக் கொண்டிருக்கின்றார்கள். அதேபோல் ஊவாவிலும் ஒரு முஸ்லிம் மகளிர் கல்லூரி உருவாக்கப்பட வேண்டும். அதில் எம் பெண் பிள்ளைகளின் கல்வி மார்க்கரீதியாகவும் கலாசாரத்தைப் பேணி வழங்கப்பட வேண்டும் என்றும் எமது குரலை ஓங்கி ஒலிக்கச் செய்தோம். அதற்கான காணியொன்றையும் வாங்கினோம்.

அதில் எமது மகளிர் கல்லூரியை கட்ட முடியாது சில தடங்கல்களை எதிர்நோக்கிய போது, உமேடா நிறுவனத்தின் காணியில் ஊர் முக்கியஸ்தர்கள், சங்கங்கள் இன்னும் பல தனிப்பட்டவர்களின் முயற்சியில் பொதுமக்களினதும் பங்களிப்புடன் ஒரு கட்டிடத்தை நிர்மாணித்து அந்தக் கட்டிடத்தில் இன்று பல கஸ்டங்களுக்கு மத்தியில் இந்தப் பாடசாலை இயங்கிக்கொண்டிருக்கின்றது. இன்னும் ஓரிரு மாதங்களில் இக்கல்லூரி தனது சொந்தக் கட்டிடத்திற்கு இடம் மாறிவிடும் தருவாயில் உள்ளது.

நான்இவ்விடத்தில்ஒன்றைக்கூறவிரும்புகிறேன். உண்மையானஇஸ்லாத்தைப்பேசுவோர் அவர்களின் பெண் பிள்ளைகளை இக்கல்லூரியில் சேர்த்து பெண்கள் கல்விக்கு முக்கியத்துவம் அளிக்க முன்வர வேண்டும். இக்கல்லூரியில் கல்வி பயிலும் மாணவிகளுக்கு ஒரு பகுதிநேர மத்ரஸா சிறப்பாக நடைபெறுவதாக கேள்விப்பட்டேன். ஆகவே, எதிர்காலம் எம் பெண் மணிகளின் மார்க்கக் கல்வியிலும் பொதுக் கல்வியிலும் ஏககாலத்தில் முன்னணி வகிப்பார்கள். இன்ஷா அல்லாஹ்!

# கணவன் மனைவி உறவுச் சங்கிலி



இல்லற பந்தத்தில் கணவன் மனைவிக்கு இடையேயான உறவு என்பது மிகவும் புனிதமானது. வெவ்வேறு தளங்களில் இருந்து வந்திருக்கும் இருவர் இணைந்து வசிக்கும் போது அவர்களுக்கிடையேயான பரஸ்பரம் புரிதலும் அன்புமே வாழ்க்கைப் பயணத்தில் இனிமையைக் கூட்டும். அபரிமிதமான அன்பும், எதிர்பார்ப்பில்லாத நேசமுமே உறவுச்சங்கிலியின் நெருக்கத்தை அதிகரிக்கும். பிறந்து வளர்ந்த இடங்களையும், உறவுகளையும் விட்டு விட்டு, கணவனின் வீடே உலகம் என்று வரும் பெண்ணிற்கு சரியான பாதுகாப்பினை வழங்க வேண்டியது கணவனின் கடமை.

உடல் ரீதியாகவும், மன ரீதியாகவும் சந்திக்கும் பிரச்சினைகளை தீர்க்கும் கணவனுக்காக எதை வேண்டுமானாலும் செய்ய மனைவி தயாராகிவிடுகிறார். மனைவியின் நன்மதிப்புப் புத்தகம் எனப்படும் 'குட் புக்' கில் இடம் பெற கணவன் சில வழி முறைகளை கடைபிடிக்க வேண்டியது மிகவும் அவசியம்.

மனைவி என்பவள் உங்களை மட்டுமே நம்பி வந்தவள். அவளுக்காக அதிக நேரம் செலவிடுவது ஒன்றும் தவறில்லை. உறவுகளும் மிகவும் முக்கியம்தான். ஆனால், வாழ்க்கையின் அனைத்து சுகதுக்கங்களையும் சரிபாதியாக பகிர்ந்து கொள்ளும் மனைவிக்கு கூடுதல் நேரத்தை கணவன் ஒதுக்குவதில் தவறொன்றும் இல்லை.

அதிகாலை எழுதுவது முதல் இரவு படுக் கைக்குச் செல்லும்வரை கணவருக்காகவும், அவரது குடும்பத்திற்காகவும் நேரத்தை செலவிடுகிறார்கள் பெண்கள். அவர்களுக்கும் தனிப்பட்ட விருப்பு வெறுப்புகள் இருக்கும் என்பதை புரிந்து கொண்டு அக்கறை காட்டுங்கள். அவர்களின் உணர்வுகளுக்கு மதிப்பளியுங்கள்.

கணவனுக்கு அடுத்தபடியாக பெண்கள் அதிக அக்கறை செலுத்துவது குழந்தைகள் மீதுதான். குழந்தைகளை கவனித்துக் கொள்வதில் பெண்களுக்கு எந்த அளவிற்கு உரிமையும், கடமையும் இருக்கின்றதோ அதே அளவு ஆண்களுக் கும் உண்டு.

குழந்தைகளுக்கு பொறுப்பான தகப்பனாக நடந்து கொள்ளும் ஆண்களை கொண்டாடும் பெண்கள் அதிகம் உள்ளனர்.

ஆண்களுக்கென்று நட்பு வட்டம் இருப்பதைப் போல பெண்களுக்கும் உயிர்த்தோழிகள் உண்டு. திருமணத்திற்குப் பிறகு அதை தொடர முடியவில்லையே என்ற ஏக்கம் அநேகம் பேருக்கு ஏற்படுவதுண்டு. மனைவியை அழைத்துக் கொண்டு அவரது தோழிகளின் வீட்டுக்குச் சென்று நட்பை புதுப்பிப்பதில் தவறொன்றும் இல்லை.

ஒவ்வொரு பெண்ணிற்கும் விலை மதிப்பில்லாத பரிசுப் பொருள் கணவன் மட்டுமே. இருந்தாலும் கணவர் ஒரு முழம் பூ வாங்கிக் கொடுத்தாலே அதை நான்கு பேரிடம் சொல்லி பெருமைப்பட்டுக் கொள்வார்கள். எந்தச் சந்தர்ப்பத்திலும் திருமண நாளை மறந்துவிடாதீர்கள்.

திருமணநாள், பிறந்தநாள் என வாழ்வில் முக்கிய தருணங்களை நினைவில் வைத்துக் கொண்டு அந்த நாளில் மனைவிக்கு பரிசுகளை வாங்கித்தந்து அசத்துங்கள்.

ஆண்டு முழுவதும் வீட்டிலேயே அடைந்து கிடக்கும் மனைவியை ஆண்டுக்கு ஒரு முறையாவது வெளியூருக்கு அழைத்துச் சென்று வாருங்கள். அது அவர்களுக்கு பரவசமான தருணமாக இருக்கும் . இவற்றை சரியாக கடைபிடித்தாலே உறவுப் பந்தின் நெருக்கம் அதிகரிக்கும். எந்த சந்தர்ப்பத்திலும் யாருக்காகவும் மனைவி உங்களை விட்டுக் கொடுக்கவே மாட்டள்.

ஹாமினா ஹஸனி
கல்முனை

**குழந்தைகளுக்கு பொறுப்பான தகப்பனாக நடந்துகொள்ளும் ஆண்களை கொண்டாடும் பெண்கள் அதிகம் உள்ளனர்.**




## அழகுக்கு அழகு சேர்க்கும் தேங்காய்!

நமது சமையலில் முக்கிய இடம்பெறும் தேங்காய், நமது தேகத்தை அழகாக வைத்துக்கொள்ளவும் உதவுகிறது. தலை முதல் பாதம் வரை மென்மை, பளபளப்பை தாராளமாய் அள்ளித்தரும் தேங்காய், நம்மை தன்னம்பிக்கையுடன் நடைபோட வைக்கும் என்பதில் மாற்றுக்கருத்தே இல்லை.



வழுக்கை தேங்காயை நன்கு அரைத்து, அதனோடு சிறிதளவு ஊளர் கலந்து முகத்தில் கீழ் இருந்து மேல்நோக்கி பூசி, அது உலர்ந்ததும் நீர்கொண்டு சுத்தம் செய்துகொள்ள வேண்டும். தினமும் இப்படி செய்து வந்தால் மாசு மருவின்றி முகம் மிளிரும். கரும் புள்ளிகள் இருந்தால் கூடிய விரைவில் அவை காணாமல் போய்விடும்.

வெயிலில் காலங்களில் சூரியஒளி பட்டு முகம் கறுப்பாவது வழக்கம். பலருக்கு வெளியூர் சென்றால் கூட இதுபோன்ற நிலை ஏற்படும். முகம் கறுப்பாவதை தடுக்கவும் தேங்காய் உதவுகிறது. தேங்காய் பால் 2 ஸ்பூன், கடலை மாவு ஒரு ஸ்பூன் எடுத்து, இரண்டையும் கலந்து பசைபோல ஆக்கிக்கொள்ள வேண்டும். இந்த பசையை முகத்தில் பூசிக் கொண்டு, உலர்ந்ததும் தண்ணீர் கொண்டு கழுவிவிட வேண்டும். வாரம் இருமுறை இப்படி செய்து வந்தால் முகம் பிரகாசமாகும்.

## தொலைபேசியும் இஸ்லாமிய பெண்களும்



இஸ்லாமியப் பெண்களும் நாகரீக வளர்ச்சியின் தொடர்பாடல் சாதனங்களுள் மிகவும் பிரபல்யமடைந்துள்ள சாதனம் கைத்தொலைபேசியாகும். ஆனால், இதைப் பயன்படுத்துவோர் நடந்து கொள்ளும் முறை நாகரீகம்; அற்றதாகவே அமைந்துள்ளது. பொதுவாக எமது சகோதரிகளின் கைப் பையில் உள்ள தொலைபேசிகள் அனைவரையும் சங்கடத்துக் குள்ளாக்கின்றன.

கூட்டங்கள், கருத்தரங்குகளாகட்டும் மேலும் சொற்பொழிவு களாகட்டும் எங்கும் நிகழ்ச்சிகள் இடம்பெறும்போது தொலை பேசி ஒலிக்கும். இவ்வேளையில் நிகழ்ச்சியை நடத்துபவர் சிரமப்படுவதோடு, நாம் எதில் விட்டோம். எது சம்பந்தமாக கடைசியாக கதைத்தோம் என்பதைக் கூட மறந்து விடுகின்றனர் அத்துடன் ஏனையோரும் தனது கைப்பையையும் திறந்து பார்க்கும் நிலையும் உருவாகின்றது.

வைத்தியசாலைகளில் மருத்துவ நிலையங்களிலும் இதே நிலைதான் வைத்தியர்களின் நேரம் எவ்வளவோ பயனானது வைத்தியர்கள் நோயாளியை பரிசோதிக்கும் போது தொலைபேசி அலறும் அவ்வேளையில் அவரால் அவரது வேலையை சரியாகச் செய்ய முடியாமல் போகும். வைத்தியசாலைகளில் தங்கி சிகிச்சை பெறுவோரும் இதே நிலையில் தான் செயற்படுகின்றனர். 'கைத்தொலைபேசி பாவிப்பது தடை'' என்று அறிவித்தல் இருந்தும் அதை பொருட்படுத்தாது செயற்படுகின்றனர்.

எனவே, பொது இடங்களில் தொலைபேசி பாவிப்பதில் இருந்து தவிர்ந்து கொள்வதோடு ஏனைய தமது நடவடிக்கையில் நாகரீகத்தையும் ஒழுங்கையும் கடை பிடித்து பல தொல்லை களைத் தவிர்க்கலாம்.

நஸ்லியா பவாஸ் அலி
இஹாரிய

## தந்தூரி சிக்கன்



**தேவையான பொருட்கள்**

சிக்கன் -முழு கோழி, தந்தூரி மசாலா - 5 டேபிள்ஸ்பூன், வினிகர் - 3 டீ ஸ்பூன், எலுமிச்சை - 2, இஞ்சி, பூண்டு பேஸ்ட் - 3 டீ ஸ்பூன், தயிர் - அரை கப், உப்பு - தேவையான அளவு, தந்தூரி அடுப்பு செய்ய, செங்கல் - 4, மணல் - ஒரு தட்டு, அடுப்பு கரி - அரை தட்டு, கம்பி - 8

**தந்தூரி சிக்கன் செய்முறை**

முழு கோழியை நான்கு துண்டாக வெட்டி கழுவி சுத்தம் செய்து கொள்ளவும். பின் அதில் தந்தூரி சிக்கன் மசாலா, வினிகர், உப்பு, தயிர், இஞ்சிப் பூண்டு, எலுமிச்சை சாறு சேர்த்து 2 மணி நேரம் ஊறவிடவும்.

மணலை பரப்பி அதன் மேல் செங்கலை வைத்து அதில் கரிதுண்டை போட்டு நெருப்பு மூட்டவும். நெருப்பு கங்கு நன்றாக இருக்க வேண்டும். செங்கலின் மேல், கம்பிகளை குறுக்கும் நெடுக்குமாக அடுக்கவும். கம்பியின் மேல் மசாலா தடவி ஊற வைத்திருக்கும் கோழி துண்டுகளை வைத்து அடுக்கவும்.

ஒரு அகலமான பாத்திரம் கொண்டு மூடவும்.10 நிமிடம் கழித்து திருப்பி போட்டு வேகவைக்கவும். சுவையான தந்தூரி சிக்கன் ரெடி. எண்ணெய் தேவையில்லாத இந்த சிக்கன் அனைவருக்கும் ஏற்றது.

பிறகென்ன அடுப்பைப் போட்டு அசத்தலான தந்தூரி சிக்கனை சமைத்து ஒரு கை பார்க்க வேண்டியதுதானே...!

# உங்கள் குழந்தைக்குப் பேச்சு குறைபாடா?




செல்வி இஸட் ஹமீட்
(பேச்சு ஃ மொழி சிகிச்சை நிபுணர்)



ஆசியாவில் ஏறத்தாள இருபது குழந்தைகளுள் ஒரு குழந்தை பேச்சு மொழி உடற்கோளாறுகளுடன் இருப்பதாக... காது கேளாமை தொடர்பாடல் சீர்குலைவுக்குமான தேசிய நிறுவன (The National Institute of Deaf ness and other Communication Disorders) அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. இவர்களுள் 10 வீதமானவர்களே தகுந்த உதவியைப் பெறுகின்றனர்.

உங்கள் குழந்தைகளிடையே இளம் பிராயத்திலே ஏற்படக் கூடிய பேச்சு/ மொழி சீர்குலைவைப் புறக்கனித்தால் அவர்களின் எதிர்கால முன்னேற்றத்திற்கும் அவர்களின் சமூக தொடர்பாடல் திறமை கல்வி, அறிவுத் திறமை அதனுடன் கூடிய செயல்திறன் மற்றும் உளவியல் மேம்பாடு ஆகியவற்றிற்குச் சில சந்தர்ப்பங்களில் நேரடியாகவும் மறைமுகமாகவும் பாதிப்பினை ஏற்படுத்தலாம்.

பேச்சு தொடர்பாடல் சிக்கலைக் கொண்டதொரு குழந்தை உங்களுக்கே இருக்கலாம். அல்லது உங்கள் நெருங்கிய உறவினர்களுக்கோ இருக்கலாம். அதனை ஆரம்பக் கட்டத்திலேயே கவனித்து மருத்துவம் செய்வது மிகச் சிறந்தது. இதற்கான மருத்துவ உதவியை எங்கே பெற்றுக் கொள்ளலாம்? ஆரம்பக் காலத்திலேயே மருத்துவம் செய்வது எந்தளவு முக்கியத்துவம் என்பனவற்றை நீங்கள் அறியாதிருக்கலாம். இது குறித்த விழிப்புணர்வு நம் நாட்டைப் போன்ற நாடுகளில் மிகவும் குறைவாகவே காணப்படுகிறது. வாசகன் என்ற முறையில் இவற்றைத் தெரியப்படுத்துவமும் அதற்கான உதவி ஒத்தாசைகளை வழங்குவதும் அல்லது உதவியை நாடவைப்பதும் உங்கள் கடமையாகும் எனக் கருதுகிறேன்.

**பேச்சு / மொழி சீர்குலைவுடனான** (Speech language Disorder) குழந்தைகளுக்கான மருத்துவம் சம்பந்தமாக அடிக்கடி எழுப்பப்படும் சில கேள்விகள் கீழே தரப்பட்டுள்ளன.

❖ **பேச்சு / மொழி உடற்கோளாறு என்றால் என்ன?**

ஏனைய பெரும்பாலான சம வயதுடைய குழந்தைகள் போன்று பேச அல்லது மொழித்திறனுடன் இயங்க ஒரு குழந்தைக்கு முடியாமல் போவதையே பேச்சு / மொழி உடற்கோளாறு என்கிறோம். இவர்களின் பேச்சு மொழித்திறன் குரலில் (Voice) சொல்வயம் (Speechrytham) சரளம் (Fcuency) பேச்சு ஒலியின் உச்சரிப்பு (Pronounciation of speech sound) உட்பொருள் (Contant) என்பனவற்றின் ஏற்புத்தரம் (Norms) மற்ற சாதாரண குழந்தைகளில் இருந்து வேறுபடலாம்.

❖ **குழந்தைகளிடையேயான பேச்சு / மொழித்திறன் வகைகளும் அவற்றுக்கான காரணங்களும்**

பல்வேறு வகைப்பட்ட பேச்சு / மொழித்திறன் உடற்கோளாறுகள் கீழே தரப்பட்டுள்ளன. என்றாலும் அவைகளுக்கான காரணங்கள் எண்ணற்றவைகளாகவும் வேறுபாடுகளுடையவைகளாகவும் காணப்படுவதால் பொதுவானவைகள் மட்டுமே குறிப்பிடப்பட்டுள்ளன.

**பேச்சு மற்றும் மொழி தாமதம் (Speech and Language Delay)**

மொழி ஊக்குவிப்பு (Language Stimucation) குறைவு செவிப் புலன் இழப்பு (Hearing Loss) கேள்விப் புலன் மேம்படுத்தும் பொறியமைவு மற்றும் சுருள்வளை செருகிய பின்னரும் தற்போக்கு (Autism) அலை நிரல் கோளாறு (Adad Attantion Dificit Hyperactivity Disoider) அறிவாற்றல் கோளாறு (Interliectual Disorder) என்பன காரணமாக பேச்சு மொழி தாமதம் ஏற்படுகின்றது.

❖ **மூட்டு கோளாறு** (Articulation Disorder)

உதட்டின் சூழ் பிளவு அல்லது மேல்வாய் அண்ணம் பிளவு உச்சரிப்புக்கோளாறு

❖ **நரம்பியல் பேச்சுக் கோளாறு** (Neurological of Sounds)
Chilhood Dysorthriq, Childhood Aphasia Childhood Apraxia

❖ **சொல்லோட்டக் கோளாறு** (Fluency Disorders)

மூளைக் காய்ச்சல் வலிப்பு, தலையில் அடிபட்டு பாதித் தால் ஏற்படும் பேச்சு / மொழி பிரச்சினைகள் திக்குவாய், சொடற்களை தெளிவின்றி அவசரமாகப் பேசுதல்.

**ஒரு குழந்தைக்கு பேச்சு அல்லது மொழித்திறன் குறைபாடு இருப்பதை எவ்வாறு அறிந்துகொள்வது?**

ஒரு குழந்தை 18 மாதங்கள் வயதாகியும் ஒரு வார்த்தையேனும் பேசாதுவிடின் அல்லது அக்குழந்தையின் ஒத்த வயதுடைய ஏனைய குழந்தைகள் போன்று பேசாமல் இருப்பது அல்லது விளங்கிக் கொள்ளாதிருப்பது அல்லது மூன்றரை வயதாகியும் எதனையும் விளங்கிக் கொள்ள சிரமப்படுமாயின் அல்லது பேசும்போது திக்குவாயின் அல்லது குரல்வளைக் குறைபாடு உடையதாக இருப்பின் அவைகளே ஒரு பொதுவான அறிகுறியாகும்.

மேற்கூறிய குறைபாடுகளில் எவையேனும் காணப்பட்டால் அல்லது அக்குழந்தையின் பேச்சு தொடர்பில் ஏதேனும் காணப்பட்டால் ஒரு பேச்சுப் பயிற்சி வல்லுநரை நாடல் வேண்டும்.

**சிகிச்சை என்ன ? பேச்சு பயிற்சி வல்லுநர்** (Speech therapist) **என்றால் யார்?**

மேற்கூறிய குறைபாடுகளில் எவையேனும் காணப்பட்டால் இவ்வல்லுநரை நாடல் வேண்டும். பேச்சு அல்லது மொழி சம்பந்தமாக ஏற்படக்கூடிய குறைபாடுகளைக் கண்டறியவும் அவற்றிற்கான சிறப்புப் பயிற்சி அளிப்பதற்கும் என்று தனியாகப் பயிற்சி பெற்ற ஒருவரே பேச்சு பயிற்சி வல்லுநர் என அழைக்கப்படுகிறார்.

பேச்சு சிகிச்சை நாடும் பெற்றோர் பேச்சு சிகிச்சைத் துறையில் பட்டம் பெற்ற ஒருவரையே நாடவேண்டும். ஏனெனில் தகைமையற்றவர்களும் பேச்சு சிகிச்சை அளித்து வருகின்றனர்.

**பெரும்பாலான பேச்சு அல்லது மொழி குறைபாடுடைய குழந்தைகள் நாளடைவில் அதிலின்றும் விடுபடுவதில்லை? ஏன் சிகிச்சை பற்றி கவலைப்பட வேண்டும்?**

எல்லா குழந்தைகளும் ஒன்றுக்கொன்று சமமானவையல்ல என்பதை நாம் உணர்ந்து கொள்ள வேண்டும். சில குழந்தைகள் குறைந்த அளவிலான பேச்சுக் குறைவு பாட்டிலிருந்து நாளடைவில் விடுபடலாம். எனினும் குறிப்பிடத்தக்க அளவிலான பேச்சு அல்லது மொழி குறைபாடுள்ள குழந்தைகள் அக்குறைபாட்டிலிருந்து விடுபட ஏதாவதொரு வழியில் உதவி தேவை. இதனைப் புறக்கணித்தால் அக்குழந்தையின் கல்வியறிவு தன்னம்பிக்கை மற்றும் சமூக உணர்ச்சி, மனவளர்ச்சி என்பன பாதிக்கும்.

**1-3 வயதுக்குட்பட்ட குழந்தைகளையும் பேச்சு பயிற்சி சிகிச்சைக்குட் படுத்தலாமா?**

பேச்சு / மொழி சிகிச்சை வல்லுநரின் உதவியை நாடுவதற்கு குழந்தைகளுக்கு வயதெல்லை கிடையாது. உண்மையில் ஒரு குழந்தைக்குப் பேச்சு/ மொழித் திறன் சிகிச்சை அவசியம் எனக் கருதினால் காலம் தாழ்த்தாது சிகிச்சை அளித்தல் அவசியமாகும். ஒரு குழந்தையின் மூளை வளர்ச்சி இளமை வயதிலேயே ஆரம்பமாவதாலும் விடயங்களை கிரகிக்கும் தன்மை அதிகமாவதாலும் சிகிச்சையை விரைவில் ஆரம்பிப்பதன் மூலம் பின் வரக்கூடிய பாதகமான விளைவுகளை குறைக்கின்றதுடன் இலகுவானதும் துரிதமானதுமான முன்னேற்றத்தைச் சிகிச்சையில் காணலாம்.

**ஒரு குழந்தையை சிகிச்சைக்காக பேச்சு/ மொழி வல்லுநரிடம் அழைத்துச் செல்ல இன்னுமொருவரின் சிபாரிசு தேவையா?**

சிபாரிசு அவசியமில்லை. எனினும் பெரும்பாலான குழந்தைகள் ஆசிரியர்களாலும் குழந்தை மருத்துவர்களாலுமே சிபாரிசு செய்யப்பட்டு அனுப்பப்படுகின்றனர். எனவே, நீங்கள் நேரடியாகவே அழைத்து வரலாம்.

**மென்மையான அல்லது தீவிரமான பேச்சு/மொழி குறைபாடுடைய எல்லா குழந்தைகளும் ஒழுங்காக வாராந்த சிகிச்சைக்கு வருவது அவசியமா?**

பேச்சு மொழிதிறன் குறைபாடு பற்றிய வல்லுநர் குழந்தைகளின் குறைபாட்டிற்கு ஏற்பதனை ஒரு குழந்தைக்கு எத்தகைய சிகிச்சை அவசியம் என்று தீர்மானிப்பார். இச்சிகிச்சை செயல்முறை சிகிச்சை, தொகுதி சிகிச்சை வாராந்த சிகிச்சை பல குழந்தைகள் சேர்ந்து கூட்டுப் பயிற்சிச் சிகிச்சை, மறைமுக விளையாட்டுடனான பயிற்சிச் சிகிச்சை முதல் பெற்றோரைப் பயிற்றுவித்தல், அவர்களுக்கான அறிவுரை வழங்கல் என வேறுபடும்.

**சிறிதுகால சிகிச்சைக்குப்பின் குழந்தையில் முன்னேற்றம் காணாதவிடத்து செய்யக்கூடியன யாது?**

குறிப்பிட்ட சில சந்தர்ப்பங்களைத் தவிர பேச்சு / மொழி சிகிச்சை மற்ற நோய்களுக்கு சில காலம் தொடர்ந்து வில்லைகளைப் பாவிப்பதால் குறுகிய கால வரையறைக்குள் பெரியதொரு முன்னேற்றத்தைக் காட்டாது என்பதை பெற்றோர் உணர்ந்துகொள்ள வேண்டும். சிகிச்சை வல்லுநரின் அறிவுரைப்படி செய்யவும், பொறுமையைக் கடைபிடிக்கவும் உறுதி செய்து கொள்ளல் வேண்டும்.

ஒரு சில குறிப்பிட்ட குறைபாடுடைய குழந்தைகளிடம் விரைவாக முன்னேற்றம் காணலாம். ஆனால், வேறு சில குழந்தைகளிடம் சற்று தாமதமாகவே முன்னேற்றம் காண முடியும். ஏனெனில் பேச்சு/மொழி குறைபாடு அந்த குறைபாட்டுக்கான காரணத்தைப் பொருத்தும் சிகிச்சை நிபுணரின் திறமை, ஒத்துழைப்பு, நோயாளியை இயக்கும் திறன் தொடர் பயிற்சி, பெற்றோரின் முயற்சி என்பவற்றிற்கு ஏற்ப வித்தியாசப்படும்.

ஒரு குழந்தை இன்று தனது வகுப்பில் பின்தங்கி நிற்கவும் நாளை இப் பரந்த உலகில் பின்தங்கி நிற்கவும் காரணமாய் இருக்காதிர்கள். பேச்சுத் திறனை இழந்தாலே ஒழிய அதன் மகிமையை நாம் உணரமாட்டோம். ஒரு குழந்தையின் தெளிவும், இலகும் தான் செல்ல வேண்டியதை சொல்ல முடியாத நிலையில் அனுபவிக்கும் எண்ணக் குலைவை நாங்கள் உணர மாட்டோம். ஆகையினால் பிரச்சினைதானே தீரும் வரை காத்திராமல் கூடிய விரைவில் தீர்வைத் தேடுங்கள்.

இது பற்றி மேலும் விடயங்கள் சந்தேகங்களைப் பின்வரும் தொலைபேசி மற்றும் மின்னஞ்சல், இணையத்தள முகவரியுடன் தொடர்பு கொண்டு அறியலாம்)

தொ.பே: 0112577443
மின்னஞ்சல்:
z.hameed@silverlinespeechtherapy.com
இணையதளம்:
www.silverlinespeechtherapy.com



வானொலிக் குயில் ராஜேஸ்வரியின் நினைவுதின வைபவம் 'தடாகம்' இலக்கிய வட்டத்தின் ஏற்பாட்டில் கொழும்பு தமிழ்ச் சங்கத்தில் இடம்பெற்றபோது மௌலவி காத்தான்குடி பௌஸ் பொன்னாடை போர்த்தி ராஜேஸ்வரி விருது வழங்கி கௌரவிக்கப்பட்டார். பிரதியமைச்சர் ஹிஸ்புல்லா விருது வழங்குவதினையும் அருகில் கல்முனை மாநகர மேயர் சிராஸ் மீராசாஹிப், தமிழ் தென்றல் அலி அக்பர் ஆகியோரும் காணப்படுகின்றனர்.

## பெரிய பள்ளிவாசலின் சொத்துக்களைப் பாதுகாக்க கூட்டு செயற்பாடுகள் தேவை

கொழும்பு பெரிய பள்ளிவாசலின் சொத்துக்களையும் மாளிகாவத்தை முஸ்லிம் மையவாடியின் காணியையும் பாதுகாக்க வக்பு சபையும் அகில இலங்கை ஜம்இய்யதுல் உலமாவும் மற்றும் முஸ்லிம் அமைப்புக்களும் ஒருமித்து செயற்பட வேண்டும் என ஸ்ரீலங்கா முஸ்லிம் மத உரிமைகள் சங்கம் கோரிக்கை விடுத்துள்ளது.

மத உரிமைகளைப் பாதுகாக்கும் சங்கத்தின் ஏற்பாட்டில் கொள்ளுப்பிட்டி ரன்முது ஹோட்டலில் நடைபெற்ற கூட்டத்திலேயே இக்கோரிக்கை விடுக்கப்பட்டது.

சங்கத் தலைவர் எம்.ஐ. இனாயதுல்லா தலைமையில் நடைபெற்ற இக்கூட்டத்தில் 300க்கும் மேற்பட்ட பிரதிநிதிகள் கலந்து கொண்டனர்.

அகில இலங்கை ஜம்மியதுல் உலமா பிரதிநிதிகள் கொழும்பிலுள்ள பள்ளிவாசல் நம்பிக்கையாளர்கள் அரசியல் பிரமுகர்கள் முஸ்லிம் இயக்கங்களின் பிரதிநிதிகள் இதில் கலந்து கொண்டனர்.

பள்ளிவாசல்களுக்குரிய சொத்துக்களை எதிர்காலப் பரம்பரையினருக்காக பாதுகாக்க ஆக்கபூர்வமான நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் என இங்கு பேசிய பலரும் உரையாற்றினர்.

மாளிகாவத்தை முஸ்லிம் மையவாடிக்குரிய காணியைப் பாதுகாப்பதற்கு வக்பு சபையூடாக நடவடிக்கை எடுப்பது அவசியம் என வலியுறுத்தப்பட்டது.

இது தொடர்பாக பல தீர்மானங்களும் நிறைவேற்றப்பட்டன.

மௌலவிகளான அன்பாஸ் முர்சித் அப்துல் ஜப்பார் எம்.எஸ்.எம். தாஸிம். மாகாண சபை உறுப்பினர்களான முஜிபுர் ரஹ்மான் அர்சத் மாநகர சபை உறுப்பினரான ஆஸாத்சாலி, சராப்தீன், நௌபல், முஸ்லிம் கவுன்சில் தலைவர் என்.எம். அமீன், அல்ஹாஜ் வை.எம். இப்றாஹீம், றியாஸ் சாலி உட்பட பலரும் உரையாற்றினர். இது தொடர்பான நடவடிக்கைகளை முன்னெடுக்க செயற்குழு ஒன்றும் நியமிக்கப்பட்டது.

## இலங்கைக்கு...

(முன்பக்கத் தொடர்ச்சி...)

நடைபெற்ற நிகழ்வில் தொடர்ந்துரையாற்றிய தேரர் கூறியதாவது: முஸ்லிம் இளைஞர்கள் இன்று நாட்டை முதன்மையாகக் கருதி இந்த நிகழ்வினை ஏற்பாடு செய்திருப்பது பாராட்டுக்குரியது.

30 வருட யுத்தத்தின் பின் இந்த நாட்டில் இன்று பேசப்பட வேண்டிய விடயம் நல்லிணக்கமாகும். பௌத்தம் சகல மதங்களையும் மதித்து நடக்க வேண்டும் என்றே கூறுகின்றது.

இன்று நாட்டில் சட்டமும் நீதியும் மதிக்கப்படாத நிலையே நிலவுகின்றது. தமிழர்கள் தமக்காக தனியான பொலிஸ் சேவையைக் கோருகின்றார்கள். முஸ்லிம்களும் தனியான பொலிஸ் சேவையைக் கோரலாம். எனக்கும் ஒரு பொலிஸ் சேவையைக் கோருகிறார்கள். இப்போது மக்கள் பொலிஸ் சேவையின்றி அரசாங்கப் பொலிஸே இருக்கின்றது.

இந்த நாட்டில் சமய ரீதியான அரசியல் கட்சிகள் இருக்கக் கூடாது. இனங்களை அடையாளப் படுத்தும் அரசியல் கட்சிகளும் இருக்கக்கூடாது. எல்லா இனங்களையும் பிரதிநிதித்துவப்படுத்தும் அரசியல் கட்சிகளே இருக்க வேண்டும்.

சமய, இன ரீதியான கட்சிகள் உருவாவதனை அரசியல் சட்டம் மூலம் தடை செய்ய வேண்டும்.

நாட்டில் அனைவருக்கும் நீதி சமமாக இருக்க வேண்டும். நிர்வாகத்துறையின் தலையீட்டால் எத்தனை வழக்குகளின் தீர்ப்புக்கள் மாற்றப்பட்டன.

கோல்டன் கீ வழக்கினை நெறிப்படுத்திய சட்டமா அதிபர் ஓய்வுபெற்ற பின் செலான் வங்கியின் தலைவராக்கப்படுகிறார். நீதியை எங்கு எதிர்பார்ப்பது மதம் என்பது தனிப்பட்ட ஒருவரின் நம்பிக்கை அதனை நாம் மதிக்க வேண்டும். அமைப்பின் உதவிச் செயலாளர் முஹம்மத் ரிஸான் ஊடகச் செயலாளர் சம்மாஸ் கவுஸ் ஆகியோரும் உரையாற்றினர்.

## கிழக்கு மாகாணசபைத்...

(முன்பக்கத் தொடர்ச்சி...)

கிழக்கத் தேர்தல், முஸ்லிம் முதலமைச்சர் குறித்து எந்தக் கட்சியுடனும் பேசுவதற்கு தமது கட்சி தயாராக இருப்பதாகக் குறிப்பிட்டார்.

தேசிய காங்கிரஸ் பிரமுகர் முன்னாள் மாகாண சபை உறுப்பினருமான எம்.ஐ. உதுமாலெப்பை இது பற்றிக் குறிப்பிடுகையில், ஏனைய முஸ்லிம் கட்சிகளுடன் பேசுவது குறித்து எமக்கு எந்தவித ஆட்சேபனைகளும் இல்லை. எமது கட்சி உயர் மட்டக்குழு அது குறித்து சாதகமாக பரிசீலிக்கும் என்றார்.

இதேவேளை பிரதியமைச்சர் பசீர் சேகுதாவூதின் இந்தப் பணிகளை முஸ்லிம் அமைப்புகளும், பிரமுகர்களும் வரவேற்றுள்ளனர். இன்றைய கால கட்டத்தைப் பொறுத்தவரை மிக அத்தியவசியமான இந்தப் பணிகளுக்கு தமது பூரண ஆதவை வழங்கவுள்ளதாகவும் இவ் அமைப்புகள் தெரிவித்துள்ளன.

வெளிநாடு சென்றிருக்கும் மு.கா. தலைவர் றவூப் ஹக்கீம் நாடு திரும்பியதும் இந்த முயற்சிகள் குறித்து அவருடன் கலந்துரையாடவுள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

## ஹஜ்...

(முன்பக்கத் தொடர்ச்சி...)

எனக்கு நேரமில்லை என சிரேஷ்ட அமைச்சர் ஏ.எச்.எம். பௌஸி நவமணிக்குத் தெரிவித்தார்.

தொடர்ந்து அவர் கருத்து வெளியிடுகையில், ஹஜ்ஜுக்கான பணிகள் தொடர்ந்து மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. ஹஜ்ஜுக்கான மேலதிக கோட்டாவினை எதிர்பார்த்துள்ளோம். ரமழானுக்கு முன்கோட்டா கிடைக்குமென எதிர்பார்க்கின்றேன். கோட்டா கிடைத்ததன் பின் முகவர்களுக்கான பங்குகள் பிரித்துக் கொடுக்கப்படும். எவருக்கும் அநீதியிழைக்காது கோட்டாக்களைப் பிரித்துக் கொடுப்போம். முஸ்லிம் சமய பண்பாட்டலுவல்கள் பணிப்பாளருடன் இணைந்து இந்த நடவடிக்கைகளை முன்னெடுத்து வருகின்றேன்.

இதேவேளை ஹஜ் கடமைக்குச் செல்லும் பொருட்டு இதுவரை 6019 பேர் விண்ணப்பித்துள்ளனர். மேலும் பதிவுகளை எதிர்பார்த்துள்ளோம். புதிதாக எவரும் விண்ணப்பிக்கலாம். 25,000 ரூபா திருப்பிச் செலுத்தப்படும். முற்பணத்தை உரியவர்களுக்கு மீளக் கையளிப்போம். அத்தாட்சிக்காகவே இப்பணத்தைப் பெறுகின்றோம். இதன் மூலம் முகவர்கள் பெருந்தொகை பணத்தைப் பெற்றுக் கொண்டு அழைத்துச் செல்வதைத் தடுக்க முடியும்.

மேலதிக கோட்டாக்கள் எதுவும் கிடைக்காதவிடத்து தற்போதுள்ள பதிவின் பிரகாரம் சந்தர்ப்பம் வழங்கப்படும். இதன் பின் எஞ்சியுள்ள பதிவுகளுக்கு அடுத்த ஆண்டு முதல் வாய்ப்பு வழங்கப்படும்.

பதிவுகள் நிறைவு பெற்றதன் பின் இரண்டு முறை பதிவு செய்தோரின் பதிவுகள் குறித்து அவதானம் செலுத்தப்படும். அதன் பின் ஒன்றுக்கு மேல் உம்ரா சென்றுள்ளோரின் பதிவுகள் இரத்துச் செய்யப்படும். அதன் பிறகு உண்மையான பதிவுகள் என்ன என்பது தெரிந்து விடும் என்றும் அவர் தெரிவித்தார்.

# முஸ்லிம்கள் அதிகாரப்பகிர்வை கோரியதில்லை அதிகாரப் பகிர்வின் பங்கையே கோரினார்கள்

### அ.இ.முஸ்லிம் காங்கிரஸ் பொதுச் செயலாளர் வை.எல்.எஸ். ஹமீத்

முஸ்லிம்கள் ஒரு போதும் அதிகாரப் பகிர்வைக் கோரவில்லை, மறைந்த தலைவர் அஷ்ரப் கூட ஒருபோதும் அதிகாரப் பகிர்வைக் கோரியதில்லை. அதிகாரப் பகிர்வின் பங்கையே முஸ்லிம்கள் எப்போதும் கோரி வந்திருக்கிறார்கள் என அகில இலங்கை முஸ்லிம் காங்கிரஸ் பொதுச் செயலாளர் வை.எல்.எஸ். ஹமீத் தெரிவித்தார்.

தமிழர் போராட்டத்தில் முஸ்லிம்கள் பங்கெடுக்காமல் அதிகாரப் பகிர்வில் பங்கு கேட்டது நியாயமா? என சில தமிழ் அரசியல் தலைவர்கள், கேள்வி எழுப்பியுள்ளது தொடர்பில் அவர் வெளியிட்டுள்ள அறிக்கையிலேயே மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

இந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

கடந்த காலங்களிலும் இவ்வாறான கேள்விகள் தமிழ்த் தரப்பினரால் ஆங்காங்கே எழுப்பப்பட்டிருக்கின்றன.

தீர்வில் பங்கும் பேச்சில் ஒரு தரப்பினராகவும் பங்குகொள்ள வேண்டுமானால் முஸ்லிம்கள் தமிழர் போராட்டத்தில் பங்கெடுக்க வேண்டும் என்றும் கோரிக்கை விடுக்கின்றார்கள்.

இனப்பிரச்சினைத் தீர்வில் முஸ்லிம்களின் வகிபாகம், அவர்களது பரிணாமம் மற்றும் அவர்களது நிலைப்பாடு தொடர்பான தெளிவின்மையே இவ்வாறான கருத்துக் கூறல்களுக்கு காரணமாகின்றது என்பதை அவர்கள் முதலில் புரிந்துகொள்ள வேண்டும்.

பேச்சுவார்த்தையில் தம்மை, ஒரு தரப்பினராக உள்வாங்கக் கோருவது 'அதிகாரப் பகிர்வைக்' கோருவதற்காக அல்ல மாறாக அதிகாரப் பகிர்வில் பங்கைக் கோருவதற்காக என்பதையும் இவர்கள் புரிந்துகொள்ள வேண்டும்.

அதிகாரப் பகிர்வைக் கோராத முஸ்லிம்களுக்கு அதற்காக போராட முன்வராத முஸ்லிம்களுக்கு அதிகாரப் பகிர்வில் பங்கு கேட்பது மாத்திரம் எவ்வகையில் நியாயமானது? என்பதுதான் இன்று தமிழ்த் தலைவர்கள் இவ்வாறான கேள்விகளை எழுப்புவதற்கு காரணமாகும். எனவே, இவ்விரண்டிற்கும் இடைப்பட்ட வித்தியாசத்தை தெளிவுபடுத்த வேண்டியது. ஒரு முஸ்லிம் கட்சி என்ற வகையில் எமது கடமையாகும். அதைத் தமிழ்த் தலைவர்கள் புரிந்து கொண்டால் முஸ்லிம்களின் விட்டுக் கொடுக்கும் தன்மையை அவர்கள் புரிந்து கொள்வார்கள். இவ்வாறான கேள்விகள் எழுப்ப மாட்டார்கள்.

இன்று முஸ்லிம்கள் பல தரப்பட்ட பிரச்சினைகளை எதிர்நோக்கிக் கொண்டிருக்கின்றார்கள். குறிப்பாக முஸ்லிம்களின் வணக்கஸ்தலங்களின் பாதுகாப்பு, அவற்றின் இருப்பு கேள்விக்குறியாகின்றன. கடந்த காலங்களிலும் இவ்வாறான சவால்களை முஸ்லிம்கள் எதிர்கொண்டிருக்கின்றார்கள். இருப்பினும் யுத்த வெற்றியின் பின் பேரினவாதத்தின் பிடி சிறுபான்மையினரை நோக்கி இறுகிக் கொண்டிருக்கின்றது. இவற்றிற்கெதிராக முஸ்லிம்கள் போராட வேண்டியது காலத்தின் தேவையாகும். அதில் மாற்றுக் கருத்திற்கு இடமில்லை. ஆனால், போராட்டத்தின் வடிவமென்ன? என்பது பிரதான கேள்வியாகும்.

சுதந்திர இலங்கையின் ஆரம்ப காலங்களிலேயே தமிழ் போராட்டங்கள், ஆரம்பமாகிவிட்டன. அப்போராட்டங்களுக்கு நியாயமான காரணங்கள் இருந்தன. இருப்பினும் அப்போராட்ட வடிவம் சரியானதா? என்பதைத் திரும்பிப் பார்க்க வேண்டிய தேவை இன்று தமிழ்த் தரப்பினருக்கு ஏற்பட்டிருக்கின்றது.

கால ஓட்டத்தில் பேராட்ட வடிவம் இறுக இறுக பிரச்சினைகளும் வளர்ந்து கொண்டே சென்று முப்பது வருட யுத்தம் செய்து, இழக்க முடியாதவற்றையெல்லாம் இழந்து, இன்று 1976ம் ஆண்டு தமிழீழத் தீர்மானத்திற்கு முன்பிருந்த நிலைக்கு இன்று தமிழ்த் தரப்பு நிலைப்பாடு வந்திருக்கின்றது.

போராட்ட வடிவம் முன்னோக்கிச் சென்று தமிழீழ வடிவம் எடுத்து இன்று மீண்டும் பின்னோக்கி வந்து ஒன்றுபட்ட இலங்கைக்குள் தீர்வு, என்று 1976ம் ஆண்டிற்கு முந்தைய நிலைப்பாட்டை எடுத்தும் பிரச்சினைகள் வளர்ந்து கொண்டே செல்கின்றன.

ஆனால், முஸ்லிம்கள் இன்று போராட வேண்டி இருப்பது பேரினவாதத்திற்கெதிராக மாத்திரமா? என்ற கேள்விக்குத் தேடுகின்ற விடை, முஸ்லிம்கள் அதிகாரப் பகிர்வைக் கேட்காமல், ஏன் அதிகாரப் பகிர்வில் பங்கு கேட்கின்றார்கள். என்பதற்கான விடையாக மாத்திரமன்றி தமிழ்ப் போராட்டத்தில் ஏன் முஸ்லிம்களும் இணைந்து கொள்ள முடியாமல் இருக்கின்றது என்பதற்கும் விடையாக அமையும்.

## இப்படியும்...

(முன்பக்கத் தொடர்ச்சி...)

தெனியாய பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

தாய் வேலைக்குச் சென்றிருந்தபோதே தந்தை மகனின் கால்களை தூக்கி தரையில் தூக்கியடித்துள்ளதாக ஆரம்ப விசாரணைகளிலிருந்து தெரிய வந்துள்ளது.

கடுமையாக காயமடைந்த மகன் அருகிலுள்ளவர்களால் தெனியாய ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளான். மேலதிக சிகிச்சைக்காக சிறுவன் மாத்தறை ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளான்.

## குழந்தைகளுக்கு...

(முன்பக்கத் தொடர்ச்சி...)

அவர்களிடம் பணமில்லை. நாட்டு மக்கள் இன்று பல்வேறு துன்பங்களை அனுபவித்து வருவதாக காணி, காணி அபிவிருத்தி அமைச்சர் ஜனக பண்டார தென்னக்கோன் கவலை தெரிவிக்கின்றார்.

தம்புள்ளையில் இடம்பெற்ற பொது வைபவமொன்றில் உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

மேலும் கருத்து வெளியிட்ட அவர், நாட்டின் அனைத்துப் பிரச்சினைகளையும் கடவுளிடம் பொறுப்புச் சாட்ட ஒரு சிலர் பழகியுள்ளனர். பிரச்சினைகள் அனைத்தையும் கடவுளிடம் பாரம் சாட்டுவதாயின் அரசாங்கமொன்று அவசியமில்லையென்றும் அவர் மேலும் தெரிவித்தார்.

## கடந்த...

(முன்பக்கத் தொடர்ச்சி...)

பிரகாரம் இலங்கையின் தற்போதைய சனத்தொகை இரண்டு கோடியே இரண்டு இலட்சத்து எழுபத்து ஏழாயிரமாகும். (20,277 மில்லியன்)

இம்மதிப்பீட்டின் அடிப்படையில் நாட்டின் மொத்த சனத்தொகையில் 28.08 வீதமானோர் மேல் மாகாணத்தின் கொழும்பை அண்மித்த பகுதிகளில் வாழ்ந்து வருகின்றனர். வட மாகாணத்தின் சனத்தொகை 5.2 வீதமாகும்.

நாட்டின் அதிக சனத்தொகை கொண்ட மாவட்டம் கொழும்பாகும். மொத்த சனத்தொகையில் 23,23,824 பேர் இங்கு வசிக்கின்றனர். குறைந்த சனத்தொகையுள்ள மாவட்டம் முல்லைத்தீவாகும். 92,527 பேர் இங்கு வாழ்கின்றனர்.

அநுராதபுர மாவட்டத்திலேயே அதிகளவு சனத்தொகை வளர்ச்சி காணப்பட்டுள்ளது. 211.33 சதவீதத்தின் இவ்வளர்ச்சி எட்டப்பட்டுள்ளது. குறைந்த வளர்ச்சியை நுவரெலியா மாவட்டம் கொண்டுள்ளது. இது 0.5 வீதமாகும்.

## என்ன...

(முன்பக்கத் தொடர்ச்சி...)

மஹிந்த ராஜபக்ஷ அனைவரையும் ஆச்சரியத்தில் ஆழ்த்தினார்.

ஜனாதிபதியின் வாழ்த்தை மகிழ்ச்சியுடன் ஏற்றுக் கொண்ட முன்னாள் பாராளுமன்றச் செயலாளர் ஒரு சுவையான விடயத்தையும் ஜனாதிபதியிடம் கூறி வைத்தார்.

எதிர்க்கட்சித் தலைவர் ரணிலும் தன்னை வாழ்த்தியதாகவும் அதேவேளை தனக்கு ஒரு ஐஸ்கிரீம் தருமாறு கேட்டதாகவும் தராவிட்டால் தனது அலுவலகத்தைப் பயன்படுத்த அனுமதிக்க மாட்டேன் என்று கூறியதாகவும் ஷாம் விஜேசிங்க கூற அனைவரும் சிரித்தனர்.

அவ்வேளை ஏ.எச்.எம். அஸ்வரும் அங்கிருந்தார்.

## கிழக்கு...

(முன்பக்கத் தொடர்ச்சி...)

சபைகளுக்குமான தேர்தல் பெரும்பாலும் செப்டெம்பர் 8ஆம் திகதி நடைபெறுமென எதிர்பார்க்கப்படுகிறது. எனினும் தேர்தல் திணைக்களம் இது பற்றி இன்னும் உத்தியோகபூர்வமாக அறிவிக்கவில்லை.

இதேவேளை செப்டெம்பரில் இடம்பெறவுள்ள தேர்தலில் மூன்று மாகாண சபைகளிலிருந்தும் மொத்தம் 144 உறுப்பினர்கள் தேர்ந்தெடுக்கப்படவுள்ளனர்.

இதன்படி கிழக்கு மாகாண சபைக்கு 37 உறுப்பினர்களும், சப்ரகமுவ மாகாண சபைக்கு 44 உறுப்பினர்களும் வட மத்திய மாகாண சபைக்கு 33 உறுப்பினர்களும் தேர்ந்தெடுக்கப்படவுள்ளனர்.

வட மத்திய, சப்ரகமுவ மாகாண சபைகளுக்கு கடைசியாக 2008 ஒகஸ்ட் 23ஆம் திகதி தேர்தல் நடாத்தப்பட்டது. கிழக்கு மாகாண சபைக்கான தேர்தல் 2008. மே 10ஆம் திகதி நடாத்தப்பட்டது. 2013ஆம் ஆண்டிலேயே இம்மூன்று மாகாண சபைகளும் கலைக்கப்பட வேண்டியிருந்தது. எனினும் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் பணிப்பின் பேரில் இம்மாகாண சபைகளுக்கு முன் கூட்டியே தேர்தல் நடாத்தப்படவுள்ளது குறிப்பிடத்தக்கது.

## எந்தக்...

(முன்பக்கத் தொடர்ச்சி...)

கட்சி தயாராக இருப்பதாக அகில இலங்கை முஸ்லிம் காங்கிரஸின் தேசிய தலைவரும், அமைச்சருமான றிஷாத் பதியுதீன் நவமணிக்குத் தெரிவித்தார்.

கடந்த மாகாண சபை தேர்தலில் அரசாங்கம் வெற்றியீட்டுவதற்க அகில இலங்கை முஸ்லிம் காங்கிரஸ் முன்னின்று செயற்பட்டது. அப்போது நாட்டில் காணப்பட்ட சூழலில், கிழக்கு மாகாணத்தில் முஸ்லிம் முதலமைச்சரை பெற்றுக் கொள்ளும் போராட்டதத்தை முன்னின்று எமது கட்சி முன்னெடுத்தது.

அன்றைய நிலை, சகோதர இனத்தைச் சேர்ந்த முதலாமைச்சர் ஒருவர் தெரிவாவதற்கு எமது அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் உதவி புரிந்துள்ளதை நினைவுபடுத்துவதாக அமைச்சர் றிஷாத் பதியுதீன் கூறினார்.

கிழக்கில் தமிழ் பேசும் பெரும்பான்மையாகி இருக்கின்ற போதும், இம்முறை நடைபெறவுள்ள தேர்தலில் முஸ்லிம் முதலமைச்சர் கோஷமே சகல கட்சிகளிடமிருந்தும் வெளிப்பட்டுள்ளதாக சுட்டிக் காட்டிய அமைச்சர், இன நில்லுறவை ஏற்படுத்த இம்முறை முஸ்லிம் முதலமைச்சர் ஒருவரை பெறுவதற்கு ஏனைய கட்சிகள் விட்டுக் கொடுப்புகள் செயற்பட வேண்டும் என்றும் வேண்டுகோள் விடுத்தார்.

குறிப்பாக அகில இலங்கை முஸ்லிம் காங்கிரஸ் நடைபெற்று முடிந்த சகல உள்ளூராட்சி மன்ற தேர்தல்களிலும் நகர, பிரதேச சபைகளின் ஆட்சி அதிகாரங்களை வென்றெடுத்துள்ளன. கிழக்கில் அந்த அதிகாரங்கள் அதிகமாகவுள்ளன. இதனடிப்படையில் முஸ்லிம் முதலமைச்சர் ஒருவரை முஸ்லிம் கட்சிகள் கோறுவது நியாயமானதே.

இந்த நாட்டில் பயங்கரவாதம் ஒழிக்கப்பட்டு மீண்டும் சமாதானம் ஏற்பட வேண்டுமென்பதில் அகில இலங்கை முஸ்லிம் காங்கிரஸ், அரசாங்கத்துடன் மிக நெருக்கமாகி செயற்பட்டதை கோடிட்டு காட்டிய தேசிய தலைவரும், அமைச்சருமான றிஷாத் பதியுதீன் முஸ்லிம் முதலமைச்சர் ஒருவரே கிழக்கிற்கு தற்போது தேவைப்பாடுகள்ளவர் என்றும் கூறினார்.

இவ்விடயம் குறித்து பேச, முன்வரும் கட்சிகளுடன் இதயசுத்தியுடனும் முஸ்லிம்களின் எதிர்பார்ப்பு, அபிலாஷைகள், இருப்பு என்பன குறித்தும் கருத்தாடல்களை மேற்கொள்ளவுள்ளதாகவும்' நவமணிக்கு கூறினார்.

## முஸ்லிம்...

(முன்பக்கத் தொடர்ச்சி...)

டி.ஆர். விஜயவர்தன மாவத்தை அஞ்சல் தலைமையக கேட்போர்கூடத்தில் மர்ஹூம் அல்ஹாஜ் நூரானியா ஹஸன் அரங்கில் நடைபெறும்.

தேர்தல்கள் ஆணையாளர் மஹிந்த தேசப்பிரிய பிரதம அதிதியாகக் கலந்து கொள்வார்.

நான்குநாள் விஜயம் ஒன்றை மேற்கொண்டு இலங்கை வரும் அகில இந்திய முஸ்லிம் லீக்கின் பொதுச் செயலாளர் திருமதி பாத்திமா முஸப்பர் இலங்கையில் தங்கியிருக்கும் நாட்களில் பல்வேறு நிகழ்ச்சிகளில் கலந்து கொள்வார்.

முதலாம் திகதி கண்டிக்கு விஜயம் செய்யும் இவர், காலை 9 மணிக்கு மாவனல்லை ஆயிஷா சித்திக்கா அரபிக் கல்லூரியில் உரையாற்றுவார். அதே தினம் முற்பகல் உடுநுவர அல் மனாரல் தேசிய கல்லூரியில் நடைபெறும் நூல் வெளியீட்டு விழாவில் சிறப்புரையாற்றுவார். அதே தினம் பகல் ஒரு மணிக்கு வடதெனிய கதீஜதுல் குப்ரா மகளிர் அரபுக் கல்லூரியில் உரையாற்றுவார். இதே தினம் மாலை நான்கு மணிக்கு மடவளை மதீனா தேசிய கல்லூரி கேட்போர் கூடத்தில் நீதி அமைச்சர் ரவூப் ஹக்கீம் தலைமையில் நடைபெறும் கூட்டத்தில் உரையாற்றுவார்.

திருமதி பாத்திமா முஸப்பர் எதிர்வரும் திங்களன்று காலை தெஹிவளை அல் முஸ்லிமாத்தில் முஸ்லிம் பெண்களும் அரசியலும் என்ற தலைப்பில் உரையாற்றுவார். அதே தினம் மாலை இலங்கை ஜமாஅதே இஸ்லாமிய தலைமையகத்தில் தொழில்சார் முஸ்லிம் பெண்களுடன் இடம்பெறும் கலந்துரையாடலில் உரையாற்றுவார்.

திருமதி பாத்திமா முஸப்பர் சிறப்பான சமூக சேவைக்காக 2007ம் ஆண்டுக்கான ராஜீவ் காந்தி மூப்பனார் விருது பெற்றவர். இவர் கூட்டாக எழுதிய முதலாம் தரத்திற்கான 'சௌஜன்யமாக வாழ்தல் என்ற புத்தகம் ஒக்ஸ்போட் பல்கலைக்கழகத்தினால் அச்சிடப்பட்டு வெளியிடப்பட்டது. இதன் 40 லட்சம் பிரதிகள் விற்பனை செய்யப்பட்டுள்ளன. சகல சமயங்களதும் பெறுமானத்தை உணர்த்தும் நூலாக இது உள்ளது குறிப்பிடத்தக்கது,

ஐக்கிய அமெரிக்காவில் ஈஸ்ட் வெஸ்ட் ஹவாஸ் பல்கலைக்கழகத்தினால் பயங்கரவாதமும் பாதுகாப்பும் என்ற தலைப்பில் நடத்திய கருத்தரங்கில் பங்குபற்றிய 14 பேரில் இவர் குழுவின் மிகச் சிறந்தவராக தெரிவு செய்யப்பட்டார்.

இவர், இந்திய பாராளுமன்றத்தினை 18 வருடமாக பிரதிநிதித்துவப்படுத்திய முன்னாள் தமிழக முஸ்லிம் லீக்கின் தலைவரான சிராஜுதீன் மில்லத் ஏ.கே.ஏ. அப்துல் சமதின் புதல்வியாவார். இவர் தர்ஜுமதுல் குர்ஆனை தமிழில் மொழி பெயர்த்த அல்லாமா அஹமத் பாக்கவியின் பேத்தியுமாவார்.

தனது கணவரான வேல்ட் டிரவல்ஸ் டுவர்ஸ் நிறுவனத்தின் முகாமைத்துவப் பணிப்பாளர் அஹமட் முஸப்பருடன் இங்கு வருகிறார். ஸ்ரீலங்கா முஸ்லிம் மீடியா போரத்தின் அழைப்பிலே இவர்கள் இலங்கை வருகின்றார்கள்.

பாராளுமன்ற உறுப்பினரான ஏ.எச்.எம். அஸ்வர், மானா மக்கீன், தாஹா முஸம்மில், ஏ.எல்.எம். சத்தார், ஆயிஸா ஜுனைதீன், ஹாபிஸ் எஸ், முஹம்மது ஹனீபா, என். நடராஜா, எஸ். பியசேன, நூருல் ஐன் நஜ்முல் ஹுசைன் ஆகிய மூத்த ஊடகவியலாளர்கள் ஒன்பது பேர் இம்மாநாட்டில் விருதும் பொற்கிழியும் வழங்கி கௌரவிக்கப்படவிருக்கிறார்கள்.

## திரைக்குப் பின்னால்...

(4ஆம்பக்கத் தொடர்ச்சி...)

பால் பொருள் உற்பத்தி நிலையம், உள்ளிட்ட பல்வேறு கட்டிடங்கள் திறந்து வைக்கும் நிகழ்வில் அமைச்சர் றிஷாத் கலந்துகொண்டார். பாராளுமன்ற உறுப்பினரும், துனுக்காய் அபிவிருத்தி குழுவின் தலைவருமான ஹூனைஸ் எம்.பி.யினால் விடுக்கப்பட்ட அழைப்பின் பேரிலேயே அமைச்சர் இங்கு வருகை தந்தார். பல திறப்பு விழாக்களில் கலந்து கொண்ட அமைச்சர், முல்லைத்தீவு மாவட்டத்தின் கிராமமொன்றில் நிர்மாணிக்கப்பட்ட கட்டிடத் திறப்பு விழாவில் கலந்துகொண்ட போது, கிராம அபிவிருத்தி சங்கத் தலைவர் உரையாற்றினார். அவருக்கு 70 வயது இருக்கும், அமைச்சரைப் பார்த்து ஐயா எமது மாவட்டத்துக்கு அபிவிருத்தி திட்டங்கள் வருகின்றதென்றால் அது உங்களின் தயவால் தான், வேறு யாரும் எங்களை ஏறெடுத்துக் கூட பார்ப்பதில்லை, எமது கிராமத்திற்கு மின்சாரம் இல்லை, அதனை பெற்றுத் தந்தால் எமது கிராமத்து பிள்ளைகள், நன்றாக கல்வி கற்பர். அவர்கள் அதன் மூலம் உயர் பதவிகளை அடைவார்கள் என்றால் அது உங்களுக்குத் தான் நன்மையாக இருக்கும் என்றார். உடனடியாக அமைச்சர் றிஷாத், கணகரத்தினம் ஐயாவிடம் இது குறித்து விபரங்களை கோரியதுடன், இலங்கை மின்சார சபை அதிகாரியின் கவனத்திற்கும் இதனைக் கொண்டுவந்தார்.

### மும்மொழியில் பேசிய முல்லை சிறார்களின் முன்மாதிரி

துனுக்காய் பிரதேச செயலகப் பிரிவில் உள்ள புகழேந்தி நகர் முன்பள்ளி பாடசாலை திறப்பு விழாவில் அமைச்சர் கலந்து கொண்டார். அவர் சிறார்களின் வரவேற்பு நடனம், மற்றும் கலை நிகழ்ச்சிகளை இமைகொட்டாமல் ரசித்துக் கொண்டிருந்தார். அப்போது சிறுமியொருத்தி சிங்களத்தில் வந்திருக்கும் அதிதிகளை விளித்து வரவேற்புரை நிகழ்த்தினார். அதே போல் ஆங்கிலத்திலும், தமிழிலும் உரையாற்றிய போது, அமைச்சர் உள்ளிட்ட அதிதிகள் ஆச்சரியப்பட்டனர். இவ்வளவு திறமைகள் உள்ளோர் எமது மாவட்டத்தில் இருக்கின்றார்கள்தானே என்று பேசிக் கொண்டனர். அப்போது அங்கிருந்த 50 வயது மதிக்கத்தக்க ஒருவர் எம்மால் கூட ஒரு வசனத்தை கூட சிங்களத்தில் பேச முடியாமல் போனதே என்று கைசேதப்பட்டார். பிள்ளைகளின் தலையினை கோதிவிட்டு தமது வாழ்த்துக்களை தெரிவித்தார் அமைச்சர் றிசாத்.

### முதலமைச்சர் பேட்டியின் கோரிக்கையை மதிக்காது வட மத்திய மாகாண சபை கலைப்பு என்கிறது ஜே.வி.பி.

மாகாண சபைகள் கலைக்கப்படுவது தொடர்பாக கடந்த திங்களன்று நடைபெற்ற மக்கள் விடுதலை முன்னணி அரசியல் உயர்பீடக் கூட்டத்தில் ஆராயப்பட்டது. அரசு மாகாண சபைகளைக் கலைக்கப் போகின்றது அரசுக்குள் குழப்ப நிலை உருவாகியுள்ளது. அரசின் வீழ்ச்சி ஆரம்பிக்கத் தொடங்கியுள்ளது. ஹேமகுமார நாணயக்காரவின் ராஜினாமா அதனையே உணர்த்துகின்றது. வடமத்திய மாகாண முதலமைச்சர் மாகாண சபையைக் கலைக்க வேண்டாம் எனக் கேட்டுள்ளார். அதனைக் கணக்கிலெடுக்காது ஜனாதிபதி மாகாண சபைகளைக் கலைக்கப் போகிறார் என விஜித ஹேரத் எம்.பி. கூறினார். இது தேர்தல் நடத்தும் நேரமல்ல. வட மத்திய மாகாணத்தில் விவசாயிகள் மிக பரிதாபகரமான நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளார்கள். அவர்களது பயிர்கள் சேதத்துக்குள்ளாகியுள்ளன. அதற்கு தீர்வு தேவை பொருட்களின் விலை மலை போல் உயர்ந்துள்ளன. சட்டம் நாயிற்குச் சென்றுள்ளது. அவற்றைக் கவனத்திலெடுக்காது தேர்தலுக்கு 150 கோடி ரூபாய் செலவு செய்து தேர்தலை நடத்தப் போகிறார்கள். உண்மையான மக்கள் பிரச்சினைகளைத் தீர்க்காது பிரச்சினைகளைத் திசை திருப்ப முயற்சிக்கிறார்கள் என கட்சியின் தலைவர் சோமவன்ச அமரசிங்க கூறினார்.

# தகவல் தொடர்பாடல் துறையில் பாரிய வலையமைப்பு விஸ்தரிப்பு



இலங்கை தேசிய மொபைல் சேவை வழங்குனரான மொபிடெல் இலங்கையில் தகவல் தொழில்நுட்ப மாற்றும் உருவாக்க உறுதி பூண்டுள்ளது. தற்போது மொபைல் ஊடாக பேசுதல் மற்றும் குறுந்தகவல் அனுப்புதல் மாத்திரமின்றி அவற்றைவிட பல்வேறு விடயங்களுக்கு மனித வாழ்க்கையில் இக்கையடக்கத் தொலைபேசிகள் பயன்படுத்தப்படுகின்றமை அதன் முதிர்ச்சியை குறிக்கின்றது.

அபிவிருத்தியடைந்துவரும் நாடு என்ற அடிப்படையில் இலங்கையும் மக்கள் தேவைக்கமைய இப்போக்கில் பங்காளியாக இருப்பதையிட்டு நாம் பெருமையடைகிறோம். இச்சூழலை மூலோபாயமாக கொண்டு இலங்கையின் தேசிய மொபைல் சேவை வழங்குனரான மொபிடெல் நாடு முழுவதும் உள்ள தமது சேவை தள நிலையங்கள் மூலம் தகவல் தொடர்பாடல் துறையில் மாற்றத்தை ஏற்படுத்த உறுதி பூண்டுள்ளது.

இங்கு கருத்து தெரிவித்த மொபிடெல் பிரதான நிறைவேற்று அதிகாரி லலித் டி சில்வா 'உலக தரம் வாய்ந்த தொழில்நுட்பத்தினை கொண்ட மிகச்சிறந்த சேவையினை வழங்குவது எமது தலையாய கடமையாகும். இதன் மூலமாக இலங்கையை ஆசியாவின் தகவல் தொடர்பாடல் துறையில் கேந்திர நிலையமாக மாற்றும் அரசாங்கத்தின் திட்டத்திற்கு உறுதுணையாக நாம் எதிர்பார்க்கின்றோம். அதற்கமைய 1000க்கும் மேற்பட்ட பிரதேசங்களில் எமது 2G, 3G தள நிலையங்களை மிக குறுகிய காலப்பகுதியில் விரிவாக்கம் செய்துள்ளோம் என்பதை பெருமையுடன் அறியத்தருகின்றோம். உள்நாட்டு யுத்தத்தின் பின்னர் எமது சேவைகளை யாழ். குடாநாட்டிலும் விஸ்தரித்துள்ள மொபிடெல் வட, கிழக்கு மாகாணங்களுக்கும் தமது சேவையை விஸ்தரித்துள்ளது.

'மொபிடெல் நிறுவனத்தின் சிரேஷ்ட பொது முகாமையாளர் ரசன்த ஹெட்டிதான் திரிகே கருத்து கூறுகையில், 'எமது பொறியியல் மற்றும் நடவடிக்கை தரங்கள் மிகவும் சிறந்த தரத்தில் உள்ளன. அவை எந்த சவாலுக்கும் எற்றவாறு முகங்கொடுக்க கூடியவை எமது விரிவாக்கற் திட்டம் 70 துணை நிறுவனங்களையும், 200 பொறியியளாலர்களையும். 1500 இற்கு மேற்பட்ட திறன்வாய்ந்த தொழிலாளர்களையும் கொண்டது. மொபிடெல் ஏற்கனவே வருங்கால தலைமுறை அபிவிருத்தியை எட்டியுள்ளது.

இது மொபிடெல்லின் ஆற்றலுக்கான சாதனையாகும். நாம் உற்பத்தியாற்றல், சிக்கனம், பாதுகாப்பு மற்றும் சுமூகமான தொழில் சூழல் என்பவற்றில் நாம் கவனம் செலுத்துகிறோம். மொபிடெல் மேற்கொள்ளும் அபிவிருத்திகள் நாட்டின் அபிருத்திக்கு என்றும் துணை செய்யும் என தெரிவித்தார்.

# குச்சவேலியில் 'ஜங்கிள் பீச் ஹோட்டல்' திறப்பு



இந்த நாட்டின் சுற்றுலாத்துறை கைத்தொழிலில் புதிய அத்தியாயத்தை ஏற்படுத்தும் வகையில் திருகோணமலை குச்சவேலி சுற்றுலா அபிவிருத்தி வலயத்தில் புதிதாக நிர்மாணிக்கப்பட்ட முதலாவது சுற்றுலா ஓய்வு விடுதியான 'ஜங்கல் பீச் ஹோட்டல்' பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் பஷில் ராஜபக்ஷவினால் அண்மையில் திறந்து வைக்கப்பட்டது.

இது மூன்று தசாப்தகால பயங்கரவாத யுத்தத்தின் பின்னர் திருகோணமலை மாவட்டத்தில் சுற்றுலா அபிவிருத்தி வலயத்தில் முதன் முறையாக ஆரம்பிக்கப்பட்ட சுற்றுலாத்துறை ஹோட்டலாகும். இந்த 'ஜங்கல் பீச்' ஓய்வு விடுதியை அமைப்பதற்காக 750 மில்லியன் ரூபா செலவிடப்பட்டுள்ளது. மொகுசான 48 சுற்றுலா பங்காளக்களுடன் கூடிய இந்த ஹோட்டல் 10 ஏக்கர் நிலப்பரப்பில் அமைக்கப்பட்டுள்ளது. மிகவும் பிரபலமான நிலாவெளி கடற் கரைக்கு அண்மையதாக இது அமைக்கப்பட்டுள்ளது. இந்த ஹோட்டல் அமைக்கப்பட்டதன் காரணமாக பிரதேசத்தின் மக்களுக்கு நேரடியாகவும் மறைமுகமாகவும் 225 தொழில் வாய்ப்புக்கள் கிடைத்துள்ளன.

பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் பஷில் ராஜபக்ஷ குறிப்பிடுகையில், இந்த ஓய்வு விடுதி அமைப்பதற்கான அத்தியாவசிய பொருட்கள் மட்டும் இறக்குமதி செய்யப்பட்டன. ஏனைய அனைத்துப் பொருட்களும் உள்நாட்டில் பெறப்பட்டு இது அமைக்கப்பட்டுள்ளமை பாராட்டக்கூடிய விடயமாகும். வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகளின் சிறந்த ஈர்ப்பை பெற்றுக்கொள்ள இதனால் முடியும் என்று குறிப்பிட்டார்.



இலங்கை ஏற்றுமதி அபிவிருத்திச் சபையினால் பொலன்னறுவை மாவட்டத்தின் அலங்கார மீன் வளர்ப்பாளர்களை ஊக்குவிக்கும் முகமாக பன்முக உதவிகள் வழங்கப்பட்டன. பயனாளர் ஒருவருக்கு கைத்தொழில் வர்த்தக அமைச்சர் ரிசாத் பதியுதீன் நீரிறைக்கும் இயந்திரம் வழங்குவதையும், பொலன்னறுவை மாவட்ட அரசாங்க அதிபர், இலங்கை ஏற்றுமதி அபிவிருத்திச் சபையின் நிறைவேற்றுப் பணிப்பாளர் கலாநிதி யூசுப் கே. மரைக்கார், பணிப்பாளர் நாயகம் சுஜாதா வீரக்கோன் ஆகியோர் அருகில் நிற்பதனையும் காணலாம்.

# முழுமையான முதலீட்டு வங்கிச்சேவை செயற்பாடுகளை ஆரம்பிக்கும் NDB குழுமம்



NDB குழுமமானது, புதிய கூட்டாண்மை அடையாளத்தின் கீழ் கெப்பிட்டல் டிவலப்மன்ட் அன்ட் இன்வெஸ்ட்மன்ட் கம்பனி பீ.எல்.சியை மீளறிமுகப்படுத்துவதன் மூலம் இலங்கையின் நிதியியல் துறையில் புதிய சகாப்தம் ஒன்றினை படைத்துள்ளது. அதேநேரம் இந்நிறுவனத்தை NDB கெப்பிட்டல் ஹோல்டிங்ஸ் பீ.எல்.சி. என மீளப் பெயர் மாற்றம் செய்யும் நடவடிக்கையிலும் ஈடுபட்டுள்ளது.

மூலதனச் சந்தையிலுள்ள நிபுணர்கள் குழுவொன்றினது தலைமையில் இயங்கும் இந்நிறுவனம், முழுமையான முதலீட்டு வங்கியியல் சேவை செயற்பாடுகளை மேற்கொள்ளவுள்ளது. அத்துடன் தமது வர்த்தகத்தை முழுமையடையச் செய்யும் விதத்தில் இணைத்துச் சேவைத் தொடர் ஒன்றினையும் கொண்டுள்ளது.

இவற்றுள் கட்டண அடிப்படையிலான முதலீட்டு வங்கியியல் மற்றும் கூட்டாண்மை ஆலோசனை சேவைகள், சொத்து முகாமைத்துவம், தனியார் பங்கு மற்றும் உபாய ரீதியிலான முதலீடுகள் உட்பட பங்குத் தரகு மற்றும் நிதிய அடிப்படையிலான செயற்பாடுகள் போன்ற சேவைகள் உள்ளடங்குகின்றன. இந்த முன்னெடுப்புக்கள் அனைத்தும் அதன் துணை நிறுவனங்களாக திகழும் NDB இன்வெஸ்ட்மென்ட் பேங் லிமிட்டட் (NDBIB), NDB ஸ்டொக் புரோக்கர்ஸ் பிரைவேட் லிமிட்டட் (NDBS) மற்றும் NDB அவிவா வெல்த் மெனேஜ்மென்ட் லிமிட்டட் (NAWM) போன்றவற்றினால் மேற்கொள்ளப்படுகின்றன. இதற்கு மேலதிகமாக, பங்களாதேஷில் முதலீட்டு வங்கியியல் சேவைகளை வழங்கிவரும் NDB கெப்பிட்டல் லிமிட்டட் நிறுவனத்தில் NDB மேற்கொண்டுள்ள முதலீட்டினை இந்தக் கம்பனியினால் எதிர்காலத்தில் உள்ளீர்த்துக் கொள்வதற்கும் உத்தேசிக்கப்பட்டுள்ளது. அதுமட்டுமன்றி AVIVA NDB இன்சூரன்ஸ் பீ.எல்.சி. நிறுவனத்திலும் இக்கம்பனி உபாய ரீதியிலான முதலீட்டினை மேற்கொண்டுள்ளது.

நிறுவனத்தின் தலைவர் அசோக் பத்திகே கருத்துத் தெரிவிக்கையில், 'மூன்று தசாப்த கால யுத்தம் முடிவுக்கு கொண்டுவரப்பட்டதைத் தொடர்ந்து இலங்கையின் பொருளாதாரம் மீண்டும் முன்னைய உறுதியான நிலைக்கு வந்துள்ளது. இது தனியார்துறையினருக்கு ஏராளமான வாய்ப்புக்களை உருவாக்கியுள்ள அதேநேரம், அரசாங்கம் பாரியளவிலான உட்கட்டமைப்பு அபிவிருத்தித் திட்டங்களை முன்னெடுத்துச் செல்கின்றது என்றார்.

குழுமத்தின் பிரதம நிறைவேற்று அதிகாரியான ரஸல் டீ மெல் கூறுகையில், 'நாட்டின் அபிவிருத்தி செயற்பாடுகளில் தனியார் துறையானது முக்கிய பங்கினை வகிக்குமென எதிர்பார்க்கப்படுகின்றது. பாரம்பரிய முறைமையில் அமைந்த வங்கி கடன்களினால் நிதியிடப்பட முடியாத அளவிலான பாரிய மூலதன முதலீடுகள் கூட்டாண்மை துறைக்கு அவசியமாகவுள்ளன. அவ்வாறான செயற்றிட்டங்கள் மாறுபட்ட வடிவத்தில்/ மூலங்களில் இருந்து கிடைக்கும் நிதியிடலை வேண்டி நிற்கின்றன. இந்நிலையில் கூட்டாண்மைதுறைக்கு தேவையாகவுள்ள நிதியிடலுக்கான வழிகளை ஏற்படுத்திக் கொடுப்பதில் மூலதன சந்தையானது முக்கிய பங்கினை வகிக்க முடியும்' என்றார்.

நிறுவனத்தின் பிரதம நிறைவேற்று அதிகாரியும் பணிப்பாளருமான வஜிரகுலதிலக்க இது தொடர்பில் கருத்துத் தெரிவிக்கையில், 'முதலீட்டு வங்கியியல், சொத்து முகாமைத்துவம், பங்குத் தரகு, தனியார் பங்கு மற்றும் காப்புறுதி போன்றவற்றை உள்ளடக்கிய தனித் சிறப்பு மிக்க சேவைத் தொடரினை நாம் கொண்டுள்ளமையினால், கூட்டாண்மை துறையினரும் மூலதன சந்தையினரும் அதிகரித்துச் செல்லும் தேவைகளை எம்மால் நிவர்த்தி செய்வதற்கு இயலுமாகவுள்ளது. அதிகமான எமது வர்த்தக முயற்சிகள், தத்தமது துறைசார் சந்தையில் முதன்மையான செயற்பாட்டாளராக உள்ளன. அத்துடன் எமது முதலீட்டு வங்கியியல் வர்த்தகத்தை மேலும் பூரணத்துவமாக்கக் கூடிய உபாய ரீதியிலான முதலீடுகளை நாம் முனைப்புடன் தேடிய வண்ணம் இருக்கின்றோம் என்றார்.

# புத்தம்புதிய ஜீப்புடன் CDB அதிர்ஷ்டம் 2012/13



சிட்டிசன்ஸ் டிவலப்மன்ட் பிஸ்னஸ் பினான்ஸ் பீஎல்சி (CDB), இன்று அதன் 'CDB அதிர்ஷ்டம் 2012/13' பரிப்போட்டியினை அங்குரார்ப்பணம் செய்துள்ளது. வருடத்துக்கு மூன்று முறை இடம்பெறும் இப்பரிசுப் போட்டி மூலம் ஒருவர் சேமிப்பது மாத்திரமல்லாது, அதிகமாக வெற்றிபெறவும் வருமானம் ஈட்டவும் வாய்ப்பு வழங்கப்படுகின்றது.

இத்திட்டத்தின் கீழ், வாடிக்கையாளர்கள் CDB நிலையான வைப்பு கணக்கொன்றில் ரூ. 10,000 அல்லது CDB சேமிப்பு கணக்கில் ரூ. 5,000 வைப்பிலிட்டு, நான்கு மாதங்களுக்கு ஒரு முறை புத்தம் புதிய ஜீப்பை வெல்லும் வாய்ப்பை பெறுவார்கள்.

'மேலதிகமாக வைப்பிலிடப்படும் உங்கள் ஒவ்வொரு ரூ. 10,000 மற்றும் ரூ. 5,000க்கும் வெற்றி வாய்ப்புகள் அதிகரிக்கும். அதுமாத்திரமல்லாது, 'CDB அதிர்ஷ்டம்' உங்கள் முதலீட்டுக்கான அதிகூடிய பலனைப் பெற்றுக் கொடுப்பதுடன், உங்கள் கனவுகளையும் நனவாக்க வழிவகுக்கும்' என பிரதி சந்தைப்படுத்தல் முகாமையாளர் இளங்கோவன் கார்த்திக் தெரிவித்தார்.

'CDB அதிர்ஷ்டம் 2011/12' பரிசுப் போட்டியில் புத்தம்புதிய ஜீப்களை வென்ற அதிர்ஷ்டசாலிகள் வெள்ளவத்தையைச் சேர்ந்த எஸ். கே. கணேசன், அநுராதபுரத்தைச் சேர்ந்த யுதீர சாலிந்த மற்றும் வத்தளையைச் சேர்ந்த பீ.கே.ஈ. ஜே. றொட்ரிகோ ஆவார்கள்.

# 'கேன்ஸ் லயன்ஸ்' விருது இலங்கைக்கு



லியோ பெர்ணெற் சொலியூஷன்ஸ் இன்கோர்ப்பரேட்டட், பெருமைவாய்ந்த கேன்ஸ் லயன்ஸ் சர்வதேச படைப்பாற்றல் விழா நிகழ்வில், 'காகிதக் கொடி' என்ற முகவர் நிலையத்தின் தேசியக் கொடி சார்ந்த கருத்துருவாக்க முனைப்பினை சமர்ப்பித்தமைக்காக சிறந்த நுகர்வோர் உள்ளீர்ப்புப் பிரிவில் 'மெட்டல்' விருதினை பெற்றுக்கொண்டது.

குறித்த தேசியக் கொடி முனைப்பானது ஸ்டார்கொம் இன் பங்காளித்துவத்துடன், லியோ பெர்ணெற் ஸ்ரீலங்காவினால் இலங்கையில் உள்ளோருக்கு தேசிய உணர்வினை ஊட்டும் வகையில் இலங்கையின் தேசிய தினத்தன்று, தேசியப் பத்திரிகை ஒன்றினை தேசியக் கொடியாக்கியதன் மூலம், நாட்டு மக்கள் அனைவரையும் முன்னெப்போதும் இல்லாத வகையில் உள்ளீர்த்தலுடன் முனைவாக்கப்பட்டது.

கேன்ஸ் லயன்ஸ் 59ஆவது விழா நிகழ்வு 90 நாடுகளிலிருந்து கலந்து கொண்ட 11,000 பிரதிநிதிகளுடன் கருத்துருவாக்க சமூகத்தினர் அனைவரையும் ஒரே இடத்தில் ஒன்றிணைத்து வெகுவிமர்சையாக இடம்பெற்றது.

# மட்டக்களப்பில் சர்வதேச வர்த்தக கண்காட்சி

## BITE 2012




இயற்கை எழில்வாய்ந்த கிழக்கு மாகாண தலைநகரான மட்டக்களப்பில் மாபெரும் சர்வதேச வர்த்தக் கண்காட்சி (BITE 2012) எதிர்வரும் ஒக்டோபார் மாதம் 12ஆம், 13ஆம், 14ஆம் திகதிகளில் நடைபெற இருக்கின்றது. முதலீட்டாளர்கள், வியாபாரத் துறையினர், பாவனையாளர்கள் ஆகியோர் நேருக்குநேர் சந்தித்து, முதலீட்டு மற்றும் வியாபார வாய்ப்புக்களை அறிந்து கொள்வதற்கான ஒரு முக்கிய களமாக ஆவலுடன் எதிர்நோக்கப்படும் இக்கண்காட்சி, கிழக்கு மாகாணத்திற்கும் வெளியுலகத்திற்கும் இடையிலான வர்த்தகத் தொடர்புகளின் நுழைவாயிலாகவும் அமையவிருக்கின்றது.

மட்டக்களப்பில் அரசாங்கத்தின் பூரண ஆதரவுடனும் முக்கியமான கைத்தொழில், அரசசார்பு மற்றும் அரச சார்பற்ற அமைப்புக்களின் பங்குபற்றுதலுடனும் இடம் பெறவிருக்கும் மாபெரும் வர்த்தகக் கண்காட்சியாகும். லங்கா எக்ஸிபிஷன் அன்ட் கொன்பரன்ஸ் சேர்விசஸ் பிறைவேட் லிமிட்டட் (LECS) பல நிறுவனங்களுடன் இணைந்து இக்கண்காட்சியை கூட்டாக ஒழுங்கு செய்துள்ளது.









Printed and Published by Freelanka Media Ltd. #156, Hospital Road, Kalubowila, Dehiwala. on 01st July 2012